RR 4.8.89

பதினாறு பக்கங்கள் — விலை ரூபா நான்கு

நிரு ரியுசன் சென்ரர்
O/L
பகல்நேர வகுப்புக்கள்
ஆரம்பமாகின்றன
மாணவர்கள் விண்ணப்பங்களை காலை 6 மணிமுதல் பெற்றுக் கொள்ளலாம்.
- நிர்வாகி

# வார முரசொலி

NIRU TUITION CENTRE
KONDAVIL
91 A/L ரிவு II
கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

முரசு 03 ஒலி 180 ஞாயிற்றுக்கிழமை 09 - 07 - 1989 ஆனி 25 துல்ஹஜ் 5

● வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டை இலங்கை பகிஷ்கரித்துள்ளதால்

# ‘சார்க்’ அமைப்பில் இலங்கையை சேர்ப்பதற்கு பங்களாதேஷ் முயற்சி

## பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் இந்தியா சென்று இலங்கை வந்தார்

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள உறவு விரிசலால் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளிலும் (சார்க்) பிளவு ஏற்படாது தடுப்பதற்கு சார்க்அமைப்பின் அங்கத்துவநாடான பங்களாதேஷ்நடவடிக்கை எடுத்துள்ளது.**

அண்மையில் பாகிஸ்தானில் நடைபெறவிருந்த சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டை இலங்கை பகிஷ்கரித்ததால் இம்மாநாடு நடைபெறுதது தெரிந்ததே.

இதனையடுத்து பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் இஸ்லாம் மஹ்மூத் இலங்கையை 'சார்க்' அமைப்பில் சேர்த்துக் கொள்ளும் நோக்குடன் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்துள்ளார்.

இவர் வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன ஜனாதிபதி பிரேமதாஸ ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார். பேச்சுவார்த்தைகளின்போது சார்க் அமைப்பின் எதிர்காலம். குறித்தும் இலங்கை பகிஷ்கரிப்பு குறித்தும் ஆராயப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷ் வெளிவிவ

— 16 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியிடம் சங்கர் தெரிவித்தார்

## பாராளுமன்றம் செல்வதற்கு ஈரோஸ் உறுப்பினர்கள் முடிவு

தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்லாது பகிஷ்கரித்து வந்த ஈரோஸ் இயக்க பதின்மூன்று உறுப்பினர்களும் தமது பாராளுமன்ற பகிஷ்கரிப்பைக் கைவிடத் தீர்மானித்துள்ளது.

இம்மாதம் இருபத்தோராம் திகதி வெள்ளிக்கிழமை இவர்கள் பாராளுமன்றத்தில் தமது பதவிகளை ஏற்றுக்கொள்வார்கள் என நேற்று முன்தினம் ஜனாதிபதி பிரேமதாஸவிடம் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் விடுத்த நான்கு அம்ச கோரிக்கைகளும் இலங்கை அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதால் தாம் பாராளுமன்றம் செல்ல விருப்பதாக ஈரோஸ் பிரமுகர் சங்கர் தெரிவித்துள்ளார்

## வேலைக்கு வருவதை தடுத்தால் ஜே. வி. பி மீது நடவடிக்கை

அரசாங்கம் அறிவித்ததையடுத்து நாளை அரசாங்க ஊழியர்கள் வேலைக்குத்திரும்புவதையும், போக்குவரத்துச் சபை ஊழியர் வேலைக்குத்திரும்புவதையும் ஜே. வி. பி. இயக்கத்தினர் தடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சில் உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றுள்ளது ஆயுதப்படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை தெற்கின் சில

— 16 ஆம் பக்கம் பார்க்க

## திருமலையிலிருந்து மா ஏற்றிவர 3 வர்த்தகர்களுக்கு அனுமதி

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று தனியார் வர்த்தகர்களுக்கு திருகோணமலை. பிறிமா ஆலையிலிருந்து நேரடியாக கோதுமை மாவை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் முதல் கட்டமாக திருமலையிலிருந்து ஒன்றேகால் லட்சம் கிலோ கோதுமை

—16 ஆம் பக்கம் பார்க்க

## ஹஜ் விடுமுறை வெள்ளிக்கிழமை

ஹஜ்ஜுப் பெருநாள் விடுமுறை பதினைன்காம் திகதி வெள்ளிக்கிழமையே என அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் இது பதின்மூன்றும் திகதி வியாழக்கிழமை என்றே அறிவிக்கப்பட்டிருந்தது.

## வேட்டுக்கள் மத்தியிலும் வேட்டைத் திருவிழா

கரவெட்டி மாதா கோவிலுக்கு அருகாமையில் நேற்று முன்தினம் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களையடுத்து அருகாமையிலுள்ள முங்கோடை முருகனலயத்தில் குழுமியிருந்த மக்கள் பக்திப்பரவசத்துடன் மெய் மறந்து காணப்பட்டனர். இந்த ஆலயத்தில் சம்பவதினம் வேட்டைத்திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. பெருந்தொகையான இளைஞர்களும், யுவதிகளும், பெரியோர்களும் காணப்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## அரச ஆஸ்பத்திரிகளில் நிலவும் ஊழல்களை நீக்க குழு நியமனம்

(ஆர். ரி. ரட்ணம்)

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நிலவும் ஊழல், திருட்டு மற்றும் குறைபாடுகள் குறித்து ஆராய்வதற்கென கமிட்டி ஒன்று அமைக்கப்படும்.

சுகாதார, மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் இதற்கான முடிவை எடுத்திருக்கிறார்.

அரசாங்கசேவை ஐக்கிய தாதிமார் சங்கம் சமர்ப்பித்த முப்பத்தைந்து கோரிக்கைகள் தொடர்பாக அமைச்சருடன் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றபோது அவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

தாதிமாருக்கான கல்வியை தற்போதைய கால கட்டத்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் ரயில் வந்தது யாழ்.குடாவில் தட்டுப்பாடு நீங்கும்

அனுராதபுரத்திலிருந்து சரக்கு ரயிலொன்று நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. இந்த ரயிலில் எரிபொருட்களும், உணவுப் பொருட்களும் இங்கு கொண்டுவரப்பட்டன,

தென்பகுதி நிலவரம் காரணமாக யாழ்ப்பாணத்திற்கான சரக்கு ரயில் சேவை கடந்த சில வாரங்களாக இடம்பெறவில்லை.

இந்த சரக்கு ரயிலில் இங்கு கொண்டுவரப்பட்ட எரிபொருட்கள் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் முகவர்கள் மூலம் பாவ

— 16 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகர வர்த்தக ஊழியருக்கு ஆயிரத்து'ஐந்நூறு ரூபா சம்பளம்

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் கடமைபுரியும் சகல ஊழியர்களுக்கும் ஆயிரத்தி ஐந்நூறு ரூபாவுக்கு குறையாத மாதச் சம்பளம் வழங்கப்படல் வேண்டுமென யாழ். வர்த்தக ஊழியர் சங்கம் சகல வேலைகொள்வோரையும் கோரியுள்ளது.

இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் நேற்றுக் காலை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

ஆண், பெண் என்ற வேறுபாடின்றி ஆறு மாத காலத்திற்கு மேல் சேவை செய்த சகல ஊழியர்களையும் நிரந்தரமாக்கல் வேண்டும்.

சாய்ப்புச் சட்டத்திற்

— 16-ம் பக்கம் பார்க்க

## தெற்கில் தபால் வாரம்; தமிழ் பகுதிக்கு இல்லை

அரசாங்கம் அண்மையில் தபால் வாரத்தை நாடு முழுவதும் அமுல் செய்தது. தபால் தந்தி தொடர்புகள் அமைச்சர் அலிக் அலுவிகார உட்பட பல தபால் உயர் அதிகாரிகள் பல இடங்களில் தபால் நிலையங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். இந்தப் பணிகளின் போது பல தபால் நிலையங்களை அப் பரவு செய்தும், பழுதான பெட்டிகள் யன்னல்கள் கதவுகள் போன்றன திருத்தம் செய்யப்பட்டும் தற்போது புதிய மெருகுடன் காட்சியளிக்கின்றன. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் இவ்வாறான நிகழ்ச்சிகள் எதுவுமே நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இப் பகுதிகளிலுள்ள பல தபால் நிலையங்கள் அண்மைக் கால சம்பவங்களால் சேதமடைந்த நிலையில் இன்னும் காணப்படுகின்றன. இது பற்றி பொதுமக்களும் அதிகாரிகளும் பல தடவைகள் தெரிவித்தும் பயனில்லை.

## சிறு விளம்பரம்

**சோதிடம்**

உங்களுக்கு அதிர்ஷ்டகரமான திருமணப் பொருத்தம் தேவையா? உங்களது விபரங்களுடன் சீதனம் மற்றும் இதர விபரங்களிற்குபதிந்து வைத்தால் ஒரு மாதத்துள் திருமணம் செய்து வைக்கப்படும். அன்புஜீ சோதிட நிலையம், கொக்குவில் - ஆனைக்கோட்டை ரோட், உயரப்புலம். 07051

**புத்தகம்**

இலங்கைவானொலிதமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாவது தொகுப்பு தமிழுக்கு ஒரு புதுமையான நூல். நடிப்பதற்கு 9 நாடகங்கள். அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதிய "கெட்டிக்காரர்கள்" ரூபா 25. 07078

**கல்வி**

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும். 22 வருட அநுபவமுள்ள ஆசிரியரினல் இரு மாதத்திற்குள் விசேஷ சித்திக்கு வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. 07085

## இன்று

திருநெல்வேலி சைவ விருத்தியா விருத்திச்சங்கத்தின் நிறைவாழ்வு இல்லமாணவரின் இல்ல போட்டிகளான சேர் பொன். இராமநாதன் இல்லம், இந்து போர்ட் இராஜரட்ணம் இல்லம், எஸ். ஆர். கனகநாயகம் இல்லம், ஆகியவற்றின் முதல் நிகழ்ச்சியான திருக்குறள் மனனப் போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வித்துறையின் கல்விக்கழக புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

தலைவர்- திரு. ரி. எல். ஓங்காரமூர்த்தி, செயலாளர்- திரு. சிவ. மகாலிங்கம், இளம் பொருலாளர்- செல்வி கலாரஞ்சினி விஞயகமூர்த்தி, உபதலைவர்- திரு. எஸ். தில்லைநாதன், உப செயலாளர்-திரு. ஏ. கைலாயபிள்ளை.

செயற்குழு உறுப்பினர்: திரு. எஸ். சிவவிஞயகமூர்த்தி, திரு. எம். இராஜரட்ணம், திரு. எஸ். மாதவகுமார், திரு. ஏ. ஸ்ரீகுமரன், திருமதி கே. மகேந்திரன்.

விற்பனையாகிறது

Work Out Physics 'A' Level

ஆசிரியர் உ. சத்தியசீலன் B.Sc.

A/L MATHS

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம் [பெருமாள்கோவிலடி]

## விரைவான பிரயாணம்

### லண்டன்

(உறவினர் லண்டனில் இருந்தால் துரித பயணம்)

★ அமெரிக்கா ★ ஜேர்மனி ★ பிரான்ஸ

துரிதகதியில் பயணம் மேற்கொள்ள 12. 07. 89க்கு முன்பாக உடன் தொடர்பு கொள்ளவும்

### சவூதி அரேபியா

வீட்டுச் சாரதிகள் வீட்டுப் பணிப்பெண்கள்
கனரக சாரதிகள் லேபரர்ஸ்
கிளீனர்ஸ்

குறிப்பு: மேற்கூறியவற்றிற்கு உடனடிப் பிரயாணம்

ஓமான்: பணிப்பெண்கள்
குவைத்: சாரதிகள்; லேபரர்ஸ்

**க. வித்தியானந்தன்**
(மஸ்கன் மகாலிங்கம்)
53/2, சங்கரப்பிள்ளை வீதி
மானிப்பாய்

07074

## பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★ மாலைதீவு பிரயாணம்

### மாலைதீவு (பெண்கள் மட்டும்)

| | | |
|---|---|---|
| Lady Doctor | 1 இடம் | |
| Tailors & Cutters | 35 ,, | 85 U.S.D. |
| Helpers & Ironers | 35 ,, | 70 U.S D. |

மேற்கூறிய வெற்றிடங்களுக்கு உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்

### சவூதி அரேபியா

| | | |
|---|---|---|
| Plumber | 4 இடம் | 450 S.R. |
| Elevator Technician (Lift திருத்துபவர்) | 1 ,, | 750 S.R. |
| Electrical Engineers | 4 ,, | 1800 S.R. |
| Health Maintenance Supervisor (P. H. I. OR Hospital Overseers) | 1 ,, | 1100 S.R. |
| Cleaners | | 400 S.R. |
| Tin Smith | 1 ,, | 700 S.R. |
| A C Mechanic Helper | 4 ,, | 450 S.R. |

மேற்கூறிய வெற்றிடங்களுக்கு கடவுச்சீட்டு, 10 படங்கள், அனுபவ சான்றிதழ்களுடனும் உடன் தொடர்பு கொள்ளவும்

| | | |
|---|---|---|
| Mechanical Engineer | 2 இடம் | 1700 S.R. |
| Street Light Electrician | 3 ,, | 800 S.R. |
| Traffic Light Technician | 2 ,, | 1000 S.R. |
| Gardener Cum Plumber | 1 ,, | 500 S.R. |

இவற்றிற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**"M" THREE TRAVEL**

தலைமையலுவலகம்: "இந்திரபவனம்" சோதி வீதி, காங்கேசன்துறை.

கிளையலுவலகம்: இல: 1, 2வது ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

07082

## இலவச மண்வெட்டி

புங்குடுதீவு பயிர்ச்செய்கை அலுவலர்கள் பிரிவிலுள்ள பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கான இலவச மண்வெட்டி வழங்கும் வைபவமொன்று கடந்தபுதன்கிழமை புங்குடுதீவு கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது.

புங்குடுதீவு பகுதிகளிலுள்ள சுமார் இருநூறுக்கு மேற்பட்ட விவசாயிகள் இதனுல் நன்மையடைந்துள்ளனர்.

பிரயாண அன்பர்களுக்கு எமது ஸ்தாபனத்தார் வழங்கும் மகிழ்ச்சிகரமான

## பிரயாண ஒழுங்குகள்

★ இங்கிலாந்து ★ ஜேர்மன் ★ பிரான்ஸ் ★ இத்தாலி ★ சுவிஸ் ★ ஹொலன்ட்

ஆகிய நாடுகளுக்கும்

### ஹொலன்ட்

றைவேஸ் மெக்கானிக்ஸ்

### சவுதி அரேபியா

கிளினேஸ் கவுஸ் றைவேஸ்
எழுதுவினைஞர் விற்பனையாளர்

### சிங்கப்பூர்

பணிப்பெண்கள் உடன் தேவை

சென்ற வார ஜேர்மன்குழு தமது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டது.

எமது அடுத்த குழுக்கள் விரைவில் புறப்பட இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்

இவை அனைத்திற்கும்

உங்கள் பயண அமைப்பாளர்

**M. P. LINGAMS**

764, Hospital Road Jaffna

07091

## விற்பனைக்கு

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தைச் சேர்ந்த மாணவிகளினல் தயாரிக்கப்பட்ட உடைகள் இருபாலாருக்கும் சகல அளவுகளிலும் நாணயமான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

தொடர்பு:

**சைவ வித்தியாவிருத்திச் சங்கம்**
கலாசாலை வீதி திருநெல்வேலி

07088

உ
சிவமயம்

## திருமண நல்வாழ்த்து

இன்று (09. 07. 1989) ஞாயிற்றுக்கிழமை காலை கட்டைப்பிராய் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மணவிழாக்காணும்.

**இரவீந்திரகுமாரன்** (அபுதாபி)

**சந்திரகுமாரி** (நிழல்கள் சிறுகதை நூல் படைப்பாளி)

தம்பதிகளின் மணவாழ்க்கையில் வசந்தம் வீசவும், இனிமையும் இன்பமும் நிறையவும், சுபிட்சம் குவியவும் வாழ்த்துகிறேம்.

பருத்தித்துறை
09. 07. 1989

யதார்த்த கலை இலக்கிய வட்டம்

07094

# திருப் பாற்கடல்

## முரசொலி வார மலர்

## பாற்கடல்

தீர்க்கமாய், அமுதம் தான் வேண்டும் என்று
சிந்தித்து நின்ற நாங்கள்
வேர்க்கடலை கொறித்தபடி
வீண்' பொழுது போக்குவதோ?
வேண்டாம், வேண்டாம்.
பாற்கடலைக் கடைவோமே
பரபரப்பை விடுவோமே!
பதைப்பு வேண்டாம்.
வேர்த்திளைத்து விழுமட்டும் வடம் பிடிப்போம்
வலித்திழுப்போம்.
விடக்கூடாது.

நஞ்சு பிறந்தால், அதற்கு—
நாம் ,பயந்து விடலாமா?
நன்மை வேண்டின்—
அஞ்சி அஞ்சிச் சாவதனால்
ஆவதொன்றும் இல்லையப்பா.

அமுதம்
காண்போம்.

அடிக்கடிதான் இப்பொழுது நஞ்சு வரும்
ஆனாலும், அதனைச் சாட்டி
நடுக்கடலில் மத்தை விட்டு
நாம் விலகி ஓடுவதோ?
நல்லாயில்லை!
துடிப்பிருந்தால்—
என்ன செய்யும் தூறுகிற சிறிய மழை?
சோர்வு வேண்டாம்
'குடைத்தடியை' எறிவோமே!
இரண்டு கையும் பிடித்திழுப்போம்,
கூச்சமின்றி.

முருகையன்

## மதுவை வென்ற தமிழுக்கு வளமே வாழி பாற்கடலே!

அழகுக் கலையே அலையாக
அரிய கருத்தே மணியாகப்
பழகு தமிழே நீயாகிப்
பாரிற் பொலியும் பாற்கடலே!
பழகு தமிழே நீயாகிப்
பாரிற் பொலியும் சிறப்பெல்லாம்
உளங்கொள் ரசிகர் தமக்கென்றும்
உயர்வாம் அமுதை நல்குதற்கோ?

மதுவை வழங்கும் மலர் நாடும்
வண்டே ஆகி வாசகர்கள்
புதுமை கண்டே நினைநாடப்
புவிமேற் பொலியும் பாற்கடலே
புதுமை கண்டே நினைநாடப்
புவிமேற் பொலியும் செயலெல்லாம்
மதுவை வென்ற தமிழுக்கு
வளமே அறிந்தோம் வாழியவே!

ஆண்டு செல்லச் செல இளமை
அடையும் புதுமைத் தமிழ் மகளின்
நீண்ட புகழை மிகப்பாடி
நெஞ்சைப் பிணிக்கும் பாற் கடலே!
நீண்ட புகழை மிகப்பாடி
நெஞ்சைப் பிணிக்கும் செயலெல்லாம்
ஈண்டு ரசிகர் போற்றுதல்கள்
ஏற்க விளைந்த விளைவாமோ?

புலவர் ம. பார்வதிநாதசிவம்

## அமுதம் திரட்டுவோம்

உள்ளம் ஒரு பாற்கடல். அதைக் கடைந்தால் அமுதம் திரளும். மகான்களும் சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும் சதா தமது உள்ளத்தைக் கடைகிறார்கள்.

ஆனி உத்தரத் திருநாளான இன்று முதல் **முரசொலி வார மலர் திருப்பாற்கடல்** ஆகத் திரை எறிகிறது.

மகான்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் 'முரசொலி'க் குடும்பத்தினர் ஒரு புறமும், வாசகப் பெருமக்கள், ரசிகர்கள், விமரிசகர்கள் மறுபுறமுமாக வடந் தொடுகிறார்கள்.

அமுதம் திரளக் கேட்பானேன்;

கடைவோம்!

**க. உமாமகேஸ்வரன்**

## செயற்கரிய செய்தோர்

சோழன் திருமாவளவன் பெரும் செல்வம் வாய்ந்த சோழ நாட்டை ஆட்சிசெய்தான்.

அவனைப் பாடிப் பரிசில் பெற விரும்பிய மதுரைக் குமரனார் என்னும் புலவர் அவனிடம் சென்றார். செல்வச் செருக்கினால் கண்மூடி இருந்த திருமாவளவன் புலவருக்கு பரிசிலைக் கொடுக்காது தாமதித்தான்.

மான உணர்வும் ஆண்மையும் மிக்க மதுரைக் குமரனார் திருமாவளவனின் தவறைச் சுட்டிக்காட்டி அறிவுறுத்த விரும்பினார்.

அரசனைப் பார்த்து வேந்தே! அரசர்கள் நெடுந்தேர்களை உடையவர்கள் என்றோ கடல் போன்ற பெரும் படையுடையவரென்றோ போர்க்களத்தில்

### மதுரைக் குமரனார்

வெற்றி ஈட்டுபவரென்றோ அவர்களை நாங்கள் வியந்து பாராட்டுவதில்லை.

வளம் குறைந்த நிலத்தில் விளைந்த வரகரிசிச் சோற்றையும் இலைவகையையும் உணவாகக் கொள்ளும் சிற்றூர் அரசர் ஆனாலும் எம்மை மதிக்கும் அரசரையே நாம் பாடுவோம்.

நாங்கள் மிகப்பெரிய துன்பம் எய்தினாலும் கூட சிறிதும் அறிவில்லாதோருடைய செல்வம் பயன்படாத காரணத்தால் அதனை நினைக்கமாட்டோம். நல்லறிவுடையோரது வறுமை பயன்படுவதால் அதனையே பெரிதும் உவந்து நிற்போம் என்றார்.

புலவருடைய மான உணர்வையும் பெரு வேந்தனுகிய தனது தவறை தன் முன் நின்று எடுத்துக்கூறிய புலவரின் ஆண்மையையும் திருமாவளவன் அறிந்து கொண்டான்.

தன் தவறை உணர்ந்து புலவருக்குப் பெரும் பரிசு அளித்து அன்பு காட்டிக் கௌரவித்து அனுப்பினான் திருமாவளவன்

## பாற்கடல்

சாவாமை வேண்டித்
தவமுயற்சி செய்வதற்குத்
தேவாதி தேவர்
திரண்டார்கள்! என்னதான்
பாடுபட்டும் ஏதும்
பலிக்கவில்லை! 'பாற்கடலை
ஆர்கடைய வல்லார்!
அமுதத்தை ஆரெடுப்பார்!
சோர்வடைந்து போயோர்
சூழ்ச்சி புரிந்தார்கள்

மந்தரமே மத்தாக
வாசுகியே நாணாக
அந்தரத்துத் தேவர்
ஒருபால் அணிவகுக்க
பாபத் தொடுகூட்டு!
பார்க்கப் புகின் இதுவோ
ஆபத்து வேளை
அசுரரென் றுலென்ன?
மாலே தலைமை
வகித்த கயிறிழுப்பாம்
ஏலாத தேதும்
இலை!

மலைக லங்கவும்
மண்க லங்கவும்
நிலைகு லைந்துவிண்
நெறுநெ றென்னவும்
கடல்க டைந்தனர்
கனவு கண்டனர்
அடல்உ டம்பினர்
அமுதை நம்பினர்!

தாம்பாயிரு சாராடிடைப்
போய்மீண்டிடு நெடிய
பாம்பானது வலிமேலிடப்
பதறுஉயிர் குலையா
உமிழ்நஞ்சின தனல்தம்முடல்
சுடுகின்றது தரியா
அமிழ்தம்பெற முயல்கின்றவர்
உயிர் கொண்டுவிரைந்தார்!

மேலான தொன்மை
விளைந்த பயணத்தில்
ஆலாலங் கண்டார்
அமரர் அலமந்தார்!
நீலங் கண்டவர்
நிலைகு லைந்தனர்
ஆலங் கண்டவர்
அலறி ஓடினர்!
யார்த டுப்பவர்
யார்வி டுப்பவர்!
யாரெ டுப்பவர்
யார்கொ டுப்பவர்!

''மூலமாய் எப்பொருட்கும்
வித்தாய் ஓங்கி
முளைத்தெழுந்தாய், யாவர்க்கும்
அறிய வொண்ணாக்
கோலமே குணக்குன்றே
குன்றி லிட்ட
கொழுஞ்சுடரே கொளுத்துகிற
நஞ்சுக் காற்றாம்!''
ஓலமிடும் வானவரைக்
கண்டு நெஞ்சம்
உருகி நின்றான்
ஒருகணத்தில் ஓடிச்சென்றவ்
வாலமதை எடுத்துண்டான்
தேவர் எல்லாம்
அங்காந்த வாய்மூட
மறந்தே போனார்!
ஆல முண்டகண்
ணாள்கை தீண்டவும்
நீல கண்டனாய்
அவன்நி மிர்ந்தனன்!

ஏலாதென் றெல்லோரும்
ஏங்கி இருந்தபொழு
தாலாலம் உண்டான்
அவன்!

ஒன்றை நினைக்க
அதுவொழிந்து வேறொன்று
நின்றால் அதனால்
நிலைகுலைந்து போவோமா?
வாழ்வை நினைத்தொருகால்
வானமுதம் வேட்டபின்னர்
தாழ்வை நினைத்துத்
தளர்ந்து விழுவோமா?
மேலான வாழ்வு
விடியு மெனமுயன்றோம்
ஆலாலம் வந்தால்
அதனால் மனமுடைந்தெம்
ஏலாமை சொல்லிச்
செயலற் றிருப்போமா!
ஆலாலம் உண்டான்
அவன்!

சோ. பத்மநாதன்

# நூற்கடல் அமுதம்

## வந்தது வாணியே!

பிச்சம்மாள் அண்ணி (திருமதி டி. கே. சி.) யாரிடம் நான் பேசிக் கொண்டிருந்தபோது மேல்பப்டி சம்பவத்தை சுவாரஸ்யமாகச் சொன்னுர். ஒரு நாள் எங்களிடம், எனக்குத் தோன்றியது, 'அப்படி வந்தது வாணியே; வாணியன் அல்ல!' என்று – அதை மற்றவர்களும் அண்ணியார் அவர்களும் ரசித்தார்கள். (பக் 12)

## கவிதையின் சக்தி நூறுமடங்காக...

ஒரு கவிதை படிப்பதை விட பாடும்போது – முறையாகப் பாடும் போது – அதன் சக்தி நூறுமடங்காகிறது என்பதை டி. கே. சி.யால் நான் உணர்ந்து கொண்டேன். பாடுவது என்று இங்கே நான் குறிப்பிடுவது பாவம் தெரிந்து அழுத்தம் கொடுத்துப் பாடுவதைக் குறிக்கிறேன். இன்று அப்படி ஓரளவு பாடல் சொல்கிறவர்களில் ப. சண்முகசுந்தரத்தைக் குறிப்பிடலாம். (தனது பாடல்களைச் சொல்கிறவர்களில் கவிஞர் கே. சி. எஸ். அவர்களைச் சொல்லலாம் – (பக்.11)

படி வைக்கப்பட்ட அறையில் அடைந்த அற்புத அநுபவத்தால் கி. ரா. அடைந்த சிறிய ஏக்கம்.

'எத்தனை ஊதுபத்திகளை நாம் எத்தனை வருடங்களாக பாழ் செய்து கொண்டு வந்திருக்கிறோம் என்று அந்த விஞடியில் எங்கள்மரமண்டையில் தோன்றியது. (பக்48,49)

## ஜீவா வாயிழந்தார்!

ஒரு சமயம் டி கே.சியைப் பற்றியும் பேச்சு வந்தது.

'எல்லாம் சரிதான்; குறிப்பிட்ட பாடல்களை – தனக்குப் பிடித்தமான பாடல்களை – தொகுத்துப் போடுகிறது சரி. 'இந்த திருத்துகிறது' இருக்கே மகா தப்பிதமான காரியம்' என்று ஜீவா உட்கார்ந்து பேசும் போது தனக்கே உரித்தான சன்னமான, அழுத்தமான குரலில் சொன்னுர்.

திருத்தத்தைப் பற்றிய விவாதம் சூடு பிடித்தது.

> நூல்: மாந்தருள் ஒரு அன்னப்பறவை
> ஆசிரியர்: கி. ராஜநாராயணன்
> 'ராஜபவனம்', இடைச்செவல் — 627716
> வெளியீடு: அகரம் (சிவகங்கை, 1981)

ஜீவா அமளப் பொறி பொறிந்தார். சரமாரியாக தாக்குதல் தொடுத்தார். அவர் சொல்லுற காரணங்களெல்லாம் எங்களுக்குச் சரி என்று பட்டது. ஒரே போடில் போட்டு மலத்தி விட்டார்.

இப்போது ஜீவாவுக்குக் கொஞ்சம் சங்கடமாகப் போய் விட்டது என்று சொல்லலாம். காரணம்திருத்தங்களை முறியடித்துப் பேசவில்லையென்றாலும் – ஆதரித்துப் பேச யாரும் இல்லை. நாக்கின் தினவை தின்று தீர்க்க முடியுமா?

ஜீவா மெள்ள என் பக்கம் திரும்பினுர். 'ராஜி நாராயணனைக் கேட்போம்; அவர் ரஸிகமணியோடு பழகியவர் அல்லவா? அவர் சொல்லட்டும்.'

ஜீவா என்பெயரை உச்சரிக்கும் போதெல்லாம் என்பெயரிலுள்ள 'ஜ' வை 'ஜி' மாதரி தொனிக்க உச்சரிப்பார். அதைக் கேட்க சுகமாக இருக்கும்.

எனக்கு, இந்த பீமசேனனை வெல்ல முடியாது என்று தெரியும். ஆனுலும் நம் கருத்தைச் சொல்லுவோமே என்று சிரித்துக் கொண்டே நேராக உட்கார்ந்தேன்.

'புல்லாய் பூண்டாய் என்று ஒரு பாடல் உண்டே, இப்பொழுது எனக்குப் பூராவும் ஞாபகத்தில் இல்லை' என்றேன்.

'சரி விஷயத்துக்கு வாருங்கள்' என்றுர் ஜீவா.

'அந்தப் பாடலில் ஒரு சின்னத் தவறு ஒன்று இருக்கிறது. நீங்களும் கூட எத்தனையோ தடவை மேடையில் அந்தப் பாடலைச் சொல்லி இருக்கலாம்.'

'ஆமாம் சொல்லி இருக்கிறேன். ஆனுல் அதில் பாடலில் என்ன தவறு இருக்கிறதுஎன்று எனக்கு விளங்கவில்லையே' என்று சொல்லிவிட்டு ஜீவா மனசுக்குள் அந்தப் பாடலை பல முறை சொல்லி சரி பார்த்தார். பின்பு, 'நீங்கள் தான் சொல்ல வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். 'புல் பூண்டு, புழு, பறவை, விலங்கு இப்படியாக வளர்ந்தது வந்த மனிதன் திடீரென்று கல்லாய் மாறுகிறதாகச் சொல்லுகிறது பாடல். அதாவது உயிர்வஸ்து ஜடவஸ்துவாக மாறுவதாகச் சொல்கிறது. உயிர்வஸ்துவின் வளர்ச்சியைப் பற்றி சொல்லிக் கொண்டு வரும்போது ஜடவஸ்துவான அந்தக் கல்லுக்கு அங்கே என்ன ஜோலி?

மிருக வளர்ச்சி முற்றி மனிதன் காட்டு மிராண்டியாக வாழ்ந்தான். அப்புறம் தான் அவன் மனித நிலைக்கு வந்தான் ஆகவே ரஸிகமணி டி. கே.சி அவர்கள் மனித வளர்ச்சிக்கு இடைஞ்சலாக இருந்த கல்லை அகற்றிவிட்டு கல்லா மனிதனுய் காட்டு மிராண்டி மனுஷனுய் என்ற சின்னத் திருத்தம் செய்திருக்கிறுர். பாடலின் சந்தமும் குறையவில்லை இப்பொழுது இந்தத் திருத்தத்தோடு பாடலை பல முறை சொல்லிப்பாருங்கள்' என்றேன்.

தோழர் ஜீவா, ஆழ்ந்த மௌனத்தோடு பல நிமிடங்கள் வீற்றிருந்தார். அவர் அந்த மாதிரி நிலையில் இருக்கும்போது நான் பார்த்தது அதுவே முதல் தடவை.

பிறகு திடீரென்று 'எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்யணுமே. டி.கே.சியின் திருத்தங்கள் எல்லாத்தையும் நான் பார்க்கணும்' என்றுதுடித்தார்

## ஆராய்ச்சியாளரின் அங்கலாய்ப்பு!

தமிழ் ஆராய்ச்சியாளர் மதிப்புக்குரிய எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள்

'நாங்களெல்லாம் தமிழ் படித்துப் படித்து ஆராய்ச்சியிலேயே பொழுதைக்கழித்து விட்டோம். டி.கே.சி. அவர்களோ, தமிழைப் படித்துப் படித்து ஆனந்தமே அடைந்தார்கள். இது எங்களுக்குக் கிடைக்காத ஒன்று'

என்று சரியாகவே சொன்னுர் ஒரு சமயம். (பக். 37, 38,)

## கோண்ணு போட்றும்

'...ஒரு கனவான் டி. கே. சியைப் பார்க்க வந்தார். அவர் இந்த மாவட்டத்திலேயே ரொம்பப் பிரபலமான புள்ளி; டி.கே.சிக்கு சொந்தக்காரரும் கூட. கொஞ்சநேரம் கழித்து கனவான் போனதும் நாங்கள் உள்ளே வந்து டி. கே. சிக்கு முன்னல் உட்கார்ந்தோம். ஆழ்ந்த யோசனையில் கொஞ்சம் முகத்தில் வேதனையும் கலந்திருந்ததுபோல–டி.கே.சியின் முகம் எங்கள் கண்ணுக்குப் பட்டது. எங்களைப் பார்த்ததும் புன்னகையோடு, கனவான் சென்ற பாதையைக் காட்டி, இப்படிச் சொல்லிவிட்டுச்சிரித்தார்கள்.

'காண்டாமிருகம் இருக்கே... காண்டாமிருகம்; அது சைவம்தான். ஆளைத்திங்காது; ஆளு கொண்ணு போட்றும் (பக். 40)

## வத்திகளைப் பாழ்செய்து விட்டோம்!

சாம்பிராணி வத்தியை அறையில் காற்று நுழையும் வாயிலில் வைக்கும்படி டி.கே.சி. பணித்ததும் அப்

# பல் சுவை

## 'வாங்கிக் கொண்டது ரொம்பக் கொஞ்சம்!'

நாங்கள் அவரோடு பழகிய காலத்தில் எங்கள் மண்டைக்குள்ளேயும் ஒரு 'பண்ணிக் குட்டி' இருந்தது; அரசியல்ப் பண்ணிக்குட்டி! திறந்த மனதோடு நாங்கள் அவரை அணுக விடவில்லை அது. அகம்பாவம் நிறைய்ய இருந்தது எங்களிடம், (எங்களிடம் என்பது என்னை மட்டுமே குறிக்கும்) இதனுல் எங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ரொம்ப. அவர்கள் சொன்ன பல விஷயங்களை ஊன்றி கவனிக்க முடியாமல் அந்த அகம்பாவம் எங்களை நாசம் செய்துவிட்டது. டி. கே. சியிடமிருந்து நாங்கள் வாங்கிக் கொண்டது ரொம்பக் கொஞ்சம். தமிழ் மொழியின் சரித்திரத்தில் டி. கே. சி போன்ற மாமனிதன் தோன்றியது அபூர்வம் என்று உணர்கிறேன். (பக் 15)

## 'இன்னென்று கிடைக்குமா?'

டி.கே.சியும் ஒரு அன்னப் பறவையே, நல்லதுகளையும் சிறந்ததுகளையும் எடுத்துக் கொண்டார். அதைப்பற்றியே பேசினுர்; பாராட்டினுர். போலிகலந்த கவிதைகளில் கவிதையை மட்டும் எடுத்துத் தானும் உண்டு உலகத்துக்கும் கொடுத்தார். தமிழகத்துக்கு இப்படி இன்னொரு அன்னப் பறவை கிடைக்குமா? (பக். 60)

திரட்டியவர்:
சபரி கண்ணப்பன்

கோர்ட்டுக்குப் போகப் புறப்பட்டு எண்ணெய்வனிகள் வந்ததால திரும்பி. வீட்டுக்குள்ப் புகுந்துஇராமாயணத்தைப் பொழுதைப் போக்கு வதற்காகப் படிக்கத் தொடங்கினுர் டி.கே.சி என்பது தான் அண்ணியார்'' சொன்ன சம்பவம்.

## இது அவல நிலை

படைப்புலகை விமர்சனம் மூலம் திருத்த முடியாது, படைப்பின் மூலம் தான் திருத்த முடியும்?

சினிமாவில் நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு. நல்லது மாதிரி கெட்டதும் உண்டு.

கறுப்புப் பணம் போட்டு எடுக்கும் படம் கறுப்புப் பணத்தைத் தீவிரமாக எதிர்க்கும் கதையுடையதாக இருக்கும்...

சினிமா சத்தியத்தைச் சொல்கிறது. ஆனுல் பொய்யர்களின் மூலம் இது ஓர் அவலமான நிலை.

ஜெயகாந்தன்

## ஈபெல் நூற்ருண்டு

இவ்வாண்டு பிரான்சின் தலைநகரான பாரிஸில் அமைந்துள்ள ஈபெல் கோபுரத்தின் நூற்ருண்டு ஆகும். அதற்காக ஈபெல் பலவாறு அலங்கரிக்கப்படுகிறது. பலர் பல பொருள் கொண்டு ஈபெல் கோபுர 'மொடல்'களைச் செய்து வருகின்றனர். இப்படிச் செய்யப்பட்ட. மொடல்களில் ஒன்று பல்லினுல் செய்யப்பட்டது. ஸ்பெயின் தேசத்து, ஜுவன் மார்ச் சேன்' என்பவர் பசுமாடுகளின் 884 பற்களையும், தனது 6 பற்களையும் கொண்டு 44 அங்குல உயரம் உடைய ஈபெல் கோபுர மாதிரி உருவைத் தயாரித்தார்.

இதைப் போல்பிரான்சு தேச இரு நண்பர்கள் தீக்குச்சிகளைக் கொண்டு ஈபெல் கோபுர மாதிரி உருவை அமைத்து ''கின்னஸ்'' புத்தகத்திலும் இடம்பெற்றுவிட்டார்கள்.

இப்படி பலர் புகழ் பெறக்காரணமாக இருக்கும் இக் கோபுரம் 1889 ஆம் ஆண்டு அலெக்ஸாண்டரே கஸ்டல் ஈபெல் என்ற பொறியியலாளரால் ஒரு பொருட்காட்சிக்காக கட்டப்பட்டதாகும். அவரது பெயரே கோபுரத்திற்கும் இடப்பட்டது.

300 மீற்றர் உயரமுடைய இக்கோபுரம் அக்காலத்தில் 300 மீற்றர் உயரக் கொடிக்கம்பம்எனப் புகழப்பட்டது. இக்கோபுரம் ''லிப்ற்''களை கொண்டது. உச்சியில் உணவு விடுதிகள் உள இதன் உச்சியிலிருந்து பாரிஸ் நகரின் 60 மைல் சுற்றுவட்டாரத்தை காணலாம்.

இக் கோபுரத்தில் தான் பிரான்ஸ் தேச வானெலி தொலைக்காட்சி, பொலிஸ் தியணைப்பு நிலைய அன்டெனுக்கள் அமைந்துள்ளன. மொத்தம் 50 அன்டெனுக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

வலிமையானதும், நிறை குறைந்ததுமான உருக்குச் சட்டங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட 'ஈபெல்' இன்றும் பிரான்ஸ் அரசால் நுணுக்கமாக கண்காணிக்கப்பட்டு எழிலுடன் விளங்குமாறு பாதுகாக்கப் படுகின்றது.

தீ. தவபாலன்

## புண்யாஹம்

புண்யா வாகனம், புண்ணியாக வசனம் என்றெல்லாம் பேச்சு வழக்கிற் குறிப்பிடப்படும் கிரியை இதுவே.

இக் கிரியையை மேற்கொள்பவரின் பாவம் நாசமாகும்; தேகமும் இடமும் பரிசுத்தமடையும் என்று சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளது.

பு—பாப நாசனம், ண்யா—தேகசுத்தி, ஹ—இடசுத்தி

கோயிற் கிரியைகள் அனைத்தின் ஆரம்பத்திலும் புண்ணியாஹ பூஜை செய்யப்பட வேண்டும் என்பது ஆகம விதி. புதுமனை புகுதல், திருமணம் முதலிய சடங்குகளின் போதும் ஆரம்பத்தில் புண்ணியாஹ பூஜை செய்யப்பட்டே ஏனைய கிரியைகளைப் புரிதல் மரபு.

புண்யாஹம் செய்த பின் செய்யப்படும் கிரியைகள் நற்பலனையளிக்கும். சற்கருமங்களைக் குழப்புகின்ற— சற்கருமங்களைச் சகிக்காத இயல்புடைய—பூத பசாசுகள் புண்யாஹத்தால் விலகிவிடும்.

புண்யாஹ கிரியையைப் பலர் இன்று வருண கும்ப பூஜையாகச் செய்தபின் மங்கள வாசகங்களை ஓதுவதையே முதன்மையாகச் செய்கின்றனர். ஆனுல் கும்பத்தின் அடி, மத்தி மேல் ஆகியபாகங்களிலும்,முன், பின், வலம், இடம் ஆகிய பாகங்களிலும் வேறு வேறு தேவதைகளைப் பூஜிக்க வேண்டும். இங்ஙனம் பூஜிக்கப்படும் தேவதைகளில் ஒரு தேவதையேவருணன் எனவே, புண்யாஹ கிரியைகளைப் புரிவோர் இக் கிரியை பற்றியும், செய்யும் முறைபற்றியும் நன்கு அறிந்திருப்பதும் செயற்படுவதும் அவசியமாகும்.

பண்டிதர்
தீ. பொன்னம்பலவாணர்



முதலாளி:– இன்று ஏன் லேட்?
அவர்:– ரோட்டைக் கடக்கும் போது ஒரு பஸ் என் மீது மோதி நூறு அடி இழுத்துக் கொண்டு வந்துவிட்டது.
முதலாளி:– அப்படியானுல் நீ இன்னும் சீக்கிரமாக அல்லவா வந்திருக்க வேண்டும்.



பேச்சாளர்:– பெண்கள் தரமான எதையும் படைக்கவில்லை என்பது எனது கருத்து.
கூட்டத்தில்
ஒரு பெண்:– நீங்கள் உங்கள் அம்மாவை வைத்து எல்லோரையும் கணிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

## வைத்தியக் குறிப்புக்கள்

# நாரிப்பிடிப்பை நெருங்கவிடாதீர்!

டாக்டர் எம்.கே.முருகானந்தன் M.B.B.S.(Cey)

- உங்களுக்கு ஏதாவது ஒரு தருணத்திலாவது நாரிப் பிடிப்பு ஏற்பட்டிருக்கும்; சந்தேகமில்லை. சிலருக்கு சில நாள்கள் படுக்கையில் ஓய்வு எடுத்ததும் நாரிப் பிடிப்பு குணமாகிவிடும். வேறு சிலருக்கோ வைத்தியர் தந்த மருந்துகளாற் குணமாகிவிடும்; மற்றுஞ் சிலருக்கு மருத்துவ மனையில் அனுமதி பெற்று காலுக்கு மண்மூடைகள் கட்டுவது போன்ற சிகிச்சைகள் தேவைப்படலாம்; மிகச் சிலருக்குச் சத்திரசிகிச்சை கூடத் தேவைப்படலாம்.
- நாரிப்பிடிப்பு எந்த வயதினரையும், எப்பாலினரையும், எத்தரத்தினரையும் பாதிக்கலாம். ஆயினும் அதீத எடை உள்ளவர்களையும், உடலுழைப்புக் குறைந்தவர்களையும் கூடியளவு பாதிக்கிறது. பெரும்பாலான நாரிப்பிடிப்புக்கள் முள்ளந் தண்டிற்கு அருகேயிருக்கும் தசைகளுக்கும் சவ்வுகளுக்கும் ஏற்படும்! அதிகவேலைப்பளு (Strain) வினுலேயே உண்டாகின்றன. முள்ளந்தண்டுத் தொகுதிக்கு இயற்கையாகவே சில வளைவுகள் இருக்கின்றன. இந்த வளைவுகளை அதிகரிக்கும்படியான செய்கைகளோ அதன் தசைகளுக்கு அதிக வேலைப்பளுவை கொடுக்கின்றன. எனவே அத்தகைய செய்கைகளைத் தவிர்ப்பதன் மூலமும், வேறுசில பாதுகாப்பு நடைமுறைகளை அநுசரிப்பதன் மூலமும் உங்களுக்கு உள்ள நாரிப்பிடிப்பை மோசமாகாமல் தடுக்கவோ, குணமாக்கவோ முடியும். நாரிப்பிடிப்பு இல்லாதவர்கள் கூட இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் தமக்கு அது உண்டாகாமல் தடுக்க முடியும்.
- உடுப்புக்களை நீண்டநேரம் அழுத்துவது அதிக நேரம் நின்றபடி சமைப்பது, இராணுவ அணி வகுப்பில் நின்றது போல் நீண்டநேரம் நெஞ்சை நிமிர்த்தி விறைப்பாக நிற்பது, முடிதிருத்தும் தொழிலில் நீண்டநேரம் ஈடுபடுவது போன்ற செய்கைகள் முள்ளந்தண்டு வளைவை அதிகரித்து நாரிப்பிடிப்பை ஏற்படுத்தும் இதைத் தவிர்க்க அதிகநேரம் ஒரேயிடத்தில் நிற்காது சிறிது தூரம் நடவுங்கள் நடப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையானுல். ஒரு காலை ஆறு அங்குலம் வரை உயரமுள்ள வேறு தளத்திலோ, பெட்டியிலோ வையுங்கள்
- அதிக நேரம் ஒரே நிலையில் உட்கார்ந்திருப்பதும் நாரிப்பிடிப்பை ஏற்படுத்தும் உட்கார்ந்து படிப்பது சினிமா, T. V. பார்ப்பது, கார் ஓட்டுவது, கைக் கடிகாரம் திருத்துவது, தைக்குந்தொழில் போன்றவற்றை தொடர்ந்து செய்ய நேர்ந்ததால், ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை எழுந்து, சிறிது நடந்த பிறகு மீண்டும் உட்காருங்கள்
- கதிரையில் உட்காரும்போது முதுகை வளைக்காது, நிமிர்ந்து, முள்ளந்தண்டு கதிரையின் சாய்மனையில் படுமாறு உட்காருங்கள் முக்கியமாகக் கதிரையில் உட்காரும் பகுதியிலிருந்து நாலு முதல் ஆறு அங்குலதிற்கு மேல் தொடங்கி முதுகின் நடுப்பகுதி வரையான முள்ளந்தண்டுப் பகுதி கதிரையில் படுமாறு உட்காருவது அவசியம்.
- நவீன தளபாடங்களின் அமைப்புக்களும், மிக உயர்ந்த அல்லது மிகத்தாழ்ந்த கதிரைகளும் நாரிப்பிடிப்பிற்கு வழிவகுக்கலாம். பாதங்கள் நிலத்திலே படுமாறு, நிமிர்ந்து உட்காரும்போது முழங்கால்கள் செங்குத்தாக மடிந்திருக்குமேயாயின் அது சரியான உயரமுள்ள கதிரை என்று சொல்லலாம்.
- குப்புற ஒரு போதும் படுக்காதீர்கள், ஏனெனில் இது முள்ளந்தண்டுகளின் இயற்கை வளைவை அதிகமாக்கி நாரிப்பிடிப்பிற்கு வித்திடலாம். நிமிர்ந்து படுப்பது நல்லது. நிமிர்ந்து படுக்கும் போது முழங்கால்களின் கீழ் ஒரு தலையணையை வைப்பது விரும்பத்தக்கது. ஒரு பக்கத்திற்குச் சரிந்து படுத்தால், முழங்காலைச் சிறிது மடித்தபடி படுங்கள். முதுகு வளையக் கூடிய ஸ்பிரிங் கட்டில்கள், சாக்குக் கட்டில் போன்றவற்றைத் தவிருங்கள் வாங்கில் பலகைக் கட்டில், இறுக்கமான மெத்தை போட்ட கட்டில் போன்றவற்றையே தேர்ந்தெடுங்கள்.
- அதிக எடை உள்ளவர்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் பருத்த வயிறு காரணமாக முதுகில் பின்வளைவு ஏற்பட்டு, நாரிப்பிடிப்பு ஏற்படலாம். இப் பின்வளைவை தவிருங்கள். நிமிர்ந்து நில்லுங்கள் ஊளைச் சதையையும், தொப்பை வயிற்றையும் உடற் பயிற்சிகள் மூலம் நீக்குங்கள் கர்ப்பிணிப் பெண்கள் உயர்ந்த குதிக்காலணிகளை அணியக் கூடாது.
- குழந்தைகளைத் தூக்கும்போதும், கீழே கிடக்கும் பொருள்களை எடுக்கும்போதும், பாரங்களைத் தூக்கும்போதும், முதுகை வளைத்துக் குனிந்து தூக்குவதைத் தவிருங்கள் ஒரு காலைச்சிறிது முன்னே வைத்து முழங்கால்களை மடித்து முதுகைவளைக்காது உட்காருவது போலக் கீழே நோக்கிச்சென்று எடுங்கள்.

## களஞ்சியம்

### நெருப்புக் குச்சும் விறகும்

நெருப்புக்குச்சுத் தீமூட்டும். விறகு வேக வைக்கும். நெருப்புக்குச்சியாய்த் தீமூட்டியவள் கூனி. விறகாகி வெந்து போகச் செய்தவள் கைகேயி இராவணன் என்ற அரிசி வெந்து சோருகிற்று கூழாகிற்று, வீழ்ந்தது.

யாராவது நெருப்புக்குச்சி தான் சோருக்கிற்று என் பார்களா?

(வானெலிப் பட்டிமன்றமொன்றில்)

இரா. ருக்மணி

### இப்படி ஒரு சட்டம் வேண்டும்!

1982-04-01இல்பர்மாவில் நடைமுறைக்கு வந்த சட்டம் இது பர்மா வெளியீட்டாளர்களும், அச்சக உரிமையாளர்களும் எழுத்துச் சொற்பிழை விடக்கூடாது. பிழை விட நேர்ந்தால் விடப்படும் பிழை ஒவ்வொன்றுக்கும் அமெரிக்கக் காசு சதம் ஒன்று குற்றப் பணமாகச் செலுத்தவேண்டும்.

அடடா! இங்கே இப்படி ஒரு சட்டம் வரக்கூடாதா?

### சீனமொழியிற் தமிழ்ச் சிறுகதை

சீனமொழியில் வெளிவந்த முதலாவது தமிழ்ப் படைப்பு, தமிழ்ச் சிறுகதை என்ற சிறப்பை யாருக்கு வேண்டும் இந்த அழுகிய பூசிணிக்காய் என்ற சிறுகதை பெற்றுவிட்டது.

இலட்சக் கணக்கான சீன வாசகர்கள் விரும்பிப் படிக்கும் றென்மின்றிபா (81. 11. 14) இதழில் வெளிவந்திருக்கும் இந்தச் சிறுகதையைப் படைத்தவர் சிறுகதைகளை அற்புத சிற்பங்களாகச் செதுக்கி வழங்கிய அமரர் திரு. ஜானகிராமன்.

# மதுமேகப் பிளவைக்கு மூலிகை மருந்து

மதுமேகப் பிளவைகள் மாதக் கணக்கில் வருடக் கணக்கில் குணமடையாது நோயாளிகளை வருத்துகின்றன. இப் பிளவைகளைச் சில நாள்களிற் குணமாக்க வல்ல புதிய மூலிகை மருந்தொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. மதுமேகம் (நீரிழிவு) கட்டுப்படுத்தப் பட்டாலும் சீழ் சவ்வு போன்றவை நீக்கப்பட்டாலும் புண் நிரவாமலும் இரணம் ஆறாமலும் வருடக் கணக்கில் மதுமேக நோயாளிகள் கஷ்டப்படுவதை எல்லோரும் அறிவார்கள்.

இலங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றத்தினர் ஒதிய மரத்தினை முக்கிய மூலப் பொருளாகக் கொண்டு இம் மருந்தைத் தயாரித்துள்ளனர். தயாரிக்கப்பட்டிருக்கும் சேர்வையினைத் துணியிற் பூசி இரணத்தில் வைத்துக் கட்டிவர மிக விரைவிற் புண் நிரவிக் குணமாகிவிடும். வைத்தியர்கள் எவரும் உபயோகிக்கலாம்.

தகவல்: டாக்டர் கே. பாலசுப்பிரமணியம் கருகம்பனை

# சர்வாதிகாரியும் தேர்தலும்

சர்வாதிகாரிக்கு முடி திருத்தும் தொழிலாளி வழக்கமாக முடி திருத்தும் போது ஒருநாள் "எங்களது அதிபதியே, தாங்கள் எப்போது தேர்தல் வைக்கப் போகின்றீர்கள்?" என்று கேட்டான்.

அது கேட்டுக் கோபமடைந்தாலும் அவர் அவனது கேள்வியை அலட்சியப்படுத்திஞர்.

அடுத்தமுறை முடி திருத்தும்போதும் அத் தொழிலாளியின் இதே கேள்வியைக் கேட்டு, அதிக கோபமடைந்தாலும் மறு முறையும் அலட்சியப்படுத்திஞர் பதில் சொல்லவில்லை.

மூன்ரும் முறை முடி திருத்தும் போது அத் தொழிலாளி "எங்களது பிரபுவே நாங்கள் எப்போது தேர்தலைச் சந்திக்கப் போகிறேம்?" என்று கேட்டான்.

இந்த முறை அவரால் தனது கோபத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை. அருகிலுள்ள சிப்பாய்களை அழைத்து அவனுக்கு ஐம்பது கசையடிகள் கொடுத்துச் சிறையிலடைக்க உத்தரவிட்டார். உடனே அத் தொழிலாளி சர்வாதிகாரியின் காலில் விழுந்தான். "எனது பிரபுவே நான் தங்கள் உப்பை தின்பவன் நான் உங்களுக்கு தொல்லை தர நினைப்பேனு? எனது தொழில் சௌகரியத்திற்காகத்தான் நான் தங்களிடம் தேர்தலைப் பற்றிக் கேட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்" என்றுன்.

சற்றே கோபந்தணிந்து சர்வாதிகாரி கேட்டார். "இதனுல் உனக்கென்ன தொழில் சௌகரியம்?"

நான் முடி வெட்டும் போது தங்களிடம் தேர்தல் பற்றிக் கேட்கிறேன். உடனே தங்கள் முடி சிலிர்த்து எழுந்து நிற்கிறது. அது எனக்கு வெட்டுவதற்கு வசதியாய் உள்ளது.

நன்றி:-கலிஜ் டைம்ஸ்

# இலட்சியங்களே வாழ்க்கையின் எஜமானர்கள்

உயர்ந்த நோக்கங்கள் உயர்த்த உள்ளங்களை அமைக்க முடியும். உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட வாழ்க்கையே பெருமையுள்ள வாழ்க்கை. ஒருவருடைய இலட்சியம் இது வென்று அறிந்து விட்டால் பின் அவரைப்பற்றி அறிந்து கொள்ளுதல் கஷ்டமான காரியமல்ல. இலட்சியங்களே வாழ்க்கையின் எஜமானர்கள்.

நாம் பல சந்தர்ப்பங்களில் பலனற்று இருப்பதற்கு முக்கிய காரணம் நம் சிந்தனையை பல நோக்கங்களில் சிதற விடுதலேயாகும். வெற்றி பெறுவோம் என்ற உறுதியுடனும், உண்மையான உழைப்புடனும் பணியாற்றினுல் ஒருக்காலும் பின் வாங்காமல் முன்னேறிச் சென்று வெற்றி பெற்று விடுவோம். ஏற்றுக் கொண்ட காரியத்தைச் சாதிக்க நம்பிக்கை என்ற கருவியை எப்போதும் வைத்திருக்க வேண்டும். நம்மால் முடியும் என்று எண்ணுவதே முடிக்கும் ஆற்றலைப் பெற்றதாகும்.

வியன்ஞ நகரில் ஓவியத் தொழில் செய்து பிழைத்த ஓர் இளைஞன் இரவில் வெகுநேரமாகதன்னுடைய அறையில் அரசியல் நூல்களையும் ஐரோப்பா கண்டத்தின் படத்தையும் வைத்து கண் வாங்காது ஆராய்ந்து கொண்டிருப்பான். தினமும் இவன் இப்படியே செய்து கொண்டிருப்பதைப் பார்த்த வீட்டுக்காரி 'பகலில் நான் தெருவெல்லாம் சுற்றியலைந்து விட்டு வீடு வந்து சேருகிருய் இரவிலாவது படுத்து உறங்கக் கூடாதா. ஐரோப்பாக் கண்டத்தின் எல்லையை மாற்றி அமைக்கப் போகின்ருயா?' என்று கேட்டாள்.

"நான் அதனை மாற்றியமைக்கப் போகின்றேன்' என்று கூற வாயெடுப்பான்; எனினும் அமைதியாக இருந்து விடுவான். மீண்டும் ஐரோப்பாக் கண்டத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பான். தன் எண்ணப்படியே ஐரோப்பாக் கண்டத்தின் படத்தையே மாற்றி அமைத்து விட்டான். அந்த இளைஞன்தான் சர்வாதிகாரி ஹிட்லர்!

பயனுள்ள முயற்சிகளின் இரகசியம் நம்பிக்கையில் இருக்கிறது. செயல் புரியாத மனிதனுக்குத் தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது. சிரத்தையுள்ள மனிதனுக்கு உபகரணங்கள் தாமாகவே அமைகின்றன. அப்படிக் கிடைக்கா விட்டால் அவனே உண்டாக்கிக் கொள்வான்.

இ. அனுரதன்

# ஈழத்துக் கவிஞர் பக்கம்

## அழகிய(ர்) சவாரி

சயிக்கிளிற் சவாரி செல்லுங்
கன்னியர் கூட்டம், குஞ்ச
மயிரினைப் பறக்க விட்டு
மாசிலா 'ரியூஷன்' கல்வி
பயில்வதற் காக ஓடும்
ஓட்டமோ பகர்தற் கில்லை;
வெயிலுக்காய் வீதி யோரம்
விரைந்திடும் மக்க ளுள்ளே,

கிழடுகட் டைகளை மோதிக்
கிண்டலும் செய்து விட்டுக்
'கிழங்களே! உங்க ளுக்குக்
கண்காது இலையோ?' என்று
இளகிய நெஞ்சம் இன்றி
இறுமாப்புக் கொண்டு பேசி
அழகிய(ர்) சவாரி செய்யும்
அழகுமோர் அழக தாமே!

ஏடொடு, கல்வி கற்கும்
ஏதினால் உந்தப் பெற்று
நாடொறுஞ் சயிக்கிள் ஓடும்
நல்லெழிற் கன்னிப் பெண்காள்!
சோடொடு சோடி போட்டுத்
தெருவினிற் பரந்து செல்லல்,
தேடரும் நலஞ்செய் யாதே
தீங்கினைச் செய்யுந் தானே!

கவியரசு முருகசூரியன்

## நுகர் கவிதை நீ எனக்கு!

காலடியில் நிலமானேன்; காணிக்கை உன்பாதம்
கண் தாழ்த்தி மண்பார்த்தாற், கண்ணெதிரே
உன்வேதம்
மேலடிகள் தான்பதித்து,மெல்லத்தான்நடக்கின்றாய்
மேனியிலோர் நடயமில்லை; மென்மகளே
பறக்கின்றாய்
நாலடியின் இடைவெளியில் நாணுகின்ற பூவனமே
நம்பியெனை தந்தேனே; நானுன்றன் சீதனமே
நூலடியில் ஆழ்ந்திருக்கும், நுகர்கவிதை நீஎனக்கு
நுணுக்கமுடன் வாசிக்கும் நூலறிந்தோன்
நானுனக்கு!

இமை நான்கும் போடுவதோ, இனிய தாளம்
இசையொலியே கேட்கவில்லை; என்ன ஜாலம்
இமையிரண்டுந் தாங்குவதோ சுகத்தின் கோலம்
சுயபலமும் இடைக்குளதோ? சுபமே காலம்
அமைவான தனியங்கம் அவதார மேடை
அரங்கேறும் பருவத்தின் அபூர்வ ஜாடை
சமைத்திட்ட அழகெல்லாம் சதிராடும் பேடை
சலியாத எழில் வீசும் சந்தனத்து வாடை

''சிக்''கெனப் பிடித்த ஓர் சிற்றாடை உன்
''சில்''லென்ற மேனியோ சிற்றோடை
பக்கத்தில் இயற்கையோ கண்ஜாடை காதற்
பருவத்திற் கதுதானே மேலாடை
விக்கித்து நிற்பதேன் நீரோடை? எனை
விழுங்கிடும் விழிகளோ தேனோடை
வெட்கத்திற் சிலிர்க்குமோ மலர்மேடை இன்ப
வெளியினில் வீசுமே கலைவாடை!

எதை எதையோ, எவரெவரோ கொள்ளையடிக்க;
என்
இதயத்தை இவள்தானே கொள்ளையடித்தாள்
பதைபதைத்தே கேட்கின்றேன்; தெரியா
தென்றான் தன்
பனிப்பார்வை தனை வீசி மருந்தா மென்றான்
கதை கதைத்தே வருகின்ற கண்ணில் விழுந்தேன்
என்
கற்பனையை மேலேற்றிக் கவிதை சுரந்தேன்
பதை பதைத்தே துடிக்கின்றேன் சாகவில்லை
நான் என்
சரித்திரத்தில் இவள்தானே, காதலெல்லை காண்!

க. மாதவிப்ரியா

## திலகமா நாணயமா?

பருவ மங்கையின்
புருவ விற்களின்
நடுவில்
பாய்போட்டுப்
படுத்திருக்கும்
அந்த
ஒற்றை நாணயம்...
அது...
பரந்த நெற்றியில்
பட்டு விரல்
பட்டதால்
பிறந்த
வட்டக் குழந்தை...
முக வானத்தில்
மோகன வண்ணத்தில்
தினம்...தினம்
தோன்றும்
இன்னொரு பௌர்ணமி...
கூந்தலின் சாலை
கிழிறங்கி வராமல்
கணக்காக இடப்பட்ட
முற்றுப்புள்ளி...

ரூசற் இராஜேந்திரம்

## காதலும் சோகமும்

'காதல்'
ஒரு ஓரமாய்
உட்கார்ந்து
வெகுநேரமாய்ச்
சிந்தித்துக்கொண்டிருந்தது

'மோகம்'
எப்போதோ அனுப்பிய
கடிதத்தை
'காதல்'
மனத்துக்குள் மீண்டும்
மனப்பாடம் செய்து
கொண்டது

வீறு கொண்ட –
'காதல்'
வீதிவழி
பொடி நடையாகப்
போய்க்கொண்டிருந்த
'சோக'த்தை
எட்டி இழுத்து
கட்டி அணைத்துக்
கொண்டது

'சோகம்'
தங்க இடம் கிடைத்த
சந்தோஷத்தில்
கண்ணீரில்
முகம் கழுவிக் கொண்டது.

த. முரளிதரன்

## அழியாத கோலங்கள்

அன்பே.........
ஏட்டில் எழுதமுடியவில்லை
என் இதயத்து ராகங்களை
ஒரு பாட்டில்
அடக்க முடியவில்லை
நாம் பழகிய காலங்களை
விதி விளையாட்டை
நிறுத்தவில்லை
நம் பிரிவைத் தடுப்பதற்கு
என் மனதில் சக்தியில்லை.
உன் நினைவை மறப்பதற்கு
என்மனதில் சக்தியில்லை
அதனால்–உன்னை
நினைவாலே சிலை செய்து
நெஞ்சில் நிறுத்தி வைத்து
நித்தமும் பூஜிக்கிறேன்
ஆனாலும்......... நீ...
என் இதயத்துச் சிறை
யிலிருந்து
தப்பி விடத்துடிக்கின்றாய்
அன்பே!.........
நினைவுச் சின்னங்களைத்
தகர்த் தெறிந்தாலும்
என் நெஞ்சில் இட்ட
உன் நினைவுக் கோலங்களை
உன்னால் சிதைக்க முடியாது
ஆயிரம் காலம் கடந்தாலும்
அந்த நினைவுகள் என்றும்
அழியாத கோலங்கள் தான்

வே. இளஞ்செழியன்

## கிழக்கும் மேற்கும்

அறிஞரை வளர்த்த அன்புக் கொருகதை!
அறிஞரை வதைத்த வன்புக் கொருகதை!!
அவனியில் இப்படிக் கதைபல இருப்பினும்...
அவைகளில் இரண்டினைக் கவிதையில் தருகிறேன்.

மேற்கு நாடாம் கிரேக்கத் துதித்தவன்
பேரறி வாளனும் தத்துவ ஞானியாம்
சோக்கிரட் டீஸ்தன் கிரேக்கத் திளைஞரின்
சோம்பலைப் போக்கி அறிவொளி ஏற்றினான்
அறிவுச் சுடரினைச் சகித்திடா மன்னவன்
அறிவுச் சுடரினை ஏற்றிய அறிஞன்மேல்
ஆட்சிக் கெதிராய்ச் சூழ்ச்சிகள் செய்வதாய்
ஆட்சி மன்றினில் குற்றம் சுமத்தினன்
ஞானச் சுடரினை அழிப்பதாய் எண்ணியே
ஞானியின் உயிரினை நஞ்சுதந் தழித்தான்

அருந்தமிழ் மன்னனும் அதியமான் பெற்றதோர்
அதிசயக் கனியதாம் நெல்லிக் கனியினைத்
தாமே உண்டதன் நலங்களைப் பெற்றிந்தத்
தாரணி ஆண்டிடும் தன்னலம் தள்ளினன்
நலமுடன் நெடுநாள் வாழ்ந்திட வேண்டியே
பலமுடன் தமிழ்ப் பணி இயற்றிட வேண்டியே

பாடிப் பாடியே செந்தமிழ்ப் பணிசெய்த
பாட்டி யானஎம் ஔவை மூதாட்டிக்கு
அன்புடன் அக்கனி அளித்தவன் மகிழ்ந்தான்!
இன் தமிழ் வளர்க்கும் நற்பணி புரிந்தான்!!

வதைகள் அப்படிப் பலவுண்டு தாரணியில்!
கதைகள் இப்படிப் பலவுண்டு தமிழினில்!!
இவைகளிரண்டுமே இருவிதம் பொருளினில்''
இவைகளின் தரத்தினை மதிப்பதும் பொறுப்பினில்!!

முருகு

## அம்மானுக்குக் கலியாணம்

அம்மா னுக்குக் கல்யாணம்
ஆவ தற்குத் திண்டாட்டம்!
சும்மா போக்குப் போகாமல்
சேவை என்று ஊருக்குள்
அம்மான் 'ஏதும்' செய்தாலும்
ஆன வாயில் சீரில்லை!
அம்மாவுக்கும் சொல்லாமல்
ஓடிக் கப்பல் ஏறினார்!

✶

ஏறிப் போன கப்பலும்
உலகைச் சுற்றி ஈழத்தில்
ஆறிப் போக வந்தது!
அதனால் அம்மான் ஆர்வத்தில்
பீறிப் பூந்தார் ஊருக்குள்
பறவைக் குஞ்சாய்ப் போனவர்
மாறித் தேறிவந்ததில்
மனதைச் சுற்றம் மாற்றிற்று!

✶

''வாற மாசம் கப்பலும்
வங்கா ளத்தாற் போகிறது
போற நாளுந் தந்தாச்சு
போக வேணும் நானதிலே''
ஆற நேரம் இல்லாமல்
அம்மான் ஊருள் ஓடுகிறார்
''போற துக்குள் கலியாணம்
முடிக்க வேணும்'' தாய் சொன்னார்

✶

ஓடி ஓடிப் பெண்பார்த்து
உற்ற சுற்றம் ஊர் பார்த்து
வாடி அண்ணர் வந்தாலோ
வீட்டில் அண்ணி மேல்த் தீய்ப்பார்!
'சோடி யெண்டால்ச் சரியில்லை
சட்டி வண்ணம் ஏனப்பா?
தேடி நல்லாய்ப் பாருங்கோ
தம்பி சொன்னால்க் கேட்காதோ!'

★

அண்ணி கொஞ்சம் 'கோப்பி' நிறம்
ஏதும் இன்றித் தான் வந்தார்
தண்ணி போலக் காசு வரத்
தாவற் புத்தி தான் கொண்டார்!
நண்ணி அண்டும் பேச்சுக்களை
நாளும் வேண்டும் பெண்ணோடு
எண்ணி ஒன்று எங்கெனினும்
ஆறிச் சேரும் என்கின்றார்!

✶

வீடு, காசு, நகையழகு
வேண்டும் நாலாம் நங்கைக்கு!
ஓடு ஓடு என விரவி
அம்மான் ஆயுள் நாற்பதையும்
காடு மேடு பல அலைந்து
கப்பல் மீண்டும் ஏறிவிட்டார்
பாடு பட்டுப் பெண்ணெடுக்க
பாவி போனார் சீமை யடா!

மாவை. வரோதயன்




எனது பழைய பள்ளிக் கூடத்தை ஒரு முறை சென்று பார்த்தால் என்ன என்ற எண்ணம் ஒரு நாள் திடீரென்று என் உள்ளத்தில் உதித்தது.

நான் முப்பத்தைந்து ஆண்டுகள் ஆசிரியத் தொழில் புரிந்தவன். அதில் பதினைந்து ஆண்டுகள் அதிபராக அதிலும் இறுதிப் பத்து ஆண்டுகளும் ஒரே பாடசாலையில். ஆசைஎழாதா அந்தப் பாடசாலையை ஒரு முறை பார்த்துவர

ஏனைய தொழில்கள் மாதிரியல்ல, ஆசிரியத் தொழில். கடதாசிகள், படிவங்கள் ஃபைல்கள், பென்சில் பேனைகளுடன் கிடந்து மாரடிப்பதல்ல, இங்கே, இது மனிதர்களுடன் பழகி மனிதர்களையே உருவாக்கும் தொழில்!

எத்தனை பச்சை மண்களைப் பிடித்துப் பிடித்து அழகிய சிற்பங்களாகவும் சிலைகளாகவும் ஆக்கியிருக்கிறான் ஆசிரியன்? எங்கள் கண்களுக்கு முன்னாலேயே எங்கள் அறிவுரைகளைக் கேட்டு, எங்களையே முன்மாதிரியாகக் கொண்டு, எங்கள் கைகளுக் கூடாகவே எத்தனை சிறுவர்கள் வளர்ந்து உயர்ந்து சமூகத்தில் சிறந்து விளங்குகின்றனர்.

ஆசிரியர்களும் புதிய அதிபரும் மாணவர்களும் கூட்டம் வைத்து மாலைபோட்டு மரியாதைகள் செய்து பாராட்டுரைகளும் பரிசிலும் வழங்கித் தான் என்னை வழியனுப்பி வைத்தார்கள். பிரியாவிடை தந்து வழி அனுப்பி வைத்தால் திரும்பவும் இந்தப் பக்கம் வராதே என்பது அர்த்தமல்ல. அடிக்கடி இங்கே வந்து எங்களுக்கு அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துத் தானே அனுப்பி வைத்தார்கள். அதையே ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு ஒரு முறை போய்ப் பார்த்துவிட்டு வரலாம்; புறப்படுகிறேன்.

பாடசாலை வரும்வரை பழைய நினைவுகளிலும் கற்பனைகளிலும் மிதக்கிறேன். நான் அதிபராக இருந்தகாலத்தில் என்னுடன் கற்பித்த தறுமு, சிவா, சோமு, சிறீ, குணம், எல்லோரும் இப்பொழுதும் அங்கே தானே படிப்பிக்கிறார்கள்?

இத்தனை நாள்களுக்குப் பிறகு என்னைக் காணும் பொழுது எப்படி வியப்படையப் போகிறார்கள்? என்ன மாதிரி மகிழப்போகிறார்கள்? ஆவலுடன் ஓடோடிவந்து 'வாருங்கோ கிருபைராஜா சேர்' என்று வாய் நிறையச் சிரித்தல்வா வரவேற்கப்போகிறார்கள்? ஓம் ராஜா! தான்! பெயரளவில் மட்டுமலல, மதிப்பிலும், செயலிலும் கூட நான் ராஜாதான். அந்த அளவிற்கு எனது ஆணைகளைச் சிரமேற்கொண்டு செய்துமுடித்தார்கள் ஆசிரியர்களும், மாணவர்களும்.

அந்த நாள்களில் நாங்கள் ஸ்ராஃப்றூமில் அலசாத விடயங்கள் தான் உண்டா? அரசியலில் இருந்து உளவியல் வரை எதையும் விட்டு வைத்ததில்லை. விடயம் எதுவானாலும் அதை அக்கு வேறு ஆணிவேறாகப் பிரித்து உதறிவிடுவோம் ஃபிறீபாடவேளைகளிலும் 'ஹர்த்தால்' என்று மாணவர்கள் வராமல் விடும் நாட்களிலும்.

ஆண்களையும் விட மகிழப் போகிறார்கள் லேடி ரீச்சேஸ் தான். என்னிடம் வந்து குழையாத ஒரு ஆசிரியையாவது இருக்கிறாளா பாடசாலையில்? லீவுஎடுக்க கொஞ்சம் வெள்ளணவாக வீட்டுக்கு செல்ல, தங்கள் வீட்டுக் கதைகளைப் பொறுமையாகக் கேட்கிறேனே. என்று... கொஞ்சம் ஃபிளேட்டிங்காக அந்தமயக்கும் கவர்ச்சி தங்களிடத்தில் இன்னும் இருக்கிறதா என்று பரிசோதித்துப்பார்க்க நான் அதிபர் என்பதற்காக நான் ஒரு ஆண் என்பதற்காக ........

சும்மா சொல்லக் கூடாது. ஓய்வு எடுக்கும் பொழுது கூட சிவந்த நிறமும், சுருக்கம் விழாத சருமமும், சுருண்ட மயிரும் கரகரவென்ற அடர்த்தியான மீசையுமாக கம்பீரமாகத் தான் இருந்தேன். அதெல்லால் உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்கிறீர்கள்? காலையில் கண்ணாடி முன் நின்று முகத்துக்குப் பவுடர் பூசி மீசையைக் கை விரல்களால் தடவி விட்டுக் கொண்டுதானே பாடசாலைக்குப் புறப்படுவேன்?

பாடசாலை வந்துவிட்டது அதோ கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது நான் கட்டுவித்த மாடிக்கட்டடம். முன்னால் ஓஃபிஸ் புதிய அதிபர் கதிரையில் இருந்து எதையோ மும்முரமாக எழுதிக்கொண்டிருப்பது ஜன்னலூடாகத் தெரிகிறது. நான் இருந்த கதிரையில் அவன்! எனக்கு உள்ளத்தில் லேசாகப் பொறாமை உணர்வு தட்டுகிறது.



ஓஃபிசிற்குள் நுழைகிறேன். புதிய அதிபர் எழுந்து நின்று "வாருங்கோ சேர்" என்று சொல்லி மரியாதையாக வரவேற்பான் என்று எதிர்பார்க்கிறேன். நுழையும்போது எழுதிக்கொண்டிருந்தவன், அப்படியே நிமிர்ந்து பார்த்து "வாருங்கோ சேர் இருங்கோ, இருங்கோ" என்று தனக்கு முன்னால் உள்ள கதிரையைக் காட்டிச் சிரிக்கிறான், இருக்கிறேன்.

சம்பந்தா சம்பந்தமில்லாமல், சிறிது நேரம் எதை எதையோ பேசுகிறோம். கதையினூடே அவன் அடிக்கடி தான் எழுதிக்கொண்டிருந்த கடதாசியைப் பார்த்துக்கொள்கிறான். 'நான் இந்த வேலையை உடனடியாகச் செய்து முடிக்க வேண்டும். நீ வந்தது அதற்கு இடைஞ்சலாக இருக்கிறது' என்று சொல்வது போல இருக்கிறது அந்தப் பார்வை.

"சரி மற்றவையையும் சந்திச்சுக்கொண்டு வாறன்" என்று சொல்லிவிட்டு, எழுந்து வெளியே வருகிறேன்.

சொல்லிவைத்தாற் போல் எதிரே வருகிறான் சுப்பிரமணியம். பள்ளியின் நீண்ட நாள் ஆசிரியன். என்னுடன் ஒத்தவயதுக்காரன். அதனால் அதிபர் ஆசிரியர் என்ற பேதமின்றித் தோழமையுடன் பழகியிருக்கிறோம். ஒரு பாடசாலை அதிபருக்கு எத்தனை தேவைகள்! எல்லாத் தேவைகளுக்கும் "மணியம் மாஸ்ரர்! மணியம் மாஸ்ரர்" என்று இவனைத்தான் சேவைக்கழைப்பேன். முகம் சுளிக்காமல், மனம் கோணாமல் எல்லாவற்றையும் செய்துதருவான்.

என்னைக்கண்டதும் "ஹலோ கிருபைராஜா! எப்ப இந்தியாவிலை இருந்து வந்தனி? என்ன ஆளிலை நல்லாக் கேட்டுப் போச்சு! அங்கை சாப்பாடு சரியில்லையா?' என்று கேட்டுச் சிரிக்கிறான்.

"இல்லை மணியம் மாஸ்ரர் நல்ல சுகமாத்தான் இருக்கிறன்"

"அப்ப உடம்பிலை நல்லாக் கேட்டுப் போச்சே? பிள்ளையளின்ரை கவலையோ?"

"அதுகும் இல்லை. மூத்தது ரண்டும் வெளிநாடு போட்டுதுகள். மூண்டாவது லதா கம்பஸிலை படிக்கிறாள். கடைக்குட்டி அனித்தா ஏ. எல். படிக்கிறாள். எனக்கென்ன கவலை?"

"ஒருவேளை றிற்ரயர் பண்ணினது கவலையோ!" என்று சிரிக்கிறான்.

"எப்பவோ ஒரு நாளைக்கு றிற்ரயர் பண்ணத்தானே வேணும் மணியம்? அதுக்காகக் கவலைப்படுகிறதா?"

"அதிபராக அதிகாரத்திலை இருந்திட்டு இறங்கினது—?"

"அதென்ன கவலை? அதோடை வயதல்லா? உன்னிலும் தான் கேட்டுப் போச்சு"

"உள்ளது தான். நானும் இந்த வரியம் ஒய்வு பெறுறன்".

'ஓஹோ' அந்தக் கவலையாக்கும்?' நான் சிரித்தேன்.

"பிறகு ஆறுதலாகக் கதைப்பமே இப்ப வகுப்புக்கு நேரமாச்சு வரட்டா?" என்று கேட்டு விலகப்பார்த்தான்.

எத்தனை நாட்களுக்குப் பிறகு என்னைச் சந்திக்கிறான்? அதுகும் பழைய அதிபர். போனாற் போகிறது என்று ஒரு பாடநேரத்தைக் கட் பண்ணீட்டு இருந்து பேச மாட்டானா? எனக்குச் சற்று ஏமாற்றமாக இருக்கிறது. அதை மறைத்துக்கொண்டு, என்ன புது அதிபருக்குப் பயமோ என்று மறுபடியும் சிரித்தேன்.

"கிருபைராஜா! உன்னுடைய காலம் மாதிரி இல்லை இப்ப. அப்ப நீ எங்களுக்கெல்லாம் எவ்வளவு சுதந்திரம் தந்தாய்! இந்தாள் வலு கண்டிப்பு. கடுமையாய் நிக்குது."

"நியூ புறூம்ஸ் சுவீப் வெல்" (New brooms sweep well)

"கொஞ்சம் கண்டிப்பும் இருக்கத்தான் வேணும். இல்லாட்டா, வாத்திமாரும், பிள்ளையளும் தலைக்குமேலை ஏறீடுவினம்."

"அதுசரி மணியம், பள்ளிக்கூடம் எப்பிடி நடக்குது?"

"சும்மா பறவாயில்லை நல்லா நடக்குது"

என்ன? நல்லா நடக்குதா? எனக்கு நெஞ்சில் ஏதோ உதைக்கிறது. அப்படியானால் "நீங்கள் ஓய்வு பெற்ற பிறகு நிர்வாகம் கெட்டுப்போச்சு. பாடசாலையே சீரழிஞ்சு போச்சு" என்று பதில்சொல்ல வேணுமென்று எதிர்பார்த்தேனா?

"சரி வகுப்புக்கு நேரமாச்சு. வாறன்" நண்பன் ஓடுகிறான்.

இவ்வளவு தான் சதையா? எவ்வளவு காலம் பழகிய நண்பன். எனக்கும், அவனுக்கும் பல விடயங்களில் ஒத்த கருத்து எத்தனை நாட்கள் மணிக்கணக்காக இருந்து பேசியிருக்கிறோம்? இப்பொழுது சில நிமிடங்கள் கூட நிற்க நேரமின்றி- அல்லது மனமின்றியா? ஓடுகிறான்? எத்தினை நாள் எத்தினை சலுகைகள் பெற்றிருப்பான்?

அதையும்விட மோசமான விடயம் புதிய அதிபர் என்னையும் விடத்திறமாகப் பாடசாலையை விடத்துகிறார் என்று சொன்னது. மணியமே இப்பிடியென்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? பாடசாலைக்கு வரும் பொழுது இருந்த உற்சாகத்தில் பாதி உற்சாகம் இப்பொழுது போய்விட்டது!

பாடசாலையைச் சுற்றிவந்து ஆசிரியர்களை ஒவ்வொருவராகச் சந்திக்கிறேன். சும்மா சொல்லக்கூடாது. எல்லோரும் வந்து மரியாதைகொடுத்துப் பேசுகிறார்கள். சிலர் பழைய அதிபரென்று; சிலர் வந்துவிட்டானே கடனே என்று; சிலர் இப்பொழுது பதவியிழந்திருக்கின்றன் பாவம் என்று; சிலர் ஏதோ பேசித்தொலைக்க வேண்டுமே என்று... எல்லோரிடத்திலிருந்தும் ஒரே விதமான கேள்விகள் ஒப்பினைக்குச் சிரிப்பு.

'எப்படிச் சுகமா இருக்கிறியளா சேர்?' பிள்ளை குட்டி சுகமா?' "பிள்ளைகள் முன்னேறுதுகளா?"

இந்தக் கேள்விகளில் மட்டுமல்ல இன்னும் ஒன்றிலும் எல்லோரும் ஏகமனதாக இருக்கின்றனர். பாடசாலை முன்னையவிட இப்பொழுது நன்றாக நடக்கின்றது!' இந்த கேள்விகளுக்குப் பதிலளித்துப் பதிலளித்து எனக்கு அலுத்துப்போகிறது. பாடசாலைக்கு ஏன் வந்தோமென்றிருக்கிறது.

தேநீர் இடைவேளைக்கு மணி அடிக்கிறது. மாணவ மாணவிகள் ஓடிவந்து என்னை மொய்த்துக் கொண்டு கதை கேட்பார்கள் என்று எதிர் பார்க்கிறேன். ஒருவர் கூட வரவில்லை. தங்கள்பாட்டில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு கூத்தடிக்கிறார்கள். சிலர் தண்ணீர் குடிக்கின்றனர். சிலர் ஒன்றுக்கு ஓடுகின்றனர். ஒரு சிலர்மட்டும் எனக்குக்கிட்டவாக வந்து ஒரு புதுமையான மனிதனைப் பார்ப்பதுபோல என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் செல்கின்றனர். புதிய மாணவர்களாக இருக்கலாம் பழைய அதிபரென்று பழைய மாணவர்கள் புதியவர்களுக்கு கூறியிருக்கலாம். அல்லது நான் இறந்துவிட்டேன் என்று நினைத்திருக்கிறார்களோ என்னவோ?

நான் அதிபராக இருந்த காலத்தில் 10 ஆம், 11 ஆம் 12 ஆம் 13 ஆம் வகுப்புக்களில் படித்துக்கொண்டிருந்தவர்கள் பரீட்சை முடிந்து வீடு சென்றிருக்கலாம். அப்பொழுது கீழ் வகுப்புக்களில் இருந்தவர்களுக்கு இப்பொழுது எனக்குக் கிட்டவரப் பயமாகவும் இருக்கலாம்.

பழைய அதிபரல்லவா? என்று நானே எனக்குச் சமாதானம் செய்து கொள்கிறேன்.

இடைவேளை நேரம் ஸ்ராஃப் றூமுக்குச் சென்றால் (Staff room) லேடிரீச்சேர்ஸ் எல்லோரையும் ஒரேயிடத்தில் சந்திக்கலாம். உள்ளே நுழைகிறேன். வழக்கம்போல ஒரே இரைச்சல். நிறையப் பெண்கள் என்னைக் கண்டதும் எழுந்து நின்று சிரித்து வரவேற்கிறார்கள். அதே கேள்வி பதில்கள், பள்ளிக்கூடம் நன்றாக நடப்பதாக ஒப்புதல். அதற்குமேல் கதை வளரவில்லை. அல்லது அதைவளர்க்க அவர்கள் விரும்பவில்லையோ?

இன்ரேவல் முடிந்து மணி அடிக்கிறது. ஆசிரியைகள் ஒவ்வொருவராக நழுவுகிறார்கள், சொல்லிக்கொண்டும் சொல்லாமலும்: அவர்களது செய்கையைக் கண்டு, நானும் சொல்லிக்கொண்டு அவர்களை முந்துகிறேன்

கடைசியாக வாணி அவள் தான் பள்ளியின் அழகுராணி இளையவள். அதனால் சின்னச் சின்னப் பிள்ளைகள். தனக்கும் பிள்ளைகளுக்கும் சுகமில்லை என்று, வீட்டுத் தேவைக்கென்று அடிக்கடிலீவு தேவைப் படும். வீட்டுக்கு வெள்ளணப் போகவேண்டிவரும் அதற்காகவே என்னிடம் வந்து கெஞ்சுவாள்; குழைவாள்; சிரிப்பாள் அது தெரிந்திருந்தும், எனது ஈகோ 'வாணி உன்னிடம் மயங்குகிறாள்' என்று சொல்லும். நான் அதைத்தான் நம்புவேன். அவள் கேட்டு நான் எந்தச் சலுகையும் கொடுக்காமல் விட்டதில்லை. இப்பொழுது நானே அவளிருக்கும் வகுப்பறையைத் தேடிப்போகிறேன்.

என்னைக் கண்டதும் ஓடிவந்து சிரித்துச் சிரித்துப்பேசுகிறாள் வாணி. ஆனால் அதில் அந்தப் பழைய குழைவுஇல்லை மற்றவர்கள் கேட்ட அதே கேள்விகளும் எனது பதில்களும் பரிமாறப்பட்ட பின்பு தன்னைப்பற்றியும் தன் கணவன் பிள்ளைகளைப் பற்றியும் பேசத் தொடங்குகிறாள், வாணி. பெண்கள் தங்கள் குடும்பக் கதைகளைச் சொல்லத் தொடங்கினால்தான் அதற்கு முடிவே கிடையாதே! வழக்கமாக இப்படியான கதைகளை ஆர்வத்துடன் பொழுதுபோக்காகக் கேட்டுக் கொண்டிருக்கும் எனக்கு இப்பொழுதிருக்கும் மனநிலையில் எரிச்சல் வருகிறது.

"சரி வாணி, நேரமாகுது. நான் போட்டுவாறன்" என்று சொல்லி அந்தக்கதைக்கு முற்றுப்புள்ளிவைக்கிறேன். சரிசேர் போட்டுவாருங்கோ எங்களை மறந்து விடாதேங்கோ அடிக்கடி சந்தித்துக்கொண்டு போங்கோ என்று சொல்லி அவளும் விடைதருகிறாள்.

பாடசாலை விசிட் (visit) முடிந்தது. புறப்படுகிறேன் கடைசியாகப் பாடசாலைக் கட்டடியில் திரும்பிநின்று நான் கட்டுவித்தமாடிக்கட்டடத்தை ஒருமுறை நிமிர்ந்து பார்க்கிறேன். கம்பீரமாக உயர்ந்துநிற்கும் அந்தவெள்ளை அடிக்கப்பட்ட கட்டடம் என்னைப் பார்த்து, "பாடசாலை முழுவதும் எனது தோள்களில் தான் பொறுத்திருக்கிறது. நான் போய்விட்டால் எல்லாமே பொறிந்து சிதறிவிடும் என்று ஒரு காலத்தில் இறுமாந்திருந்தாயே? இப்ப பாத்தியா நீ நடத்தியதையும் விடத்திறமாகப் பாடசாலை நடக்குது! உன்னைப்பற்றி இப்ப யாரும் இஞ்சை சிந்திப்பதில்லை! இன்னும் சில வருடங்கள் போனால், நீ இருந்த சுவடே தெரியாமல் போய்

[ 14-ம் பக்கம் பார்க்க]

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

# ஒருவருக்கும் தீங்கு நினையாதே!

**வளரும் பயிருக்கு...**

**அ**பிமந்யு அருச்சுனனுக்குச் சுபத்திரை வயிற்றிற் பிறந்த பிள்ளை. பஞ்சபாண்டவர்க்கெல்லாம் ஒரு செல்லப் பிள்ளை; சௌந்தரிய குமாரன்; கிருஷ்ணனின் சாமர்த்தியம், அருச்சுனனுடைய பராக்கிரமம் இரண்டும் ஒருங்கு திரண்ட ஏக வீரன். தருமருடைய நீதிக்கும் திரௌபதியின் தெய்வ பக்திக்கும் அபிமந்யு ஒரு வரம்பு.

இத்துணைச் சிறந்த தவக் குழந்தையாகிய அபிமந்யு—வீரதிரன், பட்டப்பகலிலே, பஞ்சபாண்டவர்களுக்கு மத்தியிலே, ஆனால் அவர்களறியாமலே, எதிரிகளின் வஞ்சகச் சூழ்ச்சியினால்—தெய்வ வரம்பு கடவாமல், நீதிநெறி நின்று எதிரிகளைச் சொன்று குவித்துத் தானும் மடிகின்றான். எல்லாமறிந்த மாமன்—மாமாயன்—ஒன்றுமறியாதவன் போல்நடந்து கொண்டான்; நடித்துவிட்டான்.

அன்று மாலை பாண்டவர்களின் பாசறை ஒரு பெரிய மயான காண்டமாய் விட்டது. அலறுகின்றார்கள்; மரங்கள், செடிகள் கொடிகள் கூடக் கண்ணீர் விடுகின்றன. வீமன் கூட வாய்விட்டுக் குழறுகிறான். கண்ணபிரானும் கண்ணைக் கசக்கிப் பார்க்கின்றார்.

இந்தச்சமயத்திற் பெற்ற வயிறு என்ன செய்யும்? அருச்சுனன் நிலைமையை எப்படி விவரிப்பது! அக்கினியிற் குளிக்க அவன் ஆயத்தம் ஆகினான்; கள்ளக் கண்ணன் இந்திரன் மூலம் சூழ்ச்சிசெய்து முன் ஆயத்தங்கள் பண்ணித் தடுத்துக் கொள்ளுகிறான்.

அருச்சுனன் இனிச் செய்யத்தக்கது என்ன! எதிரிகளின்காதுகள் செவிடுபடும்படி சபதம் செய்கின்றான். கொடிய சபதம்! "இற்றைப் பகலில் என் மகனைக் கொன்றவனை, நாளைப் பகலில் நான் கொல்லேனாயின் அக்கினி எழுப்பி அதிற் குதித்து அந்த க்ஷணமே இறந்துபடுவேன். இது சத்தியம்! சத்தியம்!! முக்காலும் சத்தியம்!!!"

இது அருச்சுனனின் மகா சபதம், எதிரிகள் கூடத் திடுக்கிட்டார்கள். சராசரங்கள் மௌனம் பேசின. எங்கும் நிசப்தம்!

அன்றிரவு, ஆரும் அறியாமல் கிருஷ்ணன் அருச்சுனனை அழைத்துக்

**பண்டிதமணி**
**சி. கணபதிப்பிள்ளை**

கொண்டு கைலாசத்துக்குப் போகின்றான்; அடுத்தநாள் யுத்தத்துக்கு வேண்டிய நல்ல பாணங்களை கைலாசபதியிடம் வாங்கும் பொருட்டு இருவரும் போகின்றார்கள்; போய் விட்டார்கள்.

நித்திரை குழம்பி, அருச்சுனனிற் கண்ணுங் கருத்துமாயிருந்த தருமர் அர்த்தயாமத்தில் அருச்சுனனைக் காணாமல் திகைக்கின்றார்; விசாரித்துக் காரியத்தை ஒருவாறு அறிகின்றார். உடனே அவருக்குச்சின்னக் கோபம்கூட வந்தது! அப்பொழுதுஅவர் கேட்டது இதுதான்:

"நல்லது; கிருஷ்ணனும் அருச்சுனனும் செய்கின்ற இந்தஆயத்தங்கள், துரியோதனனுக்குத் தெரியுமா? தெரிவித்ததா?"

இதுதான் தரும புத்திரனுடைய—அறமே கரைகின்ற—திருநாவில் எழுந்த கேள்வி; இந்தக் கேள்வியைக் கேட்டு, வீமனே வெண்ணெய்யாய்ப் போனான்; தேவர்கள் புஷ்பமழை பொழிந்தார்கள்! தருமதேவதை உள்ளம்குளிர்ந்தது!

தருமர், வீமனுக்கு இடும்பி வயிற்றிற் பிறந்த கடோற்கசனை விழித்து, இந்த யாமத்திலே துரியோதனனுடைய பாசறைக்கு நீ போய், அவனைத் துயிலெழுப்பி, "அருச்சுனன் நாளை யுத்தத்துக்குச் செய்யும் ஆயத்தங்களை ஒன்றும் தப்பாமல்உரைத்து வா" என்றார். கடோற்கசன் பெரிய தந்தையின் பணியைத் தலைமேற்கொண்டான். அதற்குப் பிறகுதான் மகாத்மா ஆகிய தருமருக்குநித்திரைவந்தது.

'தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும் துன்னற்க தீவினைப் பால்'

என்கின்றார் திருவள்ளுவ தேவர்,

'உனக்கு உன்னிடத்திலே பற்று இருந்தால், மற்றொருவருக்குத் தீங்கு நினையாதே என்பது இந்தத் திருக்குறளின் சாரம்.

தரும புத்திரருக்குத் தாமும் தம்பிமாரும், இராச்சிய பரிபாலனஞ் செய்து கொண்டு வாழ்வதில் நல்ல ஆசை. ஆனால், அந்த வாழ்க்கையைத் துரியோதனனை வஞ்சித்தோ, சூழ்ச்சி செய்தோ அந்தரங்க முறையில் அடைவதை—அநுபவிப்பதை அந்தப் புண்ணியமூர்த்தி எள்ளத்தனையும் விரும்பவில்லை.

நன்றி: சி. சதாசிவம்
(தனலக்குமி புத்தகசாலை)

# வந்தது மின்

(தமிழ் நிலா, தேன்மொழி, இளவழகன் ஆகியோர் வீட்டில் இருக்கிறார்கள். ஒருவர் வானொலி கேட்கிறார். மற்றவர் உடுப்பை அழுத்துகிறார். அடுத்தவர் மின் விசிறியின் கீழ்ப்படுத்திருக்கிறார். அறிவழகனைக் கூட்டிக் கொண்டு வீட்டிற்கு வருகிறார் அன்பரசன்).

(நடந்து வந்தவர்கள் ஓரிடத்தில் நின்று கதவைத் தட்டுவது போலவும் உள்ளே வானொலி கேட்டுக் கொண்டிருந்தவர் எழுந்து வந்து கதவு திறக்க இவர்கள் உள் நுழைந்து கதிரைகளில் அமர்வது போலவும் ஊமம் நிகழ்தல்).

**அன்பரசன்:** நிலா, புதியவர் ஒருவரை நான் இங்கு அழைத்து வந்திருக்கிறேன்.

**தமிழ்நிலா:** யாரென்று தெரியவில்லை.

**தேன்மொழி:** எங்களுக்குப் பாடசாலையும் ஒழுங்காக நடக்காத இந்த நேரத்தில்...புதியவர்கள் வந்தால் கதைத்துப் பொழுதைப் போக்கலாம்.

**அன்பரசன்:** பொழுதுபோவது மட்டுமல்ல... இவரோடு கதைத்தால் புதிய விடயங்களை அறியலாம்.



**இளவழகன்:** அப்படி என்றால்...இரட்டை இலாபம்.

**அன்பரசன்:** ஆம்...இவரது பெயர் அறிவண்ணன். இவரோடு உரையாடுவது இன்பம்.

**அறிவழகன்:** வணக்கம். உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி ... தமிழ்நிலாவும், தேன்மொழியும் அன்பரசனின் சகோதரிகள் என்று முகம் சொல்கிறது...இளவழகன்...?

**அன்பரசன்:** அவர் அயல் வீட்டு நண்பர்.

**தமிழ்நிலா;** அவரது பரம்பரையே நல்ல புத்தி ஜீவிகள்.

**தேன்மொழி.** ஓம் அவருடைய பாட்டாவைப்பற்றி ஒரு கதை... மோட்டார்க் கார் இலங்கைக்குப்புதிதாக வந்த காலத்தில் வாழ்ந்தவர். ஒரு நாள் தெருவிலே கார் வருவதைக் கண்டு உள்ளே ஓடி ஒளித்து விட்டாராம்.

**தமிழ்நிலா:** பாட்டி என்ன விஷயம் என்று கேட்டாவாம்.

**தேன்மொழி:** அது ...றையில் குட்டி அறுத்துப் போட்டுத்தண்டவாளத்தை விட்டு, றோட்டில் ஓடிவருகிறது என்று சொன்னாராம் பாட்டா.

**அன்பரசன்:** அப்படியான பரம்பரை அவர்...

**இளவழகன்:** உங்களுக்குத் தருவேன் முறையாக... இவர் போகட்டும்.

(எல்லோரும் சிரித்து அடங்கிய பிறகு)

**அறிவழகன்:** நாங்கள்வரும் போது நீங்கள் மூவரும் ஒவ்வொரு மின்சார உபகரணத்தைப் பாவித்துக் கொண்டிருந்தீர்கள்.

**இளவழகன்:** ஓம்...வானொலி மின் அழுத்தி, மின்விசிறி,

**அறிவழகன்:** இந்த மின்னுக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

**அன்பரசன்:** எலெக்ரிசிற்றி.

**அறிவழகன்:** 'பழையகிரேக்க பெயரான எலக்ரோனில் இருந்துதான் எலெக்ரிசிற்றி என்ற பெயர் வந்தது.

**தேன்மொழி;** இதுஎப்போது கண்டு பிடிக்கப் பட்டது அண்ணா?

**அறிவழகன்;** கி.மு 600இல் இதுகண்டுபிடிக்கப்பட்டது.

**தமிழ்நிலா.** மின் விளக்கு வானொலி, தொலைபேசி, குளிர்சாதனப்பெட்டிஇவை எல்லாம் 20-ம் நூற்றாண்டில் தானே பாவனைக்கு வந்தன?

**அறிவழகன்:** ஆம், மின் இயக்க சாதனங்கள் நடைமுறைக்கு வர 2500 ஆண்டுகள் எடுத்தன.

**அன்பழகன்:** மின்சாரத்தை முதல்கண்டது யார் அண்ணா?

**அறிவழகன்:** கி மு 600இல் தால்ஸ் என்ற கிரீஸ் விஞ்ஞானி ஒரு அம்பர் துண்டைக் கொண்டு மின்சாரத்தைக் கண்டுபிடித்தார்.

**இளவழகன்:** 'அம்பர்' என்றால் என்ன?

**விழிசைக்குயில்**

**அறிவழகன்:** முதிர்ந்த 'பைன்' மரத்தில் இருந்து வடியும் பால், கல் மாதிரி இறுகி விடும்.

**தேன்மொழி:** அதை ஏன் எடுத்தார் தால்ஸ்?

**அறிவழகன்:** தால்ஸ் காலத்தில் இந்த அம்பரை விலை கொடுத்து வாங்கி நகைகளில் வைப்பார்களாம். ஒரு நாள் அவர் ஒரு அம்பர் துண்டைத் தன் போர்வையில் தேய்த்துப் பார்த்தார்.

**இளவழகன்:** ஒரு வேளை அதை மெருகேற்றத் தேய்த்திருக்கலாம்.

**அறிவழகன்:** இருக்கலாம் அப்போது அதில் உண்டான பொறிகள் அவரை வியப்பில் ஆழ்த்தின. நன்கு ஆராய்ந்து அந்தச் சக்தியானது அம்பரில் மட்டுமே இருப்பதாக முடிவு செய்தார். அதற்கு 'எலக்ரிசிற்றி' என்று பெயரிட்டார்.

**அன்பழகன்:** தால்ஸ்ஸுக்கு யாரும் பரிசு கொடுத்தார்களா?

**அறிவழகன்:** கொடுத்ததாகத் தெரியவில்லை ஏனெனில் அவர் இதைச்சொல்லி 2000 ஆண்டுகளின் பின்னும் மக்கள் அதைப்புரிந்து கொள்ளவில்லை.

**இளவழகன்:** அப்படியா?

**அறிவழகன்:** ஆம் கி. பி 1600இல் தான் சேர் வில்லியம் கில்போட் என்ற ஆங்கிலேய விஞ்ஞானி அம்பர் மட்டுமன்றி கண்ணாடி, கந்தகம், வைரம்ஆகி

[14-ம் பக்கம் பார்க்க]

# அரிஸ்டோட்டில்

**கி**.மு. 366ஆம் ஆண்டில் ஒரு நாள் மாலை பதினெட்டு வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் ஏதென்சின் வீதிவழியே நடந்து வருகிறான். அவன் ஏதென்ஸ் நாட்டவன் அல்லன் என்று ஊகிக்க முடிகிறது. ஒவ்வொருவரும் அவனை ஏற இறங்கப் பார்க்கின்றனர்.

'பேராசான் பிளேட்டோ (Plato) வின் வீட்டுக்கு வழி காட்ட முடியுமா?'—இளைஞன் வழிப்போக்கன்' ஒருவனைக் கேட்கிறான்.

'எங்கேயிருந்தப்பா வருகிறாய்? பிளேட்டோ ஊரில் இல்லை என்ற விஷயம்

**உதங்கா**

கூடத் தெரியாதவனாக இருக்கிறாயே' இது வழிப் போக்கன்.

'என் பெயர் அரிஸ்டோட்டில் (Aristotle) மெசிடோனிய அரசன் பிலிப்பின் அரச வைத்தியன் நிக்கோமாக்கஸ், Nico-mackus) என்பவரின் மகன். ஸ்ராஜிரா (Stagira) வில் இருந்து தத்துவம் படிக்க இங்கு வந்தேன்' என்றான் இளைஞன்.

'பேராசான் பிளேட்டோ ஊரில் இல்லை எனினும் அவரது வீட்டைக் காண்பிக்கிறேன்' என்று கூறி வழிப்போக்கன் பிளேட்டோவின் வீட்டைக்காட்டி விட்டுச் செல்கிறான்.

பிளேட்டோ திரும்பி வர மூன்று வருடங்கள் எடுத்தன. இளைஞன் அரிஸ்டோட்டில் அதுவரையும் சும்மா இருக்கவில்லை. இளைஞனுக்கான கேளிக்கைகளில் ஈடுபடவும் இல்லை. ஏதென்சில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கினான்; தத்துவம் சம்பந்தமான அறிஞரின் நூல்களை வாங்கினான்; சிறந்த நூலகமே அமைத்துவிட்டான்.

அரிஸ்டோட்டிலுக்கு வாசிப்பதில் அலாதி விருப்பம். அதிக நேரம் இருந்து நூல்களை வாசிப்பான். நித்திரை தனது வாசிப்பை குழப்பிவிடுமே என்பதற்காக இவன் நித்திரையின்றிப் படிக்க ஒரு வசதி செய்திருந்தான். வாசிக்கும் போது ஒரு கையிலே கல் ஒன்றைக் கட்டித்தொங்க விடுவான். ஒரு வெண்கலப் பாத்திரம் கீழே இருக்கும் நித்திரை வரும்போது அக்கல் பாத்திரத்தின் மேல் விழுந்து பேரொலியை எழுப்பும். நித்திரை குழம்பி விடும் தொடர்ந்து படிப்பான் அரிஸ்டோட்டில்

'பிளேட்டோ நாடு திரும்பியதும் அவரது கல்விக் கூடத்தில் இருபதாண்டுகள் பயின்றான். பிளேட்டோ இறந்த பின்னர் அக்கல்விக் கூடத்தின் தலைமைப் பதவியை அரிஸ்டோடில் ஏற்கவில்லை பிளேட்டோவின் எல்லாக்கருத்துக்களையும் அரிஸ்டோட்டில் ஏற்கவில்லை என்பதே அதற்குக் காரணம்.

மிருகங்களின்சரித்திரம் (History of Animals) என்ற நூலை அரிஸ்டோட்டில் எழுதினார். இதுவே உலகில் முதன் முதலில் எழுதப்பட்ட விலங்கியல் நூல்.

இளவரசன் அலெச்சாண்டரின் (Alexender) குரு அரிஸ்டோட்டிலே. அலெச்சாண்டர் சிம்மாசனமேறியதும் ஏதென்ஸில் லைசியம் (lyce-um) எனும் சர்வகலா சாலையை நிறுவினார்.

பலதிறப்பட்ட அறிவு நூல்களை அரிஸ்டோட்டில் எழுதினார். சிகரம் என எண்ணக்கூடியது அறநூல் (Ethics). இது நன்னடத்தையைப்பற்றிய நூல்.

அரிஸ்டோட்டிலின் சிறப்புக்கண்டு பொறாமையுற்ற ஏதென்ஸ் நகரமக்கள் இவர் இளைஞர்களைக் கெடுக்கிறார் என்றும், தெய்வ நிந்தை செய்கிறார் என்றும் குற்றம் சாட்டினர். எனவே ஏதென்ஸை விட்டு வெளியேறி ஓராண்டின் பின்னர் பரிதாபத்துக்குரிய முறையிலே தனிமையில் மரணமானார் ஆனால் அவரது சிந்தனைகளோ இன்றுவரையும் நிலைத்து நிற்கின்றன.

## மனைவியின் யுக்தி

ஒரு கமக்காரன் தனது தோட்டத்தைப் பணக்காரன் ஒருவனிடம் அடகு வைத்தான். கிடைத்த பணத்திற்குக் கமம் செய்தான். அவ்வாண்டு மழை பெய்யவில்லை; பயிர் அழிந்தது. துக்கமடைந்த கமக்காரன் ஆண்டவனின் செயல் எனக்கருதி மறுபடியும் தனது வீட்டைப் பணக்காரனிடம் அடகு வைத்தான். தனக்குக் கிடைத்த சிறு தொகைப் பணத்திலே நிலத்தைப் பண்படுத்திச் சந்தன மரங்களைப் பயிரிட்டான். சந்தன மரங்கள் நன்கு செழித்துவளர்ந்தன.

சந்தனக்கட்டைகளை வெட்டிச் சந்தைப்படுத்துவதெனக் கமக்காரன் திட்டமிட்டான் அப்போது பணக்காரன் வந்தான். 'நீ சொன்ன தவணை தீர்ந்து பல மாதங்களாயின. எனது கடனை அடைக்கவில்லை. எனவே வீட்டை விட்டு வெளியேறு' என்று கூறினான். கமக்காரன் எவ்வளவோ மன்றாடினான். ஆனால் பணககாரனே 'இக்கட்டைகள் காய இரண்டு கிழமை செல்லும். அதுவரை நான் பொறுக்க முடியாது. விட்டை விட்டு வெளியேறு இல்லாவிடில் உனது சந்தனக்கட்டைகளை எனக்குத் தந்து விட்டு அதற்குப் பதிலாகச் சந்தனக் கட்டையை விட விலை குறைந்த பொருளை நீ கேட்டுப் பெற்றுக் கொள் கட்டைகளின் நிறைக்குச் சமனான நிறையுள்ள பொருள்களைத் தருவேன் என்றான். கமக்காரன் எனது சந்தனக்கட்டைகளின் நிறையளவான அதைவிட மலிந்த பொருள்களை வாங்குகிறேன் எனத் துக்கத்துடன் சம்மதித்தான்.

கமக்காரன் வீடு சென்று தன் மனைவியிடம் பணக்காரனிடம் தான் ஏமாந்து விட்டதைக் கூறினான். அவளோ, 'ஏமாந்தது நீங்கள் அல்ல பணக்காரன் தான். நீங்கள் உங்கள் சந்தனக்கட்டைகளின் நிறைக்குச் சரியான பஞ்சைத் தா என்று பணக்காரனைக் கேளுங்கள்' என்றாள்.

கமக்காரன் பணக்காரனிடம் மனைவி சொன்னபடி கேட்டான். பணக்காரன் திகைத்தான். 'சந்தனக்கட்டைகளை விற்றுக் கடனை அடை' என்று மன்றாடினான்.

கமக்காரனும் மகிழ்ந்து சந்தனக்கட்டைகளை நல்ல விலைக்கு விற்றான். பணக்காரனிடம் பட்ட கடனை அடைத்து விட்டுப் பெருஞ் செல்வனாய் வாழ்ந்தான்.

சி.சிவரூபன்
அ.இல.267

## நொடிகள்

1. வட்டவட்டச் செப்பிலே இட்ட தெல்லாம் பாம்புக்குட்டி
2. எங்கள் தம்பி வித்துவான், காதிலே பிடித்தால் கத்துவான்
3. கிடங்கைக் கிண்டு கட்டையைப் போடு கிடங்கைத்தூக்கலாம் கட்டையைத் தூக்கேலாது
4. ஓடுவான் உலாவுவான் ஒற்றைக் காலில் நிற்பான்
5. தேரோடி வருகுது பூப்பூவாய்ச் சொரியுது

1. இடியப்ப உரல்
2. வானொலிப்பெட்டி
3. விரலும் மோதிரமும்
4. கதவு
5. திரிகை



## சின்னஞ் சிறு சிட்டுக்களே!



இந்தத் தாத்தாதான் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் உங்களுக்கென்றே பாடல்கள் பல எழுதியவர்.

உங்களுக்கென்றே அவர் வெளியிட்ட நூல் சிறுவர் செந்தமிழ்.

''பருத்தித்துறை ஊராம் பவளக் கொடிபேராம்'' என்று தொடங்கி இலவு காத்த கிளியின் கதைவரை உங்களுக்குச் சொல்லியிருக்கிறார் ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ......கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம் கொழுக்கட்டைதின்னலாம் தோழர்களே! என்று வாய் மணக்க வாயினிக்க பாடிய இந்தத்தாத்தாவுக்கு வெள்ளிக்கம்பிகள் போன்ற நீண்ட தாடி; ஆளோ தங்கக் கம்பி.

வாலைக்கிளப்பிக் கொண்டோடின மாட்டையும் மாட்டை விரட்டிய வெருளியையும் தாத்தா கத்தரி வெருளி என்ற தலைப்பிலே பாடியிருக்கிறார். அவருடைய பாடல்களை உங்கள் அப்பா அம்மா நிச்சயம் படித்திருப்பார்கள். அவர்களைப் பாடும்படி கேட்டுச் சேர்ந்து பாடியாடுங்கள்.

## விடு இரண்டு விடை ஒன்று

1. எருக்கிலை பழுப்பதேன்?
   இடையர் குடிபோவதேன்?
2. குழந்தைப் பிள்ளை அழுவதேன்?
   திண்ணைக் குந்து இடிவதேன்?
3. பாம்போடுவதேன்?
   பாழ்ங்கிணறு இடிவதேன்?
4. வாழை குலை போடுவதேன்?
   மாதர்கொண்டை முடிப்பதேன்?
5. கீரைநிலத்தில் விதைப்பதேன்?
   கிழோர் செல்வரைச் சுற்றுவதேன்?
6. சீதையை ராமன் பிரிந்ததேன்
   துரியோதனன் துயர் அடைந்ததேன்?
7. குதிரைமிகவும் கொழுப்பதேன்?
   குவிந்த செல்வம் அழிவதேன்?
8. கயிறு முறுக்கேறுவதேன்?
   கல்வி எங்குஞ் சிறப்பதேன்?

1. பால்வற்றி
2. திற்றுவாரற்று
3. அடிப்பாரற்று
4. சிப்பையிட்டு
5. நோவாமற்பறிக்கத்தின்ன
6. அம்மானையிட்டு
7. கொள்ளையிட்டு
8. நூலையிட்டு

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்:- ..........................................

வயது:- ..........................................

பாடசாலையின் பெயர்:- ..........................................

கல்விகற்கும் வகுப்பு: ..........................................

விட்டு முகவரி: ..........................................

கையொப்பம்: ..........................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.......................... ..........................
திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினன்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றுக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

## எங்கள் பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
கதைகள் சொல்வாள் பாட்டி
கூட்டமாக இருந்தே
கேட்டுச் சிரிப்போம் நாங்கள்

இனிப்புப் பண்டம் தருவாள்
இனிய வார்த்தை சொல்வாள்
எனக்கு வேண்டும் எல்லாம்
என்றும் தருவாள் பாட்டி

அம்மா அப்பா போல
அன்பு செய்யும் பாட்டி
நம்மை அன்பு வழியில்
நடக்கச் செய்வாள் பாட்டி

சி. யசோதரன்

## பூந்தோட்டம் அங்கத்தவர்

இலக்கம் 341 தர்ஷிகா கணேசலிங்கம்
வயது 11, இந்துமகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்

இலக்கம் 342 குலசேகரம் கனகேஸ்வரன்
வயது 12, உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

இலக்கம் 343 நவரத்தினம் சூரியப்பிரகாஸ்
வயது 12, யூனியன் கல்லூரி தெல்லிப்பழை

இலக்கம் 344 சுவேந்தினி சோமசுந்தரம்
வயது 12, சாவகச்சேரி இந்துக் கல்லூரி

இலக்கம் 345 பரராஜசிங்கம் றஜந்தினி
வயது 11, இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்

இலக்கம் 346 இராசரத்தினம் வசந்தரூபன்
வயது 13, சைவ மகாஜன மகா வித்தியாலயம் இணுவில்

இலக்கம் 347 தங்கமயில் இ கருணாகரன்
வயது 12, சாவகச்சேரி இந்துக் கல்லூரி

இலக்கம் 348 ஆறுமுகம் அருள்சோதி
வயது 11, சுந்தரமூர்த்தி நாயனர் வித்தியாலயம் காரைநகர்

இலக்கம் 349 தேவகாந்தன் மதிவதனி
வயது 09, அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இராமநாதபுரம் வட்டக்கச்சி

இலக்கம் 350 தேவகாந்தன் காந்தவதனி
வயது 12, நாவலர் இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயம் கோப்பாய்

இலக்கம் 351 வசந்தரூபி தெய்வேந்திரராஜா
வயது 12, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

இலக்கம் 352 சிவபாதம் அபிராமி
வயது 06, புலோலி தமிழ்க் கலவன் பாடசாலை மந்திகை.

இலக்கம் 353 விஜிதாம்பாள் இராமச்சந்திர சர்மா
வயது 11. உருத்திரபுரம் மகா வித்தியாலயம் உருத்திரபுரம்

இலக்கம் 354 இராசகோபாலன் அபிராமி
வயது 13, வீமன்காமம் மகா வித்தியாலயம் தெல்லிப்பழை

இலக்கம் 355 கதிர்காமு பிரபாகரன்
வயது 13, கனகரத்தினம் மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம்

இலக்கம் 356 இன்பலதா இரத்தினம்
வயது 12, வீமன்காமம் மகா வித்தியாலயம் தெல்லிப்பழை

இலக்கம் 357 றகு சிந்தாமணி
வயது 12, மயிலிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்

இலக்கம் 358 துரைரத்தினம் ஜயதிபன்
வயது 13, ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை

இலக்கம் 359 சீமாம்பிள்ளை ஆன் காமெல்
வயது 10, றோமன் கத்தோலிக்க கனிஷ்ட பாடசாலை மிருசுவில்

இலக்கம் 360 ஆச. அவராஜா பிரசாந்தி
வயது 11, காங்கேயன்துறை மகாவித்தியாலயம்

இலக்கம் 361 யசோதா சிவப்பிரகாசம்
வயது 11, பூநகரி- நல்லூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பூநகரி

இலக்கம் 362 கதிர்காமநாதன் சடகோன்
வயது 11, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் கரவெட்டி

இலக்கம் 363 ஜெயவேல்சிங்கம் கிருஷ்ணகாந்தன்
வயது 10, காங்கேயன்துறை மகா வித்தியாலயம்

இலக்கம் 364 கணபதிப்பிள்ளை விஜிதினி
வயது 11, சென்ற் ஜோஸெஃவ் மகா வித்தியாலயம் மாதகல்

இலக்கம் 365 சிவபாதம் விஷ்ணுவர்த்தன்
வயது 12, ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடை

# 28



# இந்துபோர்ட் இராசரத்தினம்

## காலமும் வாழ்வும்

க.சி.குலரத்தினம்

## கருமமே கருதி வாழ்ந்தவர்

இந்துபோர்ட் இராசரத்தினம், அப்புக்காத்தர் இராசரத்தினம், கௌரவ இராசரத்தினம், மனேச்சர் இராசரத்தினம் என்றெல்லாம் வழங்கச் செந்தமிழ்ப் பரிபாலனமும், சைவபரிபாலனமும் செய்துவந்த இராசரத்தினம் அவர்கள் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றபோதும், அரசாங்க சபைத் தேர்தலில் தோல்வி கண்டபோதும் ஒரே மனநிலையிலிருந்தார்.

பின்னர் பதின்மூன்றுண்டுகளின் பின் வந்த பாராளுமன்றத் தேர்தலில் தமது சொந்தவூரில், சொந்தத் தொகுதியில் தேசியம் பேசித் தோல்விகண்டவர். முன்னர் தளராதவர் பின்னரும் தளராமல் வெற்றியும், தோல்வியும் எம்மைப் பொறுத்தனவல்ல எனக்கருதி அசையாதிருந்தவர். அவர் 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் தோல்வி கண்ட பின், அரசியலில் தமது தேசியப் போக்கை விடாது, மிகையபிமானிகளிடையேயும், தீவிரவாதிகளிடையேயும் வெறுப்புணர்ச்சியின்றி சைவவித்தியாவிருத்திச் சங்கத்தை வளர்ப்பதிலேயே கருத்தாக இருந்தவர். அவர் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தையும், சைவச்சிறுவர் இல்லத்தையும் தம்மிருகண்களெனவே கவனித்து வந்தவர்.

இலங்கையில் செந்தமிழ் வளர்த்த சங்கங்களாயினும், சைவசமயம் வளர்த்த சபைகளாயினும் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தைப் போல ஆயிரக்கணக்கான அபிமானம் மிக்க அங்கத்தவர்களைக் கொண்டியங்கவில்லை.

நாட்டில் நிலவிய பல மதத்தவர் பாடசாலைகளுள் சைவசமயஞ் சார்ந்த சங்கப் பாடசாலைகளே தொகையிற் கூடியனவாக இருந்தன. சைவவித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலைகள் நாடெங்கும் வியாபகமாகப் பரந்திருந்தன. படிப்பின் தரமும் இப் பாடசாலைகளில் உயர்வாகவே இருந்தது. நூற்றுக்கணக்கான பாடசாலைகளை நடத்துவதற்கும், சிவன் பிள்ளைகளாய சைவச்சிறுவர் சிறுமியர்களை வளர்ப்பதற்கும் இராசரத்தினம் அவர்கள் சைவப்பொதுமக்களிடம் கை நீட்டிக்கேட்ட தொகை, நாளொன்றுக்கு மூன்று சதமேயாகும். இதனை நாள்தோறும் கொடுக்க வசதியில்லாதவர்கள், மாதமொரு ரூபா கொடுக்கலாமென்றார். அதுவும் சிரமமாயிருக்குமாயின் வருடந்தோறும் பத்து ரூபா கொடுத்தால் போதுமென்றார்.

சைவத்தை வளர்ப்பதற்காக அவர்கள் இரந்தவர். எது கொடுத்தாலும்ஏற்றவர். ஆனால் அவர்மீது மக்கள் கொண்டிருந்தமதிப்புக்காரணமாகச் சிலர் ஆயிரக்கணக்காகவும் சிலர் நூற்றுக்கணக்காகவும் கொடுத்து வந்தனர். சைவவித்தியா விருத்திச் சங்கத்தில் ஆயிரக்கணக்கானோர் அங்கத்தவராயிருந்தனர். அவர்களுள் எவரும் பணிப்பாளராகவும் இருக்கலாம் என்னும் வசதியும் நிலவியது சாதாரண ஆசிரியர்கள் பாராளுமன்ற அங்கத்தவர்களாயும் மந்திரிகளாயும் இருக்கலாம் என்பது சனநாயக உரிமையானல், ஏன் சாதாரண ஆசிரியர்கள் பணிப்பாளர்களாயிருத்தலாகாது என்பது இராசரத்தினம் அவர்களின் தீர்ப்பு. நல்லாசிரியர்கள் சிலர் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தை நடத்தி வந்தார்கள்.

பரமேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த அருணசலம் மகாதேவா வெள்ளையரான கோடன்பியஸ், நடேசபிள்ளை, கலாநிதி ஆறுப்பிள்ளை கந்தையா இராமநாதன்—கல்லூரியைச்சேர்ந்த கதிரித்தம்பி சுவாமிநாதன், சைவப்பெரியர் புலோலி சிவபாதசுந்தரனர், உடுவில் சபாரத்தினசிங்கி, மானிப்பாய் வீரசிங்கம், இந்துக்கல்லூரி வெங்கடராமன், தில்லையம்பலம் முத்துக்குமாரு, மயிலிட்டி சுவாமிநாதன், பருத்தித்துறை சிவகுருநாதன், பருத்துறைவித்துவான் கந்தசுவாமி, கந்தமடம் வைத்தியர் இராசையா முதலானோர்கள் பெரிய ஆசிரியர்களாயும் சின்ன ஆசிரியர்களாயும் பல்வேறு முகாமைகளில் பணிபுரிந்தவர்களேயாவர்.

இங்ஙனமாக ஆசிரியர்களேயன்றி வர்த்தகர்கள் வழக்கறிஞர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் முதலாயபலரும் எங்கள் சங்கம் எங்கள் சங்கம் என்று மங்களம் பாடி மகிழ்ச்சிகரமாகக் கூடிச்சங்கம் வளர்த்த சான்றோராயினர்.

சங்கம் வளரப்பாடசாலைகள் பெருக முழுமூச்சாக முக்கரண சுத்தியோடு முன்னின்றுழைத்த வட்டுக்கோட்டை மு சி இராசரத்தினம் அவர்களைப்பற்றித் தனிக்கட்டுரையாகத் தனியாக எழுதிப் பாராட்டவேண்டும். தாமே தம் சொந்த முயற்சியால் தமது ஊரில் தனியான முறையில் தரமான பாடசாலையை நிறுவிய அவர் பெருமைபெரிது. அவர் மகாநுபவார்.

இனி அக்காலத்துச் சட்டத்தரணிகள் வரிசையில் சங்கம் வளரச் சைவம் வளரத் தாராளமாகக் கொடுத்தவர் வரிசையும் பெரிதாகும். பட்டணத்தில் அண்ணனும் தம்பியுமான நல்லையா என்னும் பெயர் பெற்றவர்கள், வண்ணை பதஞ்சலி, நீராவியடி ஐயாத்துரை, கந்தர்மடம் குமாரசுவாமி நல்லூர் அரியகுட்டி, வல்வெட்டி அப்பாத்துரை, அரியாலை கதிரவேலு, வண்ணை கணபதிப்பிள்ளை, கொடிகாமம் கார்த்திகேசு, வண்ணை ஏ. வி. குலசிங்கம், கொழும்பு நடராசா, நீதியரசர் நாகலிங்கம், ஜி. ஜி. பொன்னம்பலம், பருத்தித்துறை பொன்னையா, ஸ்பென்சர் இராசரத்தினம்,கொழும்பு சிவசுப்பிரமணியம், ஏ. ஆர். சுப்பிரமணியம், அரியாலை ஆர். சுப்பிரமணியம், பருத்துறை தனபாலசிங்கம் முதலானோர் சிலராவர்.

சங்கத்தின் ஆரம்ப காலத்தில் அதன் வளர்ச்சியின் பொருட்டு அள்ளிக் கொடுத்த வள்ளல்கள் வரிசையில் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களின் பெயரே துலக்கமாக விளங்குகின்றது. சங்கத்துக்காகக் கடல் கடந்து சென்று கை நீட்டிக் காசு சேர்த்தவர்கள் வரிசையில் வைத்திலிங்கம் விஜயரத்தினம் (சேர். துரைசுவாமி அவர்களின் அண்ணன்) பெரிய விண்ணனுய் இருந்தவர். ஒருகாலத்தில் சங்கம் 12000 ரூபா சேர்த்தபோது, அரசாங்கம் 74000 கொடுத்ததும் உண்டு.

முதலாம் பாராளுமன்றம் ஆரம்பமான 1947 ஆம் ஆண்டின் பின் வந்த பதின்மூன்றுண்டுக் காலமும் இராசரத்தினம் அவர்கள் நாட்டின் அரசியல் நிலைமைகளை ஒதுங்கியிருந்து அவதானித்து வந்த காலமாகும் ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர். அவசர அவசரமாகக் கூடிஅரசாங்கம் அமைத்ததும் அதில் நம்மவர் சிலர் சேர்ந்து அதிகலாபம் பெற்றதும், அநியாயமாக மலையகத் தமிழர் தம் வாக்குரிமையைப் பறிகொடுத்ததும், தமிழர் ஒன்றிணைந்திருந்த பலம் குறைந்ததும், தமிழர் படிப்படியாக ஒதுக்கப்பட்டு வந்ததும், எல்லாம் காலப் போக்கில் நிகழ்ந்த நிகழ்வுகளாகும்,

''சிறுத்தன பெருக்கும், பெருத்தன சிறுக்கும், தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்'' என்றொருவர் பாடினற் போல மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறு சம்பவங்கள், வந்து தோன்றின முதற் பாராளுமன்றத்தின் 'லீடர்' என்னும் சபை முதல்வராயிருந்த பணடாரநாயக அவர்கள், உள்ளூராட்சி,சுகாதார மந்திரியாராயிருந்தும் நாடறிந்த பெரியவராயிருந்தும், ஒக்ஸ்போட் பல்கலைக் கழகப் பெரும் பட்டதாரியாயிருந்தும், ஏற்கெனவே ஒரு கட்சியின் தலைவராயிருந்தும், சகபாடிகளான மந்திரிகளாலும் முதல் மந்திரியாராலும் மானசிகமாகஒதுக்கப்படட்டு வந்ததும், அவர் அதனைக் கருதி மனம் புண்பட்டு ஆளும்கட்சி வரிசையை விட்டு, மந்திரிப் பதவியை உதறிவிட்டு எதிர்க் கட்சி வரிசையை அலங்கரித்தமையும் அரசாங்கத்தின் போக்குத் தவருன வழியில் ஓரினவழியிலேயன்றி ஒரு குடும்பத்தார் வழி திசைதிரும்பியமையைத் தெற்றெனக் காட்டியது.

அடுத்த பிரதமராக வரவேண்டிய சபை முதல்வர் இவ்வாறு நிலை பெயர்ந்ததும் முதன் மந்திரியார் தாமுண்டு தம் குடும்பத்தாருண்டு,சாணக்கியர் போன்ற நண்பர்களுண்டு என்று தடித்தனமாகத் தமிழொதுக்கும் கோட்பாட்டில் செல்லநடை நடந்தபோது.ஒருநாள் குதிரையேறி உலாப்போந்த வழியில் குதிரை மீதிருந்து வீழ்ந்து மூச்சை தெளியாமலே மறைந்தார்.

அவர் மறைந்ததும் அடுத்து முதன் மந்திரியாராய் வரவேண்டிய சபை முதல்வர் கொத்தலாவல அவர்கள், தம்மைத் தேசாபதி அழைப்பார் என ஆயத்தமாயிருந்த வேளையில், சாணக்கியர்களின் கபடத்தால் இவருரிமை தவிர்க்கப்பட்டதும், பிரதம பதவிக்கு இறந்த பிரதமரின் மைந்தனே தந்தைக்குப் பின் மைந்தன் அரசுரிமை ஏற்ற வகையில் பிரதமரானர்.

புதிய பிரதமர் தம் குடும்பத்தின் செல்வாக்கையும் கட்சியின் அதிகாரத்தையும் மக்களிடை காட்டி அவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டி 1952-இல் தேர்தல் நடத்தியதும் அதில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததும் அதனைக் கொண்டு நடத்த முடியாமல் விலகியதும் அவ்விடத்தில் கொத்தலாவல பிரதமரானதும், தாம் கொண்டகுதூலத்தில் நாட்டின் அரசாங்க மொழி சிங்களமேயெனக் கல்யாணபுரம் என்னும் கழனியாவில் கோலாகலமாக விழாவெடுத்து 1956 இல் தேர்தல் நடத்தியதும், அதில்அவர் படுதோல்வி கண்டதும், முன்னர் 1951 இல் எதிர்க்கட்சி வரிசை புகுந்த பண்டாரநாயக வெற்றியீட்டி ஆட்சிப்பொறுப் பேற்றதும் எல்லாம் இராசரத்தினம் அவர்கள் கண்டு வந்தார்.

இவ்வாருக முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியினர் சிங்கள மொழியே அரசமொழியென விழாவில் ஊதிய சங்கினை, அடுத்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினராய பண்டாரநாயக பாராளுமன்றத்திலே ஊதி நிறைவேற்றியதும், அதனுலும் முன்னர் ஐக்கிய தேசியக்கட்சியினர் தமிழர் பிரதேசமெங்கும் வேண்டுமென்று திட்ட மிட்டுச் சிங்களக் குடியேற்றங்களை உண்டாக்கியமையும் நாட்டை வெகுவாக கலக்கின. நாடு பிளக்க வேண்டிய நிலைமை உருவாகிய போதும், நல்லியல்புள்ள தமிழர் பொறுத்திருந்தோம். இன்னும் பொறுப்போம் நாட்டின் அரசியலமைப்பை மாற்றினுற் போதும் என்று குறை"ரந்தும் கெஞ்சியும் வந்த போது, ஆட்சியாளர் கொழுக்கட்டையும் மோதகமும் ஒன்றுதான் என்று காட்டி வந்தனர். ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழரைசூழ் சமைப்பதில் ஒன்றிணைந்தவரே என்று காட்டினர். தாய்மொழி வேண்டும் தாய்மண் வேண்டும் என்று தமிழர் தவித்தார்கள்,

பழைய சஞ்சித வினையும், கொண்டு வந்த பிராரத்துவ வினையும் ஈட்டிய ஆகாமிய வினையும் எல்லாம் ஒன்றிணைந்து விளைந்து வேலை செய்த போது பிரதமரானபண்டாரநாயக தம்மவராலேயே பட்டப்பகலில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

பண்டாரநாயகவின் ஆட்சியில் கல்வி மந்திரியாயிருந்த தகநாயக பௌத்த பிரிவேணுக்ளாய வித்தியோதய, வித்தியாலங்கார பீடவகளைப் பலரும் புகழப் பல்கலைக்கழகங்களாக்கியபோது, பண்டைத்தமிழரின் பாரம் பரியத்தைப் பேணுவதற்கு 25000 சதுரமைல்பரப்புள்ள இலங்கையில் ஒரு சிறு நிலப்பரப்பில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு நினைக்கவேயில்லை. ஆறுமுகநாவலரவர்கள், இராமநாதன் அவர்கள் விட்டுச் சென்ற கல்விப் பீடங்களை விட இராசரத்தினம் அவர்கள் ஈட்டிக் கொடுத்த பீடங்கள் பலவாக இருந்தனதாமே.

பண்டாரநாயக படுகொலை செய்யப்பட்ட பின் அவர் கட்சியில் இடதுகால், வலதுகால் என்பனவுள எது ஏற்றமுள்ளது என்னும் சிக்கல் உண்டானது. இந்தச் சிக்கல் எழுவதற்கு முன்னரே முதல்வராயிருந்த சி. பி. டி. சில்வா நோயுற்றுவெளிநாடேகியதும், ஸ்ரீலங்கா கட்சியினர் வலக்காலை முன்வைத்து நடக்கத் தொடங்கி அதன் முதல்வரான தகநாயக அவர்களைப் பிரதமராக்கினர். அவரும் சில மாதங்கள் ஆட்சிப் பொறுப்பாளராயிருந்தபின், நாட்டு மக்களின் நல்லாணை பெற்று மீண்டு வந்து அரசாங்கம் அமைக்க முனைந்தபோது முதுகு காட்ட வேண்டியவரானர்.

இவ்வாருக ஏழுவருடங்களுக்கு முன்னர் வயிற்றுநோய் என்னும் காரணம் கூறி அரசியல் துறவு பூண்டு, புத்த சமயம் வளர்க்கப் புறப்பட்ட இளைய சேனநாயக என்னும் டட்லி. பின்னர் 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதத் தேர்தலில் நிலையான ஆட்சிக்குப் போதிய பலமில்லாத பிரதிநிதிகளோடு வந்து ஆட்சியமைத்து அரியணைப் பேச்சையே நிறைவேற்ற வியலாது தோற்று முதுகு காட்டிப் போவாராயினர்.

அதன் பின் ஆடி மாதத் தேர்வில் வெற்றி பெற்ற பண்டாரநாயக அம்மையார் ஸ்ரீமாவோ ஆணரசாண்டால் அழிந்துபோம் சீமையென்று பெண்ணரசாளப் புறப்பட்டு வந்தார். அம்மாவின் ஆட்சியின் போது தான் இலங்கையில் பாடசாலைகள் அரசாங்கத்தின் சொத்தென நிலவுமாறு சுவீகரிக்கப்பட்டன.

அவ்வேளையில் இராசரத்தினம் அவர்கள் ஒழிப்பு மறைப்பில்லாமல் எல்லாப் பாடசாலைகளையும் நிலங்களையும் தத்தம் பண்ணித் தாரை வார்த்துக் கொடுத்தார். ஒரு பாடசாலையையாவது சைவத் தமிழ் வளர்க்கும் பீடமாக ஒதுக்கி வைக்கவில்லை.

## தாரைவார்த்துக் கொடுத்த பாடசாலைகள்

அன்று துப்பாக்கியிலும் வலியதான பேனு முனையில் அரசாங்கம் சைவவித்தியா விருத்திச் சங்கத்திடம் பெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஆசிரியகலாசாலை ஆகியவற்றின் விபரம் வருமாறு:–

1. தமிழ்ப்பாடசாலைகள் —147
2. ஆங்கிலக் கல்லூரிகள் —7
3. ஆசிரியர் கலாசாலை —1

இவற்றை விட சங்கத்தின் பொறுப்பில் இராசரத்தினம் அவர்கள் கண்காணிப்பில் நிலவி வந்தவை வேறுனவை அவை:-

1. சிறுவர் இல்லம்—1
2. சிறுமியர் இல்லம்—1
3. நெசவுசாலைகள்—15
4. கூடை முடைவுசாலைகள் —16

(தொடரும்)



என்ன உங்கடைமோன் சோத்திலை மண்ணையும் கல்லையுங் கலந்து சாப்பிடுறுன்.

அப்பத்தான் சாப்பாடு சத்துணவு ஆகும் எண்டான். பள்ளிக்கூடத்திலையும் மண்ணையுங் கல்லையுங் கலந்து தானே சத்துணவெண்டு கொடுக்கிருங்கள்!




கே.எஸ்.ஆனந்தன்

## அத்தியாயம் பதினெட்டு

சுவர்க்கடிகாரம் பத்துமணி அடித்த போது தன்னுடைய கைக்கடிகாரத்தைச் சரிபார்த்துக் கொண்டே ஜன்னலூடே வெளியிலும் பார்த்தான் ரகு. காரில் இருந்து குணரத்தினமும் வேறு இருவரும் இறங்கி நிற்பதையும் அவதானித்தவன் தன் கருமங்களில் மூழ்கினன்.

அவனைப் பேட்டி காண வந்தவர்கள் ஒவ்வொருவராக விடைபெற்றுச் சென்றபின் குணரத்தினமும் அவரது சகாக்களும் உள்ளே நுழைந்தனர். கோவை ஒன்றுக்கு கையொப்பம் இட்டவாறே நிமிர்ந்தான் ரகுவரன்.

'குட்மோர்னிங் சார்' என்ருர் குணரத்தினம்.

'குட்மோர்னிங் மிஸ்டர் குணரத்தினம். உட்காருங்கள்' என்ருன்.- கையில் கொண்டு வந்த கோவையை மேசைமீது வைத்துவிட்டு உட்கார்ந்தார். அவருடைய சகாக்கள் இருவரையும் உட்காரும் படி வேண்டினுன் ரகுவரன்.

'என்ன சார் இன்று ஆறுதலாகவே வந்திருக்கின்றீர்கள். உங்கள் 'கேஸ்' எல்லாம் என்ன மாதிரி?' கேள்விகளை ஒன்றன் பின் ஒன்ருக மொத்தமாகவே கேட்டான்.

'உங்கள் உதவி வேண்டி வந்திருக்கிறேன்' நிதானமாகவே பதிலளித்தார் குணரத்தினம்.

'நியாயபூர்வமான எந்த உதவியையும் நான் உங்களுக்குச் செய்ய முடியும். நியாயபூர்வமற்ற எதையும் என்னிடம் இருந்து யாரும் எதிர்பார்க்க முடியாது. உங்களுக்கே தெரியும் என நினைக்கிறேன்'

'நன்ருய் தெரிந்து கொண்டேன். இதைப் பாருங்கள் என்று கொண்டு வந்த கோவையை அவனிடம் நீட்டினர்.

அவற்றையெல்லாம் படித்து பார்த்தவன் ராஜலிங்கத்தை அழைத்துச் சில விடயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்ட பின்பு கடிதம் ஒன்றை எழுதிரைப் செய்யும்படி கொடுத்தான்.

அதே சமயம் பியோன் நடராசா. தேநீர் கொண்டு வந்து ரகுவரன் முன் வைத்தான்.

'நடராஜ்'

'யேஸ் சார்'

'இவர்களுக்கும் ரீ......

'ஜேஸ் சார்' அவன் திரும்பிச் சென்ருன். சில நிமிடங்களில் மூவருக்கும் தேநீர் பரிமாறப்பட்டது.

'குணரனத்தினம் சார் சில அதிகாரிகள் செய்யும் தவருன காரியங்களைப் பயன்படுத்தி சிலர் சட்டங்களையும், ஒழுங்குகளையும் மீறிய காரியங்களில் தன்னிச்சையாகவே செயல்பட்டு வருகின்றனர். ஆகவே தான் சிலரிடம் நான் கடுமையாக நடந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. எனக்கு உங்களிடம் தனிப்பட்ட கோபதாபம் கிடையாது. தெரிந்தோ; தெரியாமலோ உங்கள் செயல்களால் பாதிப்படைந்தவர்களுக்கு நான் உதவினேன் என்ருல் அது என் கடமையே தவிர உங்களுக்கு விரோதமான செயல் அல்ல. இவர்கள் யார்? நான் உங்களுடன் பர்ஸனலாக சில விடயங்கள் பேச விரும்புகிறேன்' என்ருன்.

'நம்ம பையன்கள்தான் இவர்களுடைய விடயமாய்த்தான் கூட்டிவந்தேன்'

'சொல்லுங்கோ என்ன விடயம். அதை முடித்துக் கொண்டு கதைப்போம்' என்ருன்.

ஐந்து நிமிடத்தில் அவர்களுடைய விடயங்கள் 'ரைப்' செய்து கொண்டு வரப்பட்டது. கையொப்பமிட்டு அவரிடம் கொடுத்தான்.

'தாங்கியூ சார்' என்ருர்.

'எக்ஸ்கியூஸ் மீ. நீங்கள் இருவரும் போகலாம் தானே. நான் இவரோடு கொஞ்சம் கதைக்கணும்'

இருவரும் வெளியே சென்றனர் நடராசனை அழைத்து வெளியே ஆட்கள் வேறு இல்லை என்று தெரிந்து கொண்டதும் மேசை லாச்சியை இழுத்து ஒரு கோவையை எடுத்து தன் முன்பாக வைத்துக் கொண்டே அவருடன் பேச முற்பட்டான் 'சார் நான் உங்களை. 'இன்ஸல்ட்' பண்ணுவதாநினைக்கக் கூடாது. உங்களை விட வயதில் சிறியவன் உங்களுக்கு 'அட்வைஸ்' பண்ணுவதாக எடுத்துக்கக் கூடாது. பணம் எங்களுக்கு எவ்வளவு முக்கியமோ அதை விட முக்கியம் தனி மனித பண்பாடு நாம் பணத்தை பல வழியிலும் பெறலாம். ஆனல் நல்ல வழியில் தான் எமது பண்பாட்டை நிலை நிறுத்த முடியும். உங்களுக்கு கிடைத்திருந்த மேலிடத்தில் செல்வாக்கை தெரிந்தோ, தெரியாமலோ பயன்படுத்தியதால் உங்கள் பின்னே ஒரு கூட்டம் சேர்ந்திருக்கலாம். அது உங்களை மேலும் தவருன பாதையில் இட்டுச் சென்றிருக்கலாம். மனித இயல்பும் அது தான் அதிகாரம் செல்வாக்கு பணபலம் சமுதாய அந்தஸ்தில் சிலருக்கு உயர்வையும் அதே சமயம் அழிவையும் சமநோக்கில் ஏற்படுத்திவிடும் இதை பலரும் உணந்திருந்தாலும் அப்போதைய சூழ்நிலையில் அதனை உணர முடியாது போகின்றனர்.'

'உண்மை தான்' என்று பெருமூச்செறிந்தார் குணரத்தினம்.

'இதோ பாருங்கள் நான்வர முன்பும் சரி'வந்த பின்பும் சரி உங்களுக்கு எதிராக எழுதப்பட்ட மனுக்கள். முன்பிருந்த அதிகாரிகள் உங்களுக்குப் பயந்து இவை பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை காரணம் தங்கள் சொந்த நலன்களை மட்டுமே கருத்திற்கொண்டு செயல்படாதிருந்தனரேயன்றி உங்கள் மீதுள்ள அன்பினுலோ அறிமுகத்தலோ அல்ல என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனல் இவற்றில் சிலவிடயங்களை நான் உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டது. நியாயபூர்வமானவற்றை நான் செய்தேன் என்ருல் உங்களிடம் எனக்கு தனிப்பட்ட கோபமோ -வெறுப்போ இல்லை.'

'இவையாவும் நான் வந்த பின்பு வந்த மனுக்கள் ஆனல் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் இவர்கள் உங்கள் செல்வாக்கை, உங்கள் உதவியைப் பெற்று பல காரியங்களைச் சாதித்து கொண்டவர்கள். என்பது நான் அறிந்து கொண்டவையாகும். உங்கள் செல்வாக்கு செல்லுபடியாகாது என்று தெரிந்து, கொண்ட போது உங்களுக்கு எதிராகவே 'பெட்டிஷன்' அனுப்பியுள்ளனர். ஆகவே நான் யாருக்கும் பாதகமாக நடந்து கொள்ளமாட்டேன் என்பது உங்களுக்கு தெரிந்திருக்கவேணும்.

'நன்ருகவே யாவும் அனுபவித்துவிட்டேன். உங்களை தவருக எடை போட்டதற்காக மன்னிப்புக் கோருகின்றேன்.' என்ருர் பேச முடியாது தொண்டை கரகரத்தது.

'நானும் யாழ்ப்பாணத்தவன் தான். ஆனல் வளர்ந்தது சிங்கள வீட்டில் என்னுடைய நிலைமை உங்களுக்கு தெரிந்திருக்கலாம். என்னை வளர்த்தவர் அரசாங்கத்தில் நிறைந்த செல்வாக்குடையவர். மினிஸ்டர் வரை கூட அவர் எதையும் சாதிக்கும் ஆற்றல் உள்ளவர் என்ருன்....

'என் நிலைமை உங்களுக்கு நான் சொல்லவேண்டியதில்லை. ஆனல் நியாயபூர்வமில்லாத எதற்கும் எவரிடமும் உதவிகோரமாட்டேன். அதேபோல உதவி செய்யவும் மாட்டேன். மனிதாபிமான ரீதியில் சிலருக்கு உதவிசெய்ய வேண்டி ஏற்பட்டால் நிச்சயமாக நான் அதனை நிறைவேற்றுவேன். உங்களுக்கு என்னுல் ஏதும் உதவி தேவை என்ருல் இன்று போல நேர் வழியில் அணுகுங்கள். நிச்சயமாக நான் உதவுவேன்' என்ருன்.

'தம்பி இவ்வளவு கூறிய பிறகு நானும் சிலவற்றைக் கூறுகின்றேன். அதற்கு மேலிடத்துச் செல்வாக்குகளே காரணமாய் அமைந்துவிட்டது. நீங்கள் கூறிய விடயங்கள் என்னுடைய மனதில் அற்ப சொற்பமிருந்த ஆணவத்தையும் அழித்துவிட்டது. வயதில் என்னைவிடச் சிறியவனுய் இருந்தாலும் அறிவில் பெரியவன். எதிரியைக் கூட நண்பனுக மதிக்கும் உங்கள் பண்பு என்னை முழுமனிதனுக்கிவிட்டது' என்று அவனுடைய கரங்களைப் பற்றி கண்களில் ஒற்றிக்கொண்டார்.

'சார் நான் உங்கள் மனம் நோகும்படி ஏதாவது கூறியிருந்தால் என்னை மன்னிக்க வேண்டும்'

'அப்படி எதுவும் இல்லை. வயதில் நான் பெரியவன் தான் உங்களை மன்னிக்கும் தகுதி எனக்கில்லை, தம்பி சமீபத்தில் என்னுடைய உறவுப் பையன் ஒருவனை வவுனிக்குளம் பாடசாலைக்கு நியமிக்க வேண்டினேன். அதன் காரணமாக உங்களுக்கு வேண்டிய ஒருவனுக்கு'ருன்ஸ்வர்'போட நேரிடும் என்று பிரின்சிப்பல் கூறினர். அப்படி ஏதும் நடந்திருந்தால் அதற்கு நான் எவ்விதத்திலும் பொறுப்பில்லை. இதைநீங்கள் நம்பவேண்டும்.'

'நிச்சயமாக நம்புகிறேன். இது எனக்கு சம்பந்தமில்லாத விடயமானுலும் என்னுடைய அங்கிள் இங்கே வந்திருக்கிருர் அந்த ருன்ஸ்பர் மினிஸ்ரருடன் கதைத்து உடனேயே ரத்துச் செய்து விட்டார். இதெல்லாம் நிர்வாகத்தினர் செய்யும் சின்னத்தவறுகள்' என்று கூறிச் சிரித்தான்.

'பல நாட்களாக எம் மனதைக் குடைந்து கொண்டிருந்த பாரம் இன்று நீங்கி விட்டது உண்மையைச் சொன்னல் நான் இங்கு வரும் பொழுது பயந்துகொண்டு தான் வந்தேன். தனியாகப் பேசவேண்டும் என்று'பைலை' எடுத்து வைத்தபோது கூட நான் உள்ளூரப் பயந்துகொண்டிருந்தேன். உங்களைப் போன்று ஒவ்வொரு அதிகாரிகளும் செயற்பட்டால் மக்கள் மக்களாகவே வாழத் தொடங்கிவிடுவார்கள்' என்று கூறி விடை பெற்ருர் குணரத்தினம்.

திரும்பி போகும் வழியில் கந்தையா மாஸ்டரைச் சந்தித்தார் குணரத்தினம். கார் நின்றதும் என்னவோ நடக்கப் போகின்றது என கந்தையா மாஸ்டரும் சற்றுப் பயந்துபோய் நின்ருர்.

'மாஸ்டர் உங்களைச் சந்திப்பதற்கே எனக்கு வெட்கமாயிருக்கின்றது. என்னதான் நான் பிழைகள் விட்டிருந்தாலும் அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன்' என்று அவர் கைகளைப் பற்றினர்.

'மிஸ்டர் குணரத்தினம் நான் எதையும் உடனுக்குடன் மறந்துபோறவன் ஏது இந்தப் பக்கம்?' என்ருர்.

'நம்ம ஏ. ஜி. ஏயைச் சந்தித்துக்கொண்டு வாரன் உண்மையில் ஒரு நேர்மையான பையன். என்னைச் சேர்ந்தவர்கள், என்னிடம் உதவி பெற்றவர்கள் எல்லோரும் எனக்கு குழிபறித்திருக்கிருர்கள். ஒரு கட்டு 'பெட்டிசம்' வந்திருக்கு. எல்லாம் காட்டினர் ஆனல் அவரே அதைத் தெரிந்துகொண்டு நடவடிக்கை எடுக்காமல் வைத்திருக்கின்ருர்.' றியலி கி இஸ் ஏ கிறேற் ஜென்டில்மென்'என்று இன்னும் ஏதோ புகழ்ந்தார்.

குணரத்தினமா இப்படி எல்லாம் கதைக்கின்ருர் என்பதை கந்தையா மாஸ்டரால் நம்பமுடியவில்லை. அவ்வளவுக்கு மனிதன் மாறிப் போயிருந்தார்.

'இங்கே பாருங்கள் மாஸ்டர் சில விடயங்களுக்காகப் போயிருந்தேன். பயந்துகொண்டு தான் போனேன். ஆனல் என்னை ஒரு மனிதனுக மதித்து இவ்வளவும் செய்து தந்திருக்கின்ருர். உங்கள் பிரின்சிப்பல் கூட அந்தப் பிள்ளையின்ரை மாற்றம் பற்றி ஏதோ சிண்டு முடித்திருக்கின்ருர். உண்மையில் எனக்கு அதில் சம்பந்தம் இல்லை. அதையும் மினிஸ்ரரோடை கதைத்து உடனே 'கான்சல்' பண்ணிவிட்டதாகக் கூறினர். ஐந்நூறு ஆயிரம் பணத்துக்காக அலைபவனை நான் பல இடங்களில் பார்த்திருக்கின்றேன்.

அதிகார தோரணையில் மக்கள் மீது சவாரி விடும் சில அதிகாரிகளையும் சந்தித்திருக்கின்றேன். ஆனல் ஒரு நம்பிக்கை வாதியை, லட்சியவாதியை, மக்களை மனித பிறப்பு என மதிக்கும் ஒரு மனிதாபிமானமுள்ள இளைஞனை காண்பது இங்கேதான் முதற்தடவை' என்ருர்.

'உண்மையிலேயே அவன் ஒரு அபூர்வ பிறப்புத்தான். எங்கள் பகுதியை அவருடைய காலத்தில் எவ்வளவுக்கு முன்னேற்ற முடியுமோ அந்தளவுக்கு நாங்கள் எல்லோரும் சேர்ந்து உழைத்தால் முன்னேற்ற முடியும். உங்கள் உதவி கிடைத்தால் நிச்சயமாய் நாங்கள் எதையும் சாதிக்கலாம்' என்ருர்.

'மாஸ்டர் உங்களுடைய நல்ல திட்டங்களை எல்லாம் எதிர்த்தவன் நான்தான் இனி உங்களுக்கு என்னுல் என்ன உதவிகளை செய்ய முடியுமோ சொல்லுங்கள் செய்கிறேன். மாஸ்டர் நீங்கள் ஆர். டி. எஸ் கட்டிடம் கட்டகேட்ட காணியில் கட்டிடம் கட்ட தேவையான ஒழுங்குகளை செய்யுங்கள். அதற்குரிய ஒழுங்குகளை செய்து தாரன். உங்களைச் சந்தித்தற்கு முதல் நன்மையான விடயமாக இது அமையட்டும். அத்திவாரக் கல் நாட்டலுக்கும் ரகு தம்பியையே போடுங்கள். நானும் வாரேன். நடந்ததை மறந்து நாங்கள் ஒத்துழைப்பதை மக்களும் உணர்ந்து கொள்ளக் கூடிய கால்கோல் விழாவாக இது அமையட்டும்' என்று உணர்ச்சி வசப்பட்டு கூறினர்.

'நன்றி குணரத்தினம் இன்றே என் பணியை ஆரம்பிக்கின்றேன்' என்று உறுதி கூறிவிடைபெற்ருர் கந்தையா மாஸ்டர்.

மாலை நான்கு மணியளவில் ரகுவின் விடுதியில் ஒரு கலந்துரையாடல் நடை பெற்றுக் கொண்டிருந்தது. சிறி, கந்தையா மாஸ்டர், சமரசிங்கா, ரகுவரன், சொக்கலிங்கம் ஆகியோர் கலந்து கொண்ட அந்த உரையாடலில் மிகச் சுவாரஸ்யமான விடயங்கள் அலசப்பட்டன. அவர்கள் உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த சமரசிங்காவின் உள்ளம் ரகுவின் பணி கேட்டுப் பெருமிதமடைந்தது.

குணரத்தினத்தின் மாற்றம் எல்லோருக்கும் மிக வியப்பாகவிருந்ததாயினும் அதைவிட ரகுவின் திறமையில் நம்பிக்கையிருந்தது.

'என்ன இருந்தாலும் குணரத்தினம் நன்ருய் பாதிப்படைந்து விட்டார். அவரைச் சேர்ந்தவர்களே குழிபறித்திருக்கின்ருர்கள் என்பதை அறிந்தும் தம்பி நடவடிக்கை எடுக்காமலிருந்தது அவரது மனமாற்றத்துக்கு அடித்தளமாக அமைந்து விட்டது' என்ருர் கந்தையா.

'எங்கள் 'ஹெட்கிளாக் திருந்தியதை விடவா?' என்று கூறிச் சிரித்தான் சொக்கலிங்கம்.

'நீங்கள் எதைக் கூறினுலும் இத்தனைக்கும் உரியவர் என் அங்கிள்தான். அவருடைய பணியைத்தான் கொஞ்சம் 'டெவலப்' பண்ணிச் செய்கி

[14-ம் பக்கம் பார்க்க]

# எழுத்துச் சீர்திருத்தம்: தமிழின் சிறப்பியல்புகளை அழித்துவிடும்!

பண்டிதர்
க. சச்சிதானந்தன்
( B. A., M. Phil. )

தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று பலர் விரும்புகிறார்கள். இவர்கள் அவ்வாறு விரும்புவதற்கு முக்கியமான காரணம் தமிழ் நெடுங்கணக்கின் இன்றைய வரிவடிவம். மிகவேகமாக அச்சுப்பதிக்கவும், தொலையச்சுப் பொறிக்கவும் கணனி வழியாக எழுதுவதற்கும் பல தடைகளைக் கொடுக்கின்றது என்பதே!

வேகமாக முன்னேறும் ஒரு விஞ்ஞான உலகிலே, தமிழ் மொழியும் அதற்கேற்ப முன்னேற வேண்டும் என்பது உண்மை. ஆனால் இன்று இந்தியாவில் வழக்கிலிருக்கும் சீர்திருத்த எழுத்து முறையால், தொலையச்சுப் பொறித்தல், கணனி வழியாய் எழுதுதல் ஆகியவை மிக வேகமடையுமோ என்பது சந்தேகம் இன்று இநதியாவில் வழங்கும் சீர்திருத்திய எழுத்து முறையை உருவாக்கியவர்கள் தமிழ்மொழியின் சிறப்பான ஒலியமைப்பை முற்றாகக் கைவிட்டே செய்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. தமிழ்மொழி இனிய மொழி என்று கூறுவது அதன்மீது நாம் கொண்ட ஆராத காதலினாலா? அல்லது அதற்கு ஏதாவது ஒரு தனித்தன்மை ஒலியியல் அடிப்படையில் உள்ளமையாலா? ஒவ்வொரு மொழியும் அவரவர்க்கு இனிக்கும். 'காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு' அன்றோ! அப்படியான அபிமானத்தினால் எமது மொழியை இனிய மொழி என்று கூறவில்லை. எழுத்துக்களின் பிறப்பிடம், வளியோட்டம் முதலானவற்றின் அடிப்படையில் ஒலிகளின் சேர்க்கை ஓர் எளிமையான முறையில் தமிழில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பெரிய ஆராய்ச்சிகள் வேண்டியதில்லை, தொல்காப்பியத்தில் நூன்மரபு பிறப்பியல் ஆகிய இரண்டையும் ஆழ்ந்து கற்பார்க்கு அவை விளங்கும். ஒருசொல் தமிழ்ச் சொல்லோ என்று அறிவதற்கு இந்த அடிப்படையில் ஒலியியல் அறிவு வேண்டியதாகும்.

இந்த ஒலியியல் அடிப்படை குலையாமல் இருப்பதற்கேற்றவாறு வரிவடிவங்களும் அமைந்துள்ளன. சிலர் அவை ஒரே பெற்றித்தான தருக்க முறையில் அமையவில்லை என்கின்றார்கள். ஆனால் அந்தவேறுபாடுகளுக்குச் சில காரணங்களுண்டு.

ல் ள் இவை இரண்டும் இடையினங்கள்.

ற் ட் இவற்றிற் கேற்ற வல்லினம்

ன் ண் இவற்றிற் கேற்ற மெல்லினம்

இவற்றில் ஞ ண னை ணை ளை என்பன வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டியன. அதனாலேதான் சுற்றிக் காட்டும் மேல் வளைவு கொடுத்தும் வித்தியாசம் காட்டப்பட்டிருக்கின்றன. இப்படியான பல ஒலியமைப்பு வரிவடிவ நுட்பங்களை எடுத்துக் காட்டலாம்.

அவற்றை எடுத்துரைப்பதற்குத் தனியான கட்டுரை எழுதவேண்டும்.

தொலையச்சுக்கணனியெழுத்துக்குரிய அமைப்புக்களை ஆக்கியவர்களுக்கு தமிழின் ஒலியமைப்பு முறையின் ஒழுங்கினையும் அதற்கேற்றவாறு வரிவடிவம் அமைந்ததையும் விளக்க வேண்டும். அன்றேல் கணனிப் பொறிமுறையும் தமிழ் ஒலியமைப்பும் சிருட்டி ஆற்றலும் ஒருங்கே ஒருவருக்குக் கைவரவேண்டும். இந்த நிலையில், இப்பொழுதுள்ள தமிழ் வரிவடிவத்தை அப்படியே எழுதும் ஒருமுறை உருவாகும். இப்பொழுதுள்ள சீர்திருத்த எழுத்துமுறை தமிழின் தனித்துவ ஒலியமைப்பை உணர்ந்து கொண்டவர்களால் செய்யப்பட்டதாகத் தோற்றவில்லை.

கணனிப் பொறிமுறை வளர்ச்சி மிக வேகமாகச் செல்கின்றது. ஒரு சொல்லை உச்சரிக்க அதை அப்படியே கணனி எழுதுங்காலம் மிக விரைவில்வரும். அப்பொழுது தமிழ் ஒலிக்கேற்பப் பழைய எழுத்து முறையிலே தமிழைக் கணனி எழுதிக்காட்டும். அதற்கிடையில் எழுத்துச் சீர்திருத்தம் மிக அவசியமா? என்பது ஆலோசிக்கவேண்டிய தொன்றாகும். அன்றியும் இன்று இந்தியாவில் வழங்கும் சீர்திருத்திய எழுத்துமுறையாலே தமிழில் அச்சேற்றுதல், செய்திகளை விரைவில் அனுப்புதல் முதலியவற்றிற் பெற்றவேகம் எத்தகையதென்பதை இன்னும் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை. ஒரு செய்தியைத் தெளிவாக ஒருவர் எழுதிக்கொடுக்க அது அப்படியே இன்னொரு இடத்திற் பதியும் வசதிகள் இருப்பதாகக் கூறுகிறார்கள் அங்ஙனமிருக்க எழுதுச் சீர்திருத்தத்தாற் பெற்ற வேகம்இன்று எவ்வளவு பெரிய முன்னேற்றத்தைக் கொடுத்திருக்கின்றது என்று கேட்கவேண்டியிருக்கிறது.

அச்சேற்றுதல் செய்திகளைத் தொலைவுக்கு அனுப்புதல் என்பவற்றிலும் இவை போன்றனவற்றிலும் முன்னேற்றங் காண எழுத்துச் சீர்திருத்தம் நாடுவோர் கூறுங் காரணங்கள் சில. அவற்றைவிடத் தமிழின் வரி வடிவில் எளிய தருக்க முறையான ஒரு அமைப்பு வேண்டும் என்ற நோக்கத்தால் எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும் என்பாரும் உளர்.

ஐ என்ற உயிர், மெய்யோடு சேர்ந்து உயிர் மெய்யெழுத்துப் பிறக்கும் போது லை, னை, ணை, என்றெழுதாது லை னை ணை என்றெழுவதுவது எளிது என்று பலர் கருதுகின்றார்கள். ஆனால் ஒலியியல் அடிப்படையில் சில சிறப்பம்சங்களை வற்புறுத்தலே அவை அவ்வாறான வரிவடிவம் பெற்றன என்பதனை விளக்கிக் காட்டலாம். அன்றியும் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவம் அசைகளின் பிரிவையும் எளிதாக்ககூடியது. ஆங்கில மொழியில் மெய் அதன்பின் உயிர் என எழுத்து முறை செல்லும். ஆனால் தமிழிலோ உயிர், மெய், உயிர் மெய் என மூன்றும் எழுதப்படுகிறது. உயிரும் மெய்யும் இருந்தாற் போதுமே இவையிரண்டாலும் ஆக்கப்பட்ட உயிர் மெய் வரிவடிவம் எதற்கு என்றும் கேட்கலாம். அப்படியான தருக்க முறையில் ஏன் எழுத்துச் சீர்த்திருத்தக்காரர் சிந்திக்கவில்லை. முப்பது எழுத்துக்களுடன் தமிழ் நெடுங்கணக்கு முடிந்து விடும்! எவ்வளவு எளிமை! அப்படித்தானே தமிழை ஆங்கில வரிவடிவத்தில் எழுதிப் பலர் கற்கிறார்கள். அசைகளாகப் பிரிப்பதற்கு அம்முறை மிகவும் பொருந்தாது. சுருங்கச் சொன்னால் தமிழின் வரிவடிவம் அதன் தனியான ஒலியியற் பண்போடு ஒட்டிக் கலந்தது. அசைப்பிரிவும் இதனுள் ஒன்று. இந்த அடிப்படை எழுத்துச் சீர்திருத்தத்தாற் குலையும். மேனாட்டவர் வசதிக்காக முப்பது எழுத்துக்களோடு தமிழ் வரிவடிவம் மாற்றப்படலாம். ஆனால் தமிழை வீட்டிற் பேசும் தமிழருக்கு அது உகந்தது அன்று. கற்பதற்குச் சுலபமாக ஆக்க வேண்டும் என்ற காரணத்தால் வரிவடிவை மாற்றினாற் பல கலக்கங்கள் ஏற்படும்.

சீர்திருத்தங்களை எதிர்ப்பது பழையவர்களுடையஒரு மனப்பாங்கு என்று சிலர்நினைக்கிறார்கள். மொழியின் அடிப்படைப் பண்புகள் தலைகீழாக மாற்றப்பட்டால், அம்மொழி அதன் தனித்தன்மையிழந்து வேறொரு மொழியாகும். எழுத்துச் சீர்திருத்தத்தால். தமிழின் சில பண்புகள் மாறிவிடலாம். அதனைக் காலப்போக்கிற்றான் உறுதிப்படுத்த முடியும் எதிர்ப்பதற்குரிய காரணங்களில் இதுவும் ஒன்று.

[15-ம் பக்கம் பார்க்க]

நாடகம்

# சரியானசம்பந்தம்

கா. சுப்பிரமணியம்

பாலகிருஷ்ணன் வீடு.முற்றத்தில் அவர் மகன் கோபு மண்வெட்டியால் வாய்க்கால் போடுவதில் ஈடுபடுகிறான். வீட்டு விறாந்தையில் பாலகிருஷ்ணன் சாய்மனைக் கதிரையில் அமர்ந்திருக்கிறார். அவர் மனைவி செல்லம்மா கதவு நிலையுடன் சாய்ந்து கொண்டு நிற்கிறார். மகள் புவனேஸ்வரி படியில் அமர்ந்து கொண்டிருக்கிறாள். மூத்த மகன் ரவி ஒரு கதிரையிற் புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருக்கிறான், பக்கத்து வீட்டு விசாலாட்சி வந்து கொண்டிருக்கிறார்.

விசாலாட்சி: ( வந்த படியே ) என்ன செல்லம்மா உன்ரை பெடியங்கள் கமம்தான் செய்யப் போகினம் போலை.

செல்லம்மா: உதுகள் எங்கை என்ரை சொல்லைக் கேட்குதுகள். எல்லாம் அப்பரின்ரை பேய்க்கதையைக் கேட்டு நடக்குதுகள். (மகனை நோக்கி) டேய் கோபு மண்வெட்டியை வை. காலிலை போடப் போறாய். பழக்கமும் இல்லை உனக்கு; பேந்து விண் உலைச்சல்.

கோபு: அம்மா இன்னம் இரண்டு வெட்டு. அதுக்குப் பிறகு இந்தச் சுண்டங்கத்தரிக்கு தண்ணி விடோணும்.

விசாலாட்சி: ஏன்மோனை ஆரும் சுண்டங்கத்தரிக்கு தண்ணி விடுறவையே?

கோபு: ஏன் மாமி இறைச் சாப் பட்டுப்போமே?

விசாலாட்சி: உதுக்கார் மோனை மினக்கெட்டு இறைப்பினம், சரி கதையை விடு. செல்லம்மா இரண்டு எலுமிச்சம்பழம் தாவன் பிறகு சந்தையிலை வாங்கித்தாறன்.

செல்லம்மா: சந்தையிலை வன்னி எலுமிச்சம்பழம்தான் விக்கிறது அதிலை புளியில்லை; ஊர் எலுமிச்சைதான் நல்லது.

பாலகிருஷ்ணன்: எலுமிச்சை எண்டால் ஊர் எலுமிச்சை கலியாணம் எண்டால் வெளிநாட்டு மாப்பிளைதான்.

செல்லம்மா: எலுமிச்சம்பழம் கிடக்கோ என்னவோ தெரியேல்லை...

பாலகிருஷ்ணன்: சரியப்பா இரண்டுதானே கொடுத்துவிடன். இதுக்குப் பெரிய யாவாரம் பண்றாய்.

(புவனேஸ்வரி எலுமிச்சம் பழம் கொண்டு வந்து கொடுத்தல்)

விசாலாட்சி: இந்தக் [illegible]வரத்தாலை வேலையை விட்டு வந்தவைக்கும் பெஞ்சன் குடுக்கினமாம் தம்பி எழுதிப்போட்டானென்ன?

பாலகிருஷ்ணன்: எனக்குப் பெஞ்சனும் வேண்டாமெண்டு தானே வந்தனான். உதுக்கார் மினக்கெட்டு எழுதிறது.

செல்லம்மா: இஞ்சை பாருங்கோ ஏதோ நூறுரூபா வந்தாலும் அதிலை ஒரு பெருமை இருக்கு. பிள்ளைக்குக் கலியாணம் பேசேக்கை பென்சனியற்றை மகள் எண்டெல்லே சொல்லலாம்.

விசாலாட்சி:- உத்தியோகம் எண்டுதானே அப்ப சீதனம் வாங்கினனி தம்பி. நீமோனை ஏன் எல்லாத்தையும் குழப்பிக் கொட்டுகிறாய்?

பாலகிருஷ்ணன்: மாமி, எலுமிச்சம்பழம் வாங்கியாச் செல்லே. அப்ப போட்டு வாங்கோ.

விசாலாட்சி: கோவியாதை மோனை; நான் வாறன்.

செல்லம்மா: டேய் கோபு இஞ்சை வா, முகத்தைக் கழுவிப் போட்டுப் போய்ப் படி, உந்த மண்வெட்டி சோறு தராது.

புவனேஸ்வரி: "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" எண்டு திருவள்ளுவர் சொல்லியிருக்கிறாரெல்லே.

செல்லம்மா: அவற்றை காலத்திலை கவுண்மேந்து உத்தியோகம், பெஞ்சன் இப்படியெல்லாம் இருந்ததே இதெல்லாம் வெள்ளைக்காரன் வந்தபிறகல்லோ இப்படி மரியாதையான வேலைகள் வந்தது.

பாலகிருஷ்ணன்: அப்ப,தோட்டம் செய்யிறது மரியாதை இல்லைப்போலை.

செல்லம்மா:- என்ரை அப்பா, பெஞ்சனியர், அம்மா ரீச்சர், அம்மப்பா மலாயன் பெஞ்சனியர் எத்தனை தலைமுறையாக எங்கடை ஆக்கள் உத்தியோகம் பார்த்துப் பெஞ்சன் எடுத்தவை. ,எனக்குத்தான் இந்தத்தலைவிதி (அழுதல்)

பாலகிருஷ்ணன்: நான் உத்தியோகத்தை உதறியிராட்டி இப்ப உயிர்கூட மிஞ்சாது.

புவனேஸ்வரி: அப்படியெண்டாலும் பரவாயில்லை பெஞ்சனாவது வருமெண்டு அம்மா நினைக்கிறாபோலை.

செல்லம்மா: நீ சும்மா இரடி உனக்காவது நல்ல கவுண்மேந்துஉத்தியோகம் பார்க்கிற மாப்பிள்ளையைக் கட்டித் தர வேணும்.

(மூத்தவன் ரவி புத்தகத்தை மூடிவிட்டித் திரும்பி)

ரவி: அக்காவுக்குக் கலியாணமோ அப்ப கொண்டாட்டம்தான்

புவனேஸ்வரி: டேய் சும்மா வாயை மூடிக்கொண்டிரு.

செல்லம்மா: சொன்னாப் போலை தரகர் ஆறுமுகம் அண்டைக்கு வந்தவர் நீங்கள் இல்லை எண்டு சொல்லிப் போட்டன்.

(வெளியே யாரோ செருமும் சத்தம் கேட்கிறது)

பாலகிருஷ்ணன்: உவர் ஆறுமுகத்தார் தான் போலை.

(தரகர் ஆறுமுகம் வருகிறார்.)

அண்ணை உங்களுக்கு நூறு வயது.

ஆறுமுகம்: தங்கச்சி கொஞ்சம் தண்ணி கொண்டா.

(புவனேஸ்வரி உள்ளே போதல்)

ஏதாவது சாட்டுச் சொல்லிப் பிள்ளையை உள்ளே அனுப்புங்கோவன்.

புவனேஸ்வரி: (வந்து கொண்டே) ஏன் மாமா கலியாணஞ் செய்யுறது நான் தானே, கதைக்கிறதை ஒளிக்காமல் சொல்லுங்கோ,

ஆறுமுகம்: பெடியங்களையாவது...

ரவி,கோபு: வரப்போற அத்தானைப் பற்றி நாங்கள் அறியத்தான் வேண்டும்.

பாலகிருஷ்ணன்: பெடியள் சொல்றதும் சரிதான்.

செல்லம்மா: என்ன இருந்தாலும் காச்சட்டை போடுகிற கவுண்மேந்து மாப்பிள்ளை தான் வேணும். வெளிநாட்டு மாப்பிளை எண்டா மெத்த விசேஷம்.

பாலகிருஷ்ணன்: வன்னி எலும்பிச்சங்காயிலை புளி அதிகம் இல்லை ஊர் எலும்பிச்சை தான் நல்லது.

ரவி: அப்பா இப்ப வெளிநாட்டு மாப்பிளைக் காலம் மலையேறிவிட்டுது.

கோபு: இப்ப எதண்ணை பாஷன்?

ரவி: சுதந்திரமாத் தொழில் செய்யிற அத்தான் எவருக்கும் சேர் போடாத அத்தான்.

செல்லம்மா: சாதகம் நல்ல பொருத்தமோ?

ஆறுமுகம்: நல்ல பொருத்தம்

செல்லம்மா: தொழில், படிப்பு எல்லாம்...

ஆறுமுகம்: படிப்புக்கு என்ன குறை B.A பாஸ்பண்ணியிருக்கிறான்

செல்லம்மா: கடவுளே நல்ல சம்பந்தம் எங்கே படிப்பிக்கிறார்.

ஆறுமுகம்: இரத்தினபுரியில படிப்பிச்சவர்.கலவரத்தோடை ஊருக்கு வந்தவர் பிறகு போகேல்லை தோட்டஞ் செய்யிறான் வடிவான பெடியன்.

ரவி: அப்பாவுக்கு பிடிச்ச மருமோன்; நல்ல அத்தான்.

கோபு: அண்ணை இப்பவே அத்தான் போடுகிறாய் அக்காவுக்கு என்னும்...

[ 15-ம் பக்கம் பார்க்க]

# 'கிரிக்கெட்டில்' சாதனை புரியும் விவியன் ரிச்சட்ஸ்

டி. ஏ. எம். குணசிங்கம்

இன்று உலகத்தில் சிறந்த துடுப்பாட்டக்காரர் யார் என்று கேட்டால் பதில் சொல்லப் புத்தகங்களைப் புரட்டவேண்டிய அவசியம் இல்லை. 'சட்' என்று எவரும் சொல்லக்கூடிய ஒரே பதில் விவியன் ரிச்சட்ஸ்.

விவியன் ரிச்சட்ஸ் 7-3-1952-ல் குவாவில் உள்ள செயின்ட் ஜானில் பிறந்தார். இவர் முதன் முறையாக 1975 ஆம் ஆண்டு யூன் 7 ஆம் திகதி மான்செஸ்டரில் நடந்த முதல் புருடன்ஷியல் உலகக் கோப்பைக்கான போட்டியில் இலங்கைக்கு எதிராக ஆடினார்.

இதன் பின்பு இங்கிலாந்துக்கு எதிராக 29 போட்டிகளிலும், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 44 போட்டிகளிலும், இந்தியாவிற்கு எதிராக 22 போட்டிகளிலும், பாகிஸ்தானுக்கு எதிராக 12 போட்டிகளிலும், இலங்கைக்கு எதிராக 30 போட்டிகளிலும், ஜிம்பாபேக்கு எதிராக 2 போட்டிகளிலும் ஆடியுள்ளார்.

இன்றுள்ள துடுப்பாட்டக்காரர்களில் விவியன் ரிச்சட்ஸ்சை விட டெஸ்ட் பந்தயங்களில் அதிக ரன்களைக் குவித்தவர்கள் இருக்கிறார்கள். அலன் போர்டர், மாஜா வித்மியானதத். ஆனாலும் விவியன் ரிச்சட்ஸ்தான் தலைசிறந்த துடுப்பாட்டக்காரர் என்கிறார்கள் ஏன்?

டெஸ்மாச்சுகள் பார்ப்பதில் ரசிகர்கள் மத்தியில் அலுப்பும், சலிப்பும் தலைநீட்டியிருந்த காலகட்டத்தில், ஒரு நாள் கிரிக்கெட் போட்டி அறிமுகமானது. அந்த ஒரு நாள் போட்டிகளின் ஆரம்ப காலத்தில் இருந்தே விவியன் ரிச்சட்ஸ் துடுப்பெடுத்து ஆடும் விதம் உலக கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரின் உள்ளங்களையும் கொள்ளைகொண்டு விட்டது.

இந்தப் பந்தை இப்படித்தான் ஆட வேண்டும் என்று எந்த டெக்னிக்கையும் விவியன்ரிச்சட்ஸ் பின்பற்றுவதில்லை எல்லாவிதமான பந்துகளையும் அவர் தனது விருப்பம்போல் எந்த திசைக்கு வேண்டுமானாலும் அடித்து ஆடுவார்.

விவியன் இயற்கையிலேயே ஏராளமான திறமைகள் நிரம்பியவர். அவருடைய உள் நரம்பு இயக்கம், கூர்மையான விழிப்பார்வை, உடனுக்குடன் வரும் பந்தைத் தீர்மானிக்கும் திறன், மட்டை வீச்சில் குறிப்பான காலப்பிரமாணம் ஆகியவை அவருடன் பிறந்த திறமைகளாகும்.

இதனாலேதான் ரிச்சட்ஸ் சாதனைகள் பல நிகழ்த்தியுள்ளார். ஒருநாள் போட்டி சாதனைகள் என்று எடுத்துக் கொண்டால் அதிக சதங்கள் போட்ட சாதனை ஹெயின்ஸ் 12 சதங்கள்-விவியன்ரிச்சட்ஸ் 11 சதங்கள்.

ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 6 ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களை முதலில் எடுத்தவர் இவர் தான். மேலும் இவர் 156 போட்டிகளில் பங்குபற்றி 142 இனிங்ஸ்களில் விளையாடி 21 முறை ஆட்டம் இழக்காமல் ஆடி 11 சதங்கள், 42 அரை சதங்கள் அடித்து மொத்தம் 6 ஆயிரத்துப் 16 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

1987-ம் ஆண்டு மார்ச் மாசத்தில் நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் 118 ஓட்டங்களைத் துடுப்பாடிக் குவித்து விட்டு, 41 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கற்றுகளை வீழ்த்தியமை ஒரு உலக சாதனையாகும்.

5.1.88 இல் இந்தியாவிற்கு எதிராக ராஜ்கட்டில் நடந்த ஒருநாள் போட்டியில், 7 சிக்சர் உட்பட 110 ஓட்டங்களை எடுத்தமை, ஒரு உலகசாதனை. 31.5 1984ல் இங்கிலாந்துக்கு எதிராக மான்செஸ்டரில் நடந்த போட்டியில், ஆட்டம் இழக்காமல் 189 ஓட்டங்களை எடுத்து சாதனை நிகழ்த்தியுள்ளார்.

13-10-87இல் இலங்கைக்கு எதிரான உலகக் கோப்பைப் போட்டியில் 181 ஓட்டங்களை எடுத்து கபில்தேவ்வின் முன்னைய சாதனையான 175 ஓட்டங்களை இவர் முறியடித்தார்.

ஒரு வருடத்தில் ஒரு நாள் போட்டிகள் 29-ல் பங்குபற்றி ஒருசதம் 12 அரை சதங்கள் உட்பட 1231 ஓட்டங்களை பெற்றமையும் ஒரு உலக சாதனையாகும் டெஸ்ட் போட்டிகளில் 7 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்து உலகில் தலைசிறந்த 7 துடுப்பாட்டக்காரர்களுள் இவரும் ஒருவராய்த் திகழ்கிறார்.

மேற்கு இந்திய அணியின் தலைவராகக் கடமையாற்றும் ரிச்சட்ஸ்,"கப்டன்"ஆனதும் 4 இளைஞர்களைத்தேர்ந்து எடுத்து கடுமையான வேகப்பந்து வீசும் பயிற்சி அளித்தார். அத்துடன் அவர்களை உன்னிப்பாகக் கிரிக்கெட் ஆட்டங்களை கவனித்து அதன் நுட்பங்களைப் புரிந்து கொள்ள வைத்தார். அதன் பயனாக இப்போது மேற்கு இந்திய அணியில், பாட்டர்சன், அம்பரோஸ் வர்லஷ், ஜயான்பிஷப் போன்றவர்கள் பெஞ்சமினுக்கும், மார்சலுக்கும் துணையாக சேர்ந்து கொண்டனர்.

மேற்கு இந்திய அணியில் சுழல் பந்து வீச்சாளராக இடம் பிடித்த ஹப்பரை சிறந்த துடுப்பாட்டக்காரராக ஆக்கிய பெருமையும் ரிச்சர்ட்ஸைச் சேரும்.

இன்று மேற்கு இந்திய அணி உலகத்திலேயே தலை சிறந்த கிரிக்கட் அணியாக, இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் புகழ்க்கொடி நாட்டியுள்ளது.

மேற்கு இந்திய அணியில் உள்ள ஒவ்வொரு ஆட்டக்காரரும் ரிச்சட்ஸ் இடம் மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளார்கள். ரிச்சர்ட்ஸும் அவர்களை தக்க முறையிற் பயன்படுத்தித் தனது அணிக்குவெற்றி மேல் வெற்றியைத் தேடிக் கொடுத்து வருகிறார். தனது அணி எப்போதாவது தோல்வியைச் சந்திக்க நேர்ந்தால், அதற்கான முழுப் பொறுப்பையும் தானே ஏற்றுக் கொள்கிறார்.

ரிச்சட்ஸ் ஆடும் பொழுது சமயிங்கத்தைவாயிற்போட்டுக் குதைப்பிக் கொண்டு அலட்சியமாக ஒவ்வொரு பந்தையும் அடித்து ஆடுவார்.

எவ்வளவு வேகப்பந்து வீச்சாளர் ஆனாலும் இவரும் சுனில் கவஸ்கர் போன்று ஹெல்மட் அணிந்து கொள்ள மாட்டார்.

இவர் துடுப்பெடுத்தாடும் பொழுது, பந்து வீச்சாளரின் கை அசைவுகளைக் கூர்ந்து கவனிக்க மாட்டார். பந்து பிச் ஆனவுடன் அல்லது பிச் ஆவதற்கு முன்பு முன்னேறிச் சென்று எதிர்கொண்டு தாக்குவதுதான் அவரது டெக்னிக். 'முன்னே கால்வைத்து டிரைவ் செய்வதுதான் ஓட்டங்களை எடுப்பதற்கும், விக்கட்டைப் பாதுகாப்பதற்கும் சரியான வழி' என்பது அவருடைய முடிவு.

மேலும் அவர் துடுப்பாட்டத்தில் புதிய சாதனைகளைப் புரிய வேண்டும் என்று ஆடுவதில்லை. ஆட்டத்தை விறுவிறுப்பாக்கவும் ரசிகர்கள் ரசிக்கவுமே ஆடுகிறார், ஆனால் இவரின் ரசிகர்களோ, இவரும் கவாஸ்கரைப் போல 34 சதங்களைப்போட்டு 10ஆயிரம் ஓட்டங்களைப் பெற வேண்டும் என்று தான் விரும்புகிறார்கள்.

விவியன் ரிச்சட்ஸ் ரசிகர்களின் இந்த ஆவலைப் பூர்த்தி செய்வாரா?

# அனிச்சத்தைவிட மென்மையானவை ஐந்து

சி. து. இராஜேந்திரம்
பி, ஏ, எம். லிட்,

மலர்களைப் பற்றிக் கூறாத தமிழ் இலக்கியங்களும் இல்லை; வேற்றுமொழி இலக்கியங்களும் இல்லை, மலர்களின் இயல்புகளை அறிந்து அவற்றைப் பொருத்தமான இடங்களில் இலக்கியகர்த்தாக்கள் எடுத்தாண்டுள்ளனர். முல்லை, கொன்றை, குமுதம், அல்லி, குறிஞ்சி, மல்லிகை, தாமரை, ரோஜா, குவளை, அனிச்சம் என்று இவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். கருங்குவளைக் கண்கள், முல்லைச் சிரிப்பு, ஆம்பல்வாய், தாமரை முகம், காந்தட்கையினள் என்று தலைமகள் ஒருத்தியின் வனப்பையெல்லாம் மலர்களைக் கொண்டே வருணித்துவிடும் வல்லமை சிறந்த கவிஞருக்கு உண்டு.

வள்ளுவப் பெருந்தகையும் தம் குறட்பாக்களில் ஆங்காங்கே சில மலர்களை உவமைகளாகவோ உருவகங்களாகவோ பொருள் விளக்கத்திற்காகப் பயன்படுத்தியுள்ளார். இங்கு அவர் அனிச்சமலரைத் தம் பாடல்களில் கையாண்டிருக்கும் சிறப்பினை ஆராய்வாம். மலர்களிலெல்லாம் அனிச்சம் பூவே மிகவும் மென்மைவாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் வள்ளுவநாயனார் இவ்வனிச்சத்தைவிட மென்மையானவரும் இவ்வுலகத்தில் உளர் என்ற புதுமையான கருத்தினைத்தருகின்றார்.

## விருந்தினர் மென்மை

இல்லறத்தில் ஈடுபடுபவர்களுக்குத் தம் இல்லம் வரும் விருந்தினர்களை உபசரித்தலே தலையாய அறமாகுமென வள்ளுவர் விருந்தோம்பல் என்னும் அதிகாரத்திற் கூறியுள்ளார். விருந்தினரை ஓம்புவார்க்கு இன்முகம்இன்றியமையாதுவேண்டப்படும்என்பதனை

'மோப்பக் குழையு மனிச்ச
முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து'

என்ற குறட்பா மூலம் விளக்குகின்றார். அனிச்சம் பூ ஒருவர் அதனை மணந்து பார்த்தவுடன் வாடிவிடும் இயல்புடையது. ஆனால் விருந்தினரோ இல்வாழ்வான் முகம் மாறுபட்டு நோக்கியவுடனேயே வாடிவிடுவர். அனிச்சம் பூ தீண்டியதும் தான் வாடிவிடும். ஆனால் விருந்தினரோ தீண்டாமலே வாடிவிடுவர். அவர்கள் தூரத்தே வரும்போதே இல்லறத்தான் இன்முகம் காட்டி உபசரிக்காது மாறுபட்டு நோக்கின் அதனால் வாட்டமுற்று அவ்விடம் விட்டு நீங்கி விடுவர். ஆகவே விருந்தினர் அனிச்சத்தை விடமென்மையானவர்கள் என்பது பெறப்படும்.

## தலைமகளின் மென்மை

வள்ளுவப் பெருந்தகை காமத்துப் பாலிலே களவியல் கற்பியல் இரண்டு பற்றியும் அகத்துறைக்கே உரித்தான தனிச் சுவையுடன் விளக்குகின்றார். தலைமகன் ஒருவன் தலைமகள் ஒருத்தியைக் களவிற் கூடியதன்பின் அவளது நலத்தைப் புனைந்து உரைக்கும் போது

'நன்னீரை வாழி யனிச்சமே
நின்னினு
மென்னீரள் யாம் வீழ்
பவள்'

என்று அனிச்சமலரை விளித்துக் கூறுகின்றான். 'அனிச்சம் பூவே! அனிச்சம்பூவே! மென்மையால் நீ எல்லா மலர்களிலும் நல்ல இயற்கையை உடையாய்! ஆனால் என்னால் விரும்பப்படும் தலைவியோ உன்னைவிட மென்மையான இயற்கையை உடையவள். எனவே நீதான் மென்மையானவள் என்ற செருக்கினை இனியாவது ஒழித்து விடு" என வேண்டி நிற்கிறான் தலைவன்.

## தலைவியின் இடையின் மென்மை

பகற் குறிக்கண் தலைவியைச் சந்தித்துவிட்டு வந்தான் தலைவன். அவளது அழகிய உருவமோ அவன் மனதை விட்டு அகன்றபாடில்லை. அவள் தலையிற் சூடியிருந்த அனிச்ச மலரை நினைத்துக் கொண்டான். "அனிச்சம் மென்மையான மலர் ஆகையால் அதனை மட்டும் அணிந்தாற் பரவாயில்லை. ஆனால் தலைவியோ தன் இடையின்மென்மை உணராது காம்பினை நீக்காது அதனோடு சேர்ந்த அனிச்சம் பூவினை அல்லவா சூடியிருந்தாள்? பாவம் பாரம் தாங்க முடியாது அவள் இடையல்லவோ ஒடிந்து விடப் போகிறது?" என்று தனக்குள்ளேயே கேள்விக்கணைகளைத் தொடுத்து விடை காண முடியாது கலங்கினான் தலைவன்.

'அனிச்சப் பூக் கால்
களையாள் பெய்தா ளுசுப்
பிற்கு நல்ல படா அ
பறை'

இவ்வாறு அனிச்சம் பூவை உதாரணமாக எடுத்துக் கொண்டு தலைவியின் ஒடிந்து விடும்மெல்லிடையை மட்டுமன்றித் தலைவனின் மென்மையான உள்ளத்தையும் துலக்கமாக விளக்கி விட்டார் வள்ளுவர்.

## மாதரடியின் மென்மை

பொருள் தேடுதற் பொருட்டுத் தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து செல்லவேண்டிய நாள் வந்தது. தலைவிக்கோ அவனைப் பிரிந்து ஒரு பொழுது கூட வாழமுடியாத அத்துணை வருத்தம். என் செய்வாள்? தன் வருத்தத்தை தன்தோழியிடம் கூறினாள். தோழிவேறு வழியின்றித் தலைவியின் காதல் வேட்கையையும் பிரிவாற்றாமையையும் தலைவனுக்கு எடுத்துக் கூறி உடன் போக்குச் செய்யும்படி வற்புறுத்தினாள். தலைவன் அவ்வேண்டுகோளை மறுத்தான். தலைவியுடன் கொடிய சுரத்திடைப் போவது எவ்வளவு கடினமானதென்பதை அவன் மிகவும் சுருங்கிய சொற்களால் தெளிவாக எடுத்தியம்புகிறான்.

"அனிச்சமு மன்னத்தின்
றூவியு மாத ரடிக்கு
நெருஞ்சிப் பழம்"

இது தலைவனது கூற்று. உலகத்தார் மென்மைக்கென உதாரணங்களாக எடுத்துக் கூறும் இரண்டு பொருள்கள் உண்டு. ஒன்று அனிச்சமலர். மற்றது அன்னப்புள்ளின் சிறகு. ஆனால் இவையிரண்டும் கூட மாதரடிக்கு நெருஞ்சிமுள்போல் வருத்தம்செய்யும். அவ்வளவு மென்மை வாய்ந்தன அவர்களின் பாதங்கள். நிலைமை அப்படியிருக்கத் தலைவி கொடிய கற்களும் முட்களும் நிறைந்த கானகத்தினூடாகத் தன்னுடன் வருதலென்பது கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாத காரியமெனக் கூறாமல் கூறிவிடுகின்றான் தலைவன். இவ்வாறு அனிச்சத்தை ஆதாரமாகக் கொண்டு வள்ளுவப் பெருந்தகை பெண்மைக்கே உரித்தான மெல்லியல்புகளைத் தெளிவுறப் புலப்படுத்தி உள்ளார்.

## தென்றலின் மென்மை

அனிச்சம்பூ என்றதும் தற்காலக் கவிஞராகிய பாவேந்தர் பாரதிதாஸனின் பாடல் ஒன்றின் அடிகள் சில நினைவுக்குவருகின்றன. 'தென்றல்' பற்றிப் பின்வருமாறு அவர் பாடுகின்றார்.

'திண்குன்றைத் தூள்
தூளாகச்
செய்யினும் செய்வாய்
நீ ஓர்
நுண்துளி அனிச்சம் பூவும்
நோகாது நுழைந்தும்
செல்வாய்'

தென்றலானது புயலாகி விட்டால் மலைகளைக்கூடப் பொடிபண்ணைச்செய்துவிடும். அதே தென்றல் மந்தமாருதமாக வரும்போது மென்மையான அனிச்சம் பூவிற்குக்கூட வருத்தம் ஏற்படாதவாறு இதமாகத் தவழ்ந்து செல்லும். இனிமையான இளந்தென்றல் அனிச்சத்தைவிட மென்மையானது என்பதுதானே பாவேந்தரின் கருத்து!

## காலங்கள் . . .

[11-ம் பக்கத் தொடர்]

றேன். அடித்துத் திருத்துவதை விட அன்பால் திருத்துவது நிரந்தரமானதாக இருக்கும் இல்லையா அங்கிள்' என்ருன் ரகு.

'என்னவோ ரகு நீ எதைக் கூறினுலும் உன்னிடம் நான் படிக்க வேண்டியது நிறைய இருக்கு. உன்ரை வயதில் எனக்கு பொறுமை இடையாது. இவ்வளவுக்கு ஆற்றல் கிடையாது. இவையாவும் உன் இரத்தத்தில் ஊறியவை. இன்று உனக்கு வேண்டியவர்கள் மத்தியில் கூறுகின்றேன் உன் தகப்பன் சத்தியமூர்த்தி உன்னைப்போலவே பிறர் துயரப்படுவதைப் பொறுக்க மாட்டான். என் மாமனுர் கடையில் ஒருவன் தினசரி கப்பம் வாங்கிவந்தான். வருட வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. அன்று நான் கப்பம் கேட்டவனை கொஞ்ச நேரம் பொறுக்கும்படி கூறினேன். அவன் கத்தியைக் காட்டி கோபமாக பேசினுன் என்னை கொல்வேன் என்ருன். அடுத்த கடையில் நின்ற உன் தகப்பன் சத்தம் கேட்டு ஓடி வந்தான். நிலைமையை ஊகித்துக்கொண்டதும் முதலில் நயமாகப் பேசினுன். அவன் விட்டபாடில்லை அடுத்த நிமிடம் இடி இடித்தாற்போல இரண்டு சத்தம் கப்பம் கேட்டவன் படியால் உருண்டு ரோட்டில் விழுந்தான். உன் தகப்பனை நான் கட்டிப்பிடித்துக் கொண்டேன். அவன் எழுந்து நின்று கன்னு பின்னு என்று பேசினுன். அன்ருேடு கப்பம் கேட்டவன் கடைத் தெருப்பக்கம் தலை காட்டவில்லை. கடைத்தெருவிலுள்ள சிங்களவர்கள், தமிழர் முஸ்லிம்கள் எல்லோரும் உன் தகப்பனை பாராட்டினுர்கள். அவன் கல்யாணத்துக்கு நான் போன போது ஆளுக்கு ஆள் போட்டி போட்டுக்கொண்டே பரிசு தந்து அனுப்பினர். ஒரு கோஷ்டியே கண்டியில் இருந்து போனேம்.

என் உயிர்காத்த தெய்வம் அவன். நான் உனக்கு உதவினேன் என்ருல் என் வாழ்வும் வளர்ச்சியும் உயிரும் அவனிட்ட பிச்சை. அந்தச் சத்தியமூர்த்தி எல்லோருக்கும் நல்ல நண்பனுக விளங்கியவன் சிங்களவனும் சிங்களவனும் அடிபட்டுச் சாகட்டுமே என்று எல்லோரையும் போல அவனும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருக்கலாம். யார் வீட்டுப் பணம் யாருக்குப் போனுல் எனக்கு கென்ன என்று சம்பளத்துக்கு வேலை செய்துகொண்டிருந்த சத்தியமூர்த்தி பேசாமல் இருந்திருக்கலாம் தன் கண்முன்னே ஓர் அநியாயம் நடப்பதைக் காணச் சகிக்காமல் ஒரு சிங்களக் காடையனை அடித்து துரத்தினுன் என்ருல்......அது சாதாரண விடயம் என்று நினைக்க முடியாது. இதெல்லாம் ஒருவனுடைய இரத்தத்தோடு உடம்போடு ஊறிய செயல். அந்த சத்தியமூர்த்தியின் இரத்தம் உன் உடலில் ஒடுவதால் தான் உனக்கும் இயல்பாகவே இந்த ஆபூர்வ குணங்கள் உன் சேவையால் மலரும் ஒவ்வொரு முகங்களிலும் சத்தியத்தின் ஒளி வீசுவதை நான் காண்கிறேன் ரகு'என்ற போது அவர் விழிகளில் நீர் ததும்பி வழிந்தது.

ரகுவரனுக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை. இதுவரை காலமும் தன்னிடம் கூருத ஓர் விடயத்தை தன் தந்தை மீது அவர் வைத்துள்ள நன் மதிப்பை, உயர்வான எண்ணங்களை தன் நண்பர்கள் முன்னிலையில் கொட்டித்தீர்த்த சமரசிங்காவிடம் மேலும் மேலும் பாச உணர்வு மேலிட்டது.

'அங்கிள், அங்கிள்' என்ற போது அவன் விழிகள் கலங்கின'

## வந்தது மின்

[ 8-ம் பக்கத் தொடர்]

யவற்றிலும் இந்த ஆற்றல் உள்ளதென்று கூறினுர்.

(அன்புபேனு ஒன்றின் அழுத்தமான பகுதியைத் தனது சட்டையிலே உராய்ந்து அது சிறிய கடதாசித் துண்டுகளைக் கவர்வதைப் பார்க்கிருன் மற்றவர்களும் அதே போல் செய்கிருர்கள்)

**அன்பழகன்:** இது தானே அவர் கண்ட மின்?

**அறிவழகன்:** ஆம்...... இது ஒடாது.

**இளவழகன்:** நடக்குமோ?

**அறிவழகன்:** நான் தான் இப்போது நடக்கப் போகிறேன் நேரம் போய்விட்டது, நாளை வருகிறேன்.

**தேன்மொழி:** அடிக்கடிவாருங்கள் அண்ணு உங்களோடு கதைத்தது ஒரு நிறைவாக இருக்கிறது.

**இளவழகன்:** அடுத்த முறை எப்போது வருவீர்கள் என்று பார்த்திருப்போம்.

**அறிவழகன்:** நான் போய் வருகிறேன்.

(எழுந்து கதவைத் திறந்து வெளியே செல்கிருர் மற்றவர்கள் தொடர்ந்து சென்று வழி அனுப்பி விட்டு வருகிருர்கள்)

---

'ரகு சத்தியமூர்த்தியின் நல்ல குணங்களை மட்டுமே மூலதனமாக்கியுள்ளேன். நான் உன்னை வளர்த்தேன், படிக்கவைத்தேன், எனக்கு நீ பாரமாயிருந்தாய் என்று மனம் புழுகியிருந்தாய் நல்ல ஒரு பயிருக்கு பசளையிட்டு, நீர்ப்பாய்ச்சி நான் வளர்த்தேன், பலனை அனுபவிக்கிறேன். அந்த வித்து நல்ல வித்தாக அமைந்ததே பயிர் நன்ருக வரக் காரணமாயிருந்ததேயன்றி வேறு ஒன்றுமல்ல' என்று கூறிவிட்டு மௌனமாயிருந்தார்.

'சார் நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்ற முதுமொழிக்கிணங்க' நீங்களும் அதே கொள்கையில் ஊறி வளர்ந்திட்ட தம்பியும் எங்களுக்கு கிடைச்சிருக்கிறீங்கள் நாங்கள் எங்கள் நன்றிக் கடனை எப்படிச் செலுத்தப் போகின்ருேம் என்பதே எனது சிந்தனை'' என்ருர் சந்தையா மாஸ்டர்.

'எதற்கும் ஒருகாலம் வரும் மாஸ்டர்'என்ருர் சமரசிங்கா

'ஆண்டவன் நல்லவர்களுக்கு மேலும் பல நன்மைகளையே வழங்குவார்' என்று ஆசி கூறி விடைபெற்ருர்.

சிறி மட்டும் அங்கேயிருந்தான். சமரசிங்காவின் பேச்சு அவன் உள்ளத்தையும் உருக்கி விட்டிருந்தது.

'சிறி என்ன பேசாமலே இருக்கிருய்? அங்கிள் கூறியவை உன்னையும் சிந்திக்க வைத்து விட்டதுபோலிருக்கே' என்று அவன் கரங்களை பற்றினுன்.

'ரகு' உன் மனக்குறைகள் இன்ருேடு நீங்கியிருக்குமென நினைக்கிறேன் உன் அப்பாவைப் பற்றி நீ கொண்டிருந்த சிறிய எண்ணங்களை அங்கிள் கழுவித் துடைத்து விட்டார். —'

'ஒகே ஒகே என்ருன் ரகு சிரித்தவாறே.

'ரகு நாணயவாதியான சத்தியனின் ஒருபக்கத்தை உனக்கு காட்டியிருக்கிறேன் மறுபக்கத்தினை சந்தர்ப்பம் வரும்போது பார்க்கலாம். நாளைக் காலையில் நான். நீ, சின்னையா, தம்பிசிறி, சந்திரஞானம் ஆகியோர் யாழ்ப்பாணம் போகின்ருேம் மிகுதியை உன் சினேகிதனிடமே கேட்டுத் தெரிந்துகொள்' என்று கூறிவிட்டு எழுந்து வெளியே சென்ருர்.

சிறி சிரித்துக் கொண்டே ரகுவின் கையை இறுகப் பற்றிக் கொண்டான்.

## ஞானேதயம்

[ 7-ம் பக்கத் தொடர் ]

விடும்!'' என்று சொல்லி ஹ ஹ் ஹ ஹ் ஹா! என்று சிரிப்பதுபோல இருக்கிறது.

திரும்பி வீடு நோக்கி நடக்கின்றேன் கனக்கும் இதயத்துடன்

வீட்டுக்கு வந்ததும்அவசரத்தில் சாய்மனை நாற்காலியித் சாய்கிறேன். பொங்கிவரும் சோகத்தில் ஒரு முறை வாய் விட்டு அழலாம் போலிருக்கிறது.

''என்ன வந்து ஒன்றும் பேசாமல் இருந்துட்டியள்? களையா? பாடசாலை எப்படி இருக்கு? வாத்திமார் பிள்ளையள் என்னவாம்?'' என்று கேட்டுக்கொண்டு கிட்ட வந்தாள் எனது மனைவி மரகதம்.

''பாடசாலை நல்லாய் நடக்குது. ஆனுல் வாத்திமார் பிள்ளையள் எல்லாரும் என்னை மறந்துட்டினம். ஏதோ ஒப்புக்குக் கதை பேசினுங்கள், சிரிச்சாங்கள் பெரிய ஏமாற்றம்! அங்க போகாமாலே இருந்திருக்கலாம்!'' என்று பெருமூச்சு விடுகின்றேன்.

''அதுதான் எல்லாரும் வந்துசந்திச்சுப்பேசியிருக்கிருங்களே! இதுக்கும் மேலே உங்களோட மினைக்கெட முடியுமா? அவரவருக்கும் அவரவர் கடமை இருக்கே!''.

''என்னேடை உற்ருண்மையாகப் பழகின நண்பர்கள் எனக்குக் கீழே வேலை செய்த ஆசிரிய ஆசிரியைகள் எத்தினைபேருக்கு எத்தினை உதவியள் செய்திருப்பன்! எத்தினை சலுகையள் வழங்கியிருப்பன்?— எல்லாரும் எல்லாத்தையும் மறந்துட்டாங்கள்''

''இஞ்சாருங்கோ! நாங்கள் இந்த உலகத்திலே இருக்கும் வரைதான் நட்பு சிரிப்பு எல்லாம். அதிகாரத்திலே இருக்கும் வரைதான் மதிப்பு மரியாதை, செல்வாக்கு!...இது தான் மனித உறவு! உலக இயற்கை! இது தெரியாமல் நிக்கிறியளே?''மரகதம் லேசாகச் சிரிக்கிருள் என்னை உற்சாகப்படுத்துவதற்காக.

''நான் அதிபராக இருந்த காலத்திலே எத்தினை பிள்ளையள் ஒ. எல்.பாஸ் பண்ணிச்சுதுகள்! எத்தினை பிள்ளையள் ஏ.எல். பாஸ்பண்ணவைச்சு வாசிற்றிக்கு அனுப்பினன்?''

''இதுகளையெல்லாம் நீங்கள் சேவையாகவா செய்தியள்?. உங்களுடைய கடமையைச் செய்தியள் அதுக்கு அரசாங்கம் உங்களுக்குச் சம்பளம் தந்தது''.

''ஒரு பெரிய மாடிக் கட்டடத்தையே கட்டுவிச்சனே மரகதம்?''

''உங்கடை காசிலேயா கட்டுவிச்சியள்? அரசாங்கம் காசு தந்துது நீங்கள் கட்டுவிச்சியள். நீங்கள் இல்லாட்டா வேறை ஒருதன் கட்டுவிச்சிருப்பன்!''

அப்ப என்ன?நான் அதிபராக இருந்த பத்து வரியத்திலும் செய்த வேலை ஒண்டுமே இல்லை எண்டா சொல்லுருய் மரகதம்? எவ்வளவைச் செய்தன். எவ்வளவை எதிர்பார்த்தன்! எனக்கு இப்ப இருக்கிற ஏமாற்றத்திலே ஒருக்கா வாய்விட்டு அழலாம் போலே இருக்கு!''

என்கிறேன் குரல் தழுதழுக்கிறது.

''நீங்கள் கடமையைச் செய்தியள் அதுக்கு உங்களுக்குச் சம்பளம் தரப்பட்டிருக்கு. அதுக்கும் மேலே நீங்கள் பெரிய நன்றியை எதிர்பாக்கிறியள் அதுதான் உங்களுக்கு ஏமாற்றமாயிருக்கு''.

''அப்பிடி எதிர்பாராமல் இருக்க முடியேல்லையே மரகதம்'' என்கிறேன் குரல் ஆற்ருமையில் உடைகிறது.

''நீங்கள் பகவத்கீதை படிச்சவர் தானே? அதிலே பகவான் என்ன சொல்லுருர்? கடமையைச் செய் பலனை எதிர்பாராதே எண்டு தானே? அதை மறந்துட்டியளா?''

''ஓம் கடமையைச் செய் பலனை எதிர்பாரதே! பகவத்கீதையைப் பலமுறை படித்து பல வருடங்களாக அதை ஆயிரம் ஆயிரம் மாணவர்களுக்குக் கற்பித்த எனக்கு, அது கூறுகின்ற தாரக மந்திரம் உரிய நேரத்திலே ஞாபகம் வராததுக்குக் காரணமென்ன? என்னுடைய சுயநலம் தானே? ஒரு குடும்பப் பெண்ணின் கடமைகளை மட்டும் செய்துகொண்டு வீட்டுக்குள்ளே அடைபட்டுக்கிடக்கிற அதிகம் படிப்பறிவு இல்லாத மரகதம் எனக்கு அதை ஞாபகமூட்ட வேண்டியதாப் போச்சு!?

என்னுடைய நெஞ்சிலிருந்து ஒரு பெரிய பாரம் இறங்குகிறது.''ஓம் மரகதம் கடமையைச் செய்ய வேணும் பலனை எதிர்பாக்கக்கூடாது. பலனை எதிர்பாத்ததுதான் என்னுடையதுன்பத்துக்குக்காரணம். எனக்கு அந்த தாரக மந்திரத்தைச் சரியான சமயத்திலே ஞாபகமூட்டினதுக்கு நன்றி!'' என்கிறேன் நிதானமான குரலில்.

''பலன் கூட உங்களுக்கு ஓரளவு கிடைச்சிருக்கு. அதை பாத்துச் சந்தோஷப் படுங்கோ!''

''இல்லை மரகதம். என்னுடைய சஞ்சலம் நீங்கீட்டுது. ''எனக்குமன அமைதி கிடைச்சுட்டுது.''

''காலங் கடந்தெண்டாலும் இந்த ஞானேதயம் வந்தது பெரிய காரியம்'' - மரகதம் சிரிக்கிருள்.

பெருமூச்சு விடுகிறேன்; அது நிம்மதிப் பெருமூச்சு.


# ஆங்கிலம்
# பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நாமும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால்மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

## Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து

★ I thank you very much for your nice training. I can speak and write english now. I never forget your training centre and I like to introduce your training centre to my friends and relations.

MISS. RADSANIYANAYAKI KRISHNAPILLAI
NARANTHANAI CENTRAL, KAYTS.

★ I can speak and write english vely well now. I feel I am very happy when I talk with my friends because of your spoken english is enough for me.

MISS SOZAMATAEVY KRISHNARAJAH
KINGS AVENUE, URUMPARAI EAST,
URUMPARAI.

★ I am very glad to write my thoughts in this letter. I am proud of you and your centre. BTC has cultivated my english knowledge withen three months It is yours success, NO DOUBT. I have already told about your centre to my friends I can help to your centre whenever I can.

MASTER THAVANAYAGAM GNANAVINTHAN
"SHUKTHANTHAM" KARAITIVU-1.

★ I would like to inform you that after I got BTC english training I have learn a lot of vocabulary and improved my english knowledge.

Miss S. FOWZIYA ANAS,
No. 14, N. H. MAWATHA,
CHINA FORT, BERUWELA.

★ Before I join to your BTC as a student I had very hesitation and fear to speak english, now by the help of your BTC I have fair knowledge to read, write and speak in english.

MR. K. GNANALINGAM, MAIN STREET,
THAMBILUVIL - 2. (E. P.)

★ வெளிநாடுகளில் உள்ள மாணவர்க்கு விசேட ஊக்குவிப்பு திட்டங்களுடன் தபால்மூலம் ஆங்கிலம் நடைபெறுகிறது.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க.

# BRIGHT TRAINING CENTRE

P. O. Box 162 Colombo

07086

# வாழ்வழி

சிவத்தமிழ்ச் செல்வி-தங்கம்மா அப்பாக்குட்டி

## ஈதல் இசைபட வாழ்தல்

### ஈத்துவக்கும் இன்பம்

மனிதன் பல வழிகளில் இன்பங்களை அநுபவிக்கமுனைகிறுன். அடையும் இன்பங்களாலே திருப்தியான உளப்பாங்கை அவன் அடைகிருனு? என்பது ஒரு கேள்வி. இன்பம் போலக் காட்டித் துன்பத்துக்கு இழுத்துச் செல்லும் நிகழ்ச்சிகள் பல. ஆனுல் ஈத்து உவக்கும் இன்பம் உண்மையிலேயே மன நிறைவைக் கொடுப்பது. என்பதை வள்ளுவர் முதல் அனைத்துச் சான்றேர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். இரப்பார்க்கு ஒன்று ஈவதே இன்பம் என்ற கருத்தைப் பெரியவர்கள் மேற்கொண்டார்கள். சங்ககால இலக்கியங்களில் கொடையின் பெருமைக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. வள்ளல்களும் மன்னர்களும் கொடுத்துக் கொடுத்து மகிழ்ந்தனர். அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்து மகிழ்ந்தான் அதிகமான். மயிலுக்குப் போர்வை ஈத்து நிறைவு கண்டவன் பேகன். கொடையின் பெருமைக்குக் கர்ணனுடைய வரலாறு பெரிய எடுத்துக் காட்டாகும். தான் ஈட்டிய புண்ணியத்தையே கையளிக்க முன் வந்தவன் கர்ணன். இரந்து வந்தவர்களுக்கு இல்லையென்னுது தன் பறம்பு நாட்டையே பரிசிலாகக் கொடுத்தவன் பாரி. தமிழிலே இராமாயணம் என்ற காவியம் எழுவதற்கு அறக்கொடை வழங்கியவர் சடையப்ப வள்ளல். புகழேந்திப்புலவருக்கு ஆதரவளித்தவர் சந்திரன் சுவர்க்கி. பரிசில் பெற்ற ஒரு வறியோன் தன் மனைவியிடம் பின்வருமாறு கட்டளை இடுகிறுன். ''யாராவது எமது இல்லத்துக்கு ஏதாவது ஒன்றை இரந்து வருவாராகில், என்னுடன் ஆலோசிக்க வேண்டுமென்றுகூறி அவர்களை திருப்பி அனுப்பிவிடாதே; வந்தவர்கள் யாரென்று ஆராய்ச்சி பண்ணுதே; இன்ஞருக்குத்தான் கொடுப்பேன் என்று வரையறுத்துப் பேசிவிடாதே; அவர்கள் துன்பத்தைத் துடைத்து உடனடியாக ஏதாவது கொடுத்து அனுப்புவது உனது கடமையாகும்''. இந்த அற்புதமான கருத்தைத் தாங்கிவரும் பாடல் ஒன்று சங்க இலக்கியத்தில் உண்டு. எனவே, தான் பெற்ற இன்பத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும் என்ற பெருங்குணம் இதனுல் புலப்படுகிறது.

### ஈகைக்குணம்

ஆதி சங்கராசாரியார் இளவயதிற் சந்நியாசம் ஏற்றதும் முதன்முதலாக ஒரு வீட்டின் வாசலிற் கையிலேபிட்சா பாத்திரத்தைத் தாங்கியவராய் நின்ருர். வீட்டுக்கார அம்மாள் அந்த இளம் சந்நியாசியை வந்து பார்த்தாள்; கொடுப்பதற்கு ஒன்றும் இல்லையே என்று ஏங்கிஞள். வறுமையின் பிடியிலே தவித்துக் கொண்டிருக்கும் அந்த இல்லத்தில் ஒரு அரிசி மணிகூட இல்லை. என்ருலும் ஏதோ எடுப்பது போன்று வீட்டினுள்ளே நுழைந்து பாதி அழுகிய நிலையிலிருந்த நெல்லிக்கனியைக் கண்டெடுத்துக் கொண்டு வந்து பிட்சா பாத்திரத்தில் அதனை இட்டு வணங்கி நின்ருள். அந்த அம்மாள். இந்தநிலையை உணர்ந்த சுவாமிகள் உடனே இலட்சுமி தோத்திரம் பாடினர். வீடு பொன்னுலே நிறைந்தது. அவர் பாடியருளிய தோத்திரமே ''கனகதாரா'' என்ற பெயரையுடைய சுலோகங்களாகும். கொடுக்க எதுவும் இல்லா விட்டாலும் கொடுக்க வேண்டுமென்று உள்ளத்தில் எழுந்த எண்ணத்துக்குத்தான் இத்தனை பரிசு. கொடுத்து மகிழ்வதில் மனிதனுக்கு சுவர்க்க அநுபவம் கிடைக்கிறது. இந்திரனுடைய தேவாமிர்தம்தான் கிடைத்தாலும் தனியே அவற்றை உண்டு அனுபவிக்காது பலருக்குப் பங்கிட்டுத் தானும் உண்டு மகிழ்வதையே பெரியோர்கள் விரும்பினர். தனித்து உண்ணல் தமிழர் பண்பல்ல; இவ்வுலகம் நிலைபெறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. என்ருலும் பகிர்ந்துண்ணும் பண்பாளர் வாழ்வையே முதலில் வைத்துப் பாடினுன் இளம் பெருவழுதி.

### உலகமே பாற்கடல்

ஈத்து உவத்தல் இனிய தொரு அறம், இவ்வுலகமே ஒரு பாற்கடல் போன்றது, முறையாக வாழ்வதற்கு அது அமுதத்தை நல்கும்; முறைகேடாக வாழத் தலைப்படில் அது நஞ்சைத்தான் வெளிப்படுத்தும். அறிவையும் அநுபவத்தையும் கொண்டு பாற்கடலை நாம் பயன்படுத்த வேண்டும். இக்கடலில் நாம் பெறும் பேரின்பம் ஈத்துவப்பதால் ஏற்படுவதாகும். தேசப்பற்று, மொழிப்பற்று, நட்பு, குலப்பற்று, சமயப்பற்று ஆகியவைகளால் மனச்சான்று பேணப்படுகிறது. மனச்சான்றே மனிதனின் உயரிய சொத்து. இதை அழித்தால் சத்தியமே அழிந்துவிடும். வீட்டிற்கு வரும் அதிதியின் குரல் எமது அந்தராத்மாவின் குரல்தான் என்பதை மறக்கக்கூடாது. நாம் தேடியவை சில சந்தர்ப்பங்களில் எமக்கே பயன்படாமல் போய்விடும். வெயில் காலத்தில் நமது உடம்பே எமக்கு நிழலைத் தராது. வேறு எங்கோ இருந்துதான் நிழலைப் பெறுகிறேம், இறையருள் என்ற நிழல் எமது வாழ்வுக்குப் பயன்பட வேண்டுமானுல் ஈகை என்ற புண்ணியத்தை நாம் தேடித் தேடி ஆற்றவேண்டும்.

'வையிற் கதிர்வேலோனை
வாழ்த்திவறிஞர்க்
கென்றும்
நொய்யிற் பிளவளவேனும்
பகிர் மின்கள் உங்கட்
கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா
உடம்பின் வெறு நிழல்
போல்
கையிற் பொருளும் உதவாது
காணுங் கடை வழிக்கே'

அருணகிரிநாத சுவாமிகளின் அலங்காரப்பாடல் இதுவாகும்.

### இறுதிக்காலத்தின் இன்பம்

ஈகை என்ற சொல்லிலே தான் வழங்குகின்ற கையும் கொடு என்ற ஏவலும் இணைந்திருக்கிறது ஒரே நாளில்தருமி என்பவனும் கருமி என்பவனும் இறந்தனர். இருவரும் நிறைந்த செல்வந்தர்கள். இதனைக்கேள்வியுற்ற மக்கள் கண்ணீர் விட்டுப் புலம்பினர். ஈந்து, உவந்து, மகிழ்ந்து நன் மரணம் எய்திவிட்டானே என்று தருமிக்காகக் கண்ணீர் விட்டனர் ஒரு பகுதியினர். பாவம் கொடுக்கத்தெரியாமல் தேடிவைத்துவிட்டு மறைந்துவிட்டானே என்று கருமிக்காகக் கண்ணீர் விட்டனர் மற்றெரு பகுதியினர். இந்தச்சிறிய சம்பவம் பல உண்மைகளை நமக்குக்காட்டுகிறது, மனிதனுகப் பிறந்தவன் வறியார்க்கு ஒன்று ஈவதனுல் தானும் மகிழ்கிறுன், சமுதாயத்தையும் மகிழவைக்கிறுன். சிந்தனை உள்ள மனிதர் ஒவ்வொருவரும் இதனை மறக்கக்கூடாது.

தானமும் தவமும் சிறக்குமானுல் வானவர் நாடு வழி திறக்கும் என்ருர் ஔவையார். எனவே வாழும் உயிருக்கு ஊதியம் ஈதலே ஆகும். மனிதனுக்கு மரணத்தைக் காட்டிலும் துன்பம் தருவது வேறென்றில்லை. ஆனுல் ஈத்துவக்கும் இன்பம் பெற்றவர்களுக்கு அது தித்திக்கும் நிகழ்ச்சியாக நிறைவைக் கொடுக்கும். எனவே வாழும் வழிகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் ஈகையின் பெருமையை அறிந்துகொள்ள வேண்டுமன்றே!

## பதவி உயர்வு

(வேலணை)

வேலணை சேர். வைத்திலிங்கம் துறைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் உதவி ஆசிரியராக கடமையாற்றி வந்த திரு. ஆர். ரி. ஏகாம்பரநாதன் இம்மாதம் முதல் இவ் மகாவித்தியாலயத்தின் பதில் அதிபராக பதவி உயர்த்தப் பட்டுள்ளார்.

## எழுத்துச் . . .

[12-ம்பக்கத் தொடர்]

இன்று தமிழ் மொழியின் பொருளமைப்பே மிக மாறியுள்ளது. தமிழிலேயே கற்ற பலருக்கு இன்றைய சில புதிய தொடர்களும் வாக்கியங்களும் கருத்தைக் கொடுக்காதவையாகச் சும்மா நிறகின்றன. வேறெரு அந்நிய மொழியின் வாக்கிய அமைப்பிற் பெற்ற கருத்துக்களை தமிழிற் கூறும் பொழுது அதனை முற்ருகக்கை விட்டு விடுகிருர்கள். அந்தப் புதிய சொற்கள் கொண்ட வாக்கியங்களால் என்ன கருதுகின்ருர்கள் என்பதை அறிய முடியாமல் இருக்கின்றது. வேறெரு மொழியின் அமைப்பில் வந்த கருத்து, அதே அமைப்பில் தமிழில் வருமோ என்று சிந்தித்தால் இந்த மயக்கம் தெளிந்து விடும் வேற்று மொழி அமைப்பில் வந்த கருத்து தமிழில் கருத்தற்றதாகி விடும். என்பதை உணர்ந்து கொள்ளக் காலந்தான் தேவை. இதை ஏன் இங்கு கூற வேண்டுமென்ருல் எழுத்துச் சீர்திருத்தமும் தமிழின் அடிப்படையைக் குலைக்கும் அதைப்போன்ற ஒரு புதுமை.

எழுத்துச் சீர்திருத்தத்தால் எமது பழைய இலக்கியச் செல்வங்களை வருங்காலச் சந்ததியினர் இழக்க நேரிடும். அதனை எத்தனையோ மூதறிஞர்கள் எடுத்துச் சொல்லி இருக்கின்ருர்கள் அதை நான் மீண்டும் கூறவேண்டியதில்லை.

பழைய ஏடுகளில் புள்ளி விடாமற் தானே எழுதினுர்கள் அது ஒரு எழுத்துச் சீர்திருத்தமல்லவா என்று பலர் கேட்கின்ருர்கள். தமிழ் மொழியில் இன்ன மெய்யெழுத்தின் பின்னர் இன்ன மெய்யெழுத்து வரவேண்டும் என்று ஒரு தனித்தன்மையான ஒலிக் கோலம் உண்டு இதனை நான் எழுதிய தமிழ்மொழி மூலகங்களின் சிறப்பியல்பு என்ற நூலில் மிக விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன்.

சுருங்கக் கூறின், இன்றைய எழுத்துச் சீர்திருத்தத்தால் பெற்ற தமிழ் வரிவடிவங்களால், தமிழில் தனித்துவமான ஒலியியல் அடிப்படை குலையும், (வேகமாகக்கணனி முறை முன்னேறுவதால், பழைய வரிவடிவமே வேகமாக அச்சேற்றவும் தொலைப்பதிவு செய்யவும் உதவும்.) தமிழின் அசை பிரிப்பு முறை முற்ருகக் குலையும்; பழைய இலக்கியச் செல்வங்கள் அழிந்தொழியும்; தமிழின் தனிமையான ஒலிக் கோலங்கள் வலியுறுத்தப் படாவகையால், தமிழ் அதன் சிறப்பியல்பை விட்டுத்திரியும்.

## ஹஜ் சிந்தனைகள்

அபுஸனிஹா

புனித ஹஜ்ஜை நிறைவேற்றும் ஒருவனது எல்லாப் பாவங்களையும் இறைவன் மன்னித்து விடுகின்றுன். அதிகம் பாவம் செய்பவர்கள் ஹஜ் செய்யப் போதிய வசதியிருந்தும் தனது பாவங்களை யெண்ணி இவ்வளவு பாவங்களையும் செய்துவிட்டு ஹஜ் செய்ய வேண்டுமா? என தயக்கத்துடன் வாழ்கின்றுர்கள். எனவே அவர்கள் திருந்தி நல்ல இறைபக்தர்களாக வாழ்வதற்கு ஹஜ் ஒரு வரப்பிரசாதமாகும். எனவே தயக்கத்தை உதறித் தள்ளிவிட்டு துணிவுடன் அவ்வாலயத்தைத் தரிசிக்க முனைவோம். அல்லாஹ்வின் அருள் பெறுவோம்.

## மன்னர் நகருக்கு விரைவில் லக்ஷபான மின் விநியோகம்

மன்னர் நகருக்கு விரைவில் லக்ஷபான மின்சாரம் கிடைக்கவிருக்கின்றது. இதற்கான மின் இணைப்பு வேலைகள் தற்பொழுது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

தற்பொழுது மடுவீதி வரை மின்கம்பி இணைப்புக்கள் பூர்த்தியாக்கப் பட்டுள்ளன. பல இடங்களில் மின் உபநிலையங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. வங்காலை புகையிரதக் கடவையில் நிறுவப்பட்டு வரும் உபநிலைய வேலைகள் பூர்த்தியடையும் கட்டத்தை அடைந்துள்ளன.

தற்பொழுது மன்னர் நகருக்கு மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வரும் மின்சாரமே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டு வருகின்றது.

லக்ஷபான மின்சாரம் கிடைத்ததும் மன்னர் நகருக்கு மட்டுமன்றி சில குறிப்பிட்ட கிராமங்களுக்கும் மின்சார விநியோகம் கிட்டுமென மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## சுன்ஞகத்தில் இருவர் பலி

நேற்றுமுன்தினம் சுன்ஞகம், பண்டத்தரிப்பில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள். சுன்ஞகத்தில் உடுவிலைச் சேர்ந்த தம்பையா சந்திரதாசன் (43) பண்டத்தரிப்பில் அம்புருேஸ் எடிசன் (40) ஆகியோரே சுட்டுக் கொல்லப் பட்டவர்களாகும்.

## இன்று தீர்த்தம்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை வீரபத்திரர் சிவன் கோவில், வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கோவில், சித்தன்கேணி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் கோவில் ஆகிய மூன்று கோவில்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா வெகு சிறப்பாக நடைபெறும்.

## சரியான . . .

[12-ம் பக்கத் தொடர்]

புவனேஸ்வரி: கோபு பேசாமல்க் கிடவடா.

செல்லம்மா: இஞ்சை பாருங்கோ நாங்கள் தலைமுறை தலைமுறையா உத்தியோகம் பாத்துப் பெஞ்சன் எடுத்த குடும்பம் இப்ப கூட எழுதிப்போட்டால் இவருக்குப் பெஞ்சன் வரும் மனுஷன் எழுதலாம். எங்காவது கவுண் மேந்து உத்தியோகம் எண்டால் கொண்டு வாருங்கோ.

ரவி: அம்மா, தலைமுறை தலைமுறையாய் அடிமை வேலை பார்த்த குடும்பம் இனிமேலாவது அக்காவுக்குச் சுதந்திரமான மாப்பிளை...

செல்லம்மா: உனக்கென்னடா கதை வாயை மூடு.

பாலகிருஷ்ணன்: புவனம் நீ என்ன சொல்ருய்?

புவனேஸ்வரி: சொல்ல என்ன இருக்கு (தலைகுனிகிருள்)

பாலகிருஷ்ணன்: சரி கதைக்கு வருவம் ஆர் பெடியன்.

ஆறுமுகம்: தணிகாசலம்பிள்ளையின்ரை கடைசி மகன் சேகரன்

பாலகிருஷ்ணன்: அட அந்த இடத்திலை செய்யக் கொடுத்து வைக்கவேணும், அவருக்கு ஒரேயொரு பெடியன் தானே. நல்ல முயற்சியுள்ள குடும்பம் சீதனம் என்ன கேக்கினம்.

ஆறுமுகம்: சீதனம் வாங்கும் எண்ணம் பெடியனுக்கில்லை...

பாலகிருஷ்ணன்: சம்மதம் சொல்லி விடு சாத்திரியாரிட்டைப் போய் நாள் பார்த்திட்டு வாறன்.

செல்லம்மா: என்ரை சொல்லை ஆர் கேக்கினம் உவையெல்லாம் சம்மதிச்சால் எனக்கென்ன?

ஆறுமுகத்தார் எழுகிருர்.

(திரை)

## சிறுவன் பலி

மயிலிட்டியில் நேற்று முன் தினம் இடம் பெற்ற விபத்தொன்றில் சிறுவன் ஒருவர் மரணமானர்.

## பரீட்சார்த்த குண்டு வெடிப்பு

(தாளையடி)

கிளாலிக் கிராமத்தில் கடந்த சனிக்கிழமையன்று கேட்டபாரிய குண்டு வெடிப்பு சத்தத்தால் அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

அண்மையிலுள்ள இந்திய அமைதிப்படை முகாமில் குண்டு ஒன்று பரீட்சார்த்தமாக வெடிக்க வைக்கப்பட்டது என அறிந்த பின்னரே மக்களின் பதற்றம் நீங்கி கிராமம் வழமைக்குத் திரும்பியது.

## புதிய தலைவருக்கு பாராட்டு

(பருத்தித்துறை)

ராமகிருஷ்ணமிஷன் ராமகிருஷ்ணமடம் ஆகியவற்றின் தலைவராக ஸ்ரீமத் சுவாமி பூதேஷானந்தஜி மகராஜ் அவர்கள் நியமிக்கப்பட்டதை அடுத்து பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதாசேவாச்சிரம அங்கத்தவர்கள் சுவாமிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ஸ்ரீமத் சுவாமி பூதேஷானந்தஜிமகராஜ் அவர்கள் ராமகிருஷ்ணமிஷன் ராமகிருஷ்ணமடம் ஆகியனவற்றின் 12 ஆவது தலைவராவார்.

## இவர்களுக்கு பேனைக்கு பணம்

(தாளையடி)

உப அஞ்சலதிபர்களின் நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்று அஞ்சல் திணைக்களம் உப அஞ்சல் அதிபர்களின் பாவனைக்கு எழுது கருவிவகைகள் (போல்பொயின்ட் பேனு) வாங்குவதற்கு மாதாந்தம் ரூபா பதினைந்து அலவன்ஸாக வழங்கி வருகின்றது. அகில இலங்கை உப தபாலதிபர்கள் சங்கம், அகில இலங்கை தமிழ் பேசும் உப தபாலதிபர்கள் தொழிற்சங்கம் ஆகியன எடுத்த நடவடிக்கையின் பயனுகவே மேற்குறிப்பிட்டுள்ள கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

# விரிவுரையாளர் பலர் நாடு திரும்பவில்லை

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து உயர் கல்விக்கான புலமைப் பரிசிலைப் பெற்று வெளிநாடுகளுக்குச் சென்ற விரிவுரையாளர்களில் பலர் மீண்டும் இங்கு திரும்பிவரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களுக்கு பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் தற்பொழுது உயர்கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்கிவருகின்றன. இவர்கள் தமது மேற்படிப்புக்களை முடித்துக்கொண்டுள்ள போதிலும் மீண்டும் இங்கு திரும்பிவரவில்லை. இவர்களில் பலர் யாழ். பல்கலைக்கழகத்திலேயே தமது பட்டப்படிப்பை முழுமையாக மேற்கொண்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் சிலர் தாம் புலமைப்பரிசில் மூலம் பெற்ற உயர்படிப்புச் சான்றிதழ்களைக் கொண்டு வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் வேறு நிறுவனங்களிலும் தொழில்வாய்ப்பைப் பெற்றுள்ளார்களாம். இவ்வாறு இவர்கள் திரும்பி வராதது குறித்து பல்கலைக்கழக வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

● மின்சாரம் இருந்தால் மோட்டர் பழுது; மோட்டர் சரியானால் மின்சாரம் இல்லை

# வேலணை பகுதியில் வழங்கப்படும் குடிநீரின் சீர்கேடுகள்

(காவலூரர்)

**வேலணை கிராமத்திற்கு வழங்கப்பட்டு வரும் குழாய் நீர், குடிநீர் விநியோகம் தற்போது சீர்கேடடைந்த நிலையில் உள்ளது.**

மின்சாரம் இருந்தால் நீரிறைக்கும் மோட்டர்கள் பழுதாக இருக்கும். மோட்டர்கள் வேலை செய்யக்கூடிய நிலையில் இருந்தால் மின்சாரம் இருக்காது. இதுவே அடிக்கடி ஏற்படும் நிலையாக உள்ளது.

மின் மோட்டர்கள் பழுதானால் அவை உடனடியாக திருத்தப்படுவதில்லை எனவும் இவை திருத்தம் செய்து பூட்டுவதற்கு வாரக்கணக்கு செல்லுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. தேசிய நீர்வழங்கும் சபையால் நடாத்தப்பட்டு வரும் இத்திட்ட மூலம் வேலணையில் பல பகுதிகளுக்கு குடிநீர் ஒழுங்காக கிடைப்பதில்லை என புகார் தெரிவிக்கப்படுகின்றது.

வேலணை துறையூர், வேலணை கிழக்கு அம்மன் கோவில் பகுதி, செட்டிபுலம் போன்ற பகுதிகளில் உள்ள தண்ணீர் பைப்புகளில் இருந்து குடிநீர் சொட்டுச் சொட்டாகவே வெளிவருகிறது.

மேலும் மூன்றடி ஆழமுள்ள குழிகளில் இறங்கியே பெண்கள் நீரெடுக்கவேண்டிய அவல நிலையும் இருந்து வருகிறது.

மழைகாலம் ஆரம்பித்தால் நீர்க்குழாய் நீரினுள் அமிழ்ந்துவிடும். மேலும் இப்பகுதியில் பல குடிநீர் குழாய்கள் உடைந்த நிலையிலும் கழன்ற நிலையிலும் உள்ளன.

## எரிபொருள் தட்டுப்பாடால் மீன்பிடித் தொழில் பாதிப்பு

எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து குடாநாட்டில் மீன் பிடித்தொழில் கடந்த சில தினங்களாகப்பாதிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடிப்படகுகளில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களையும் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்களையும் இயக்குவதற்குத் தேவையான மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதனால் மீனவர்கள் இவற்றை கள்ளச்சந்தையில் அதிகவிலை கொடுத்தே வாங்க வேண்டியுள்ளதாம்.

அத்துடன் சில பின்தங்கிய மீனவப் பிரதேசங்களில் எரிபொருட்களை தற்பொழுது பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்பட்டுவருகின்றது.

மேலும் பிடித்தமீனை சந்தைப்படுத்துவதற்கு எரிபொருட்தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்துச் செலவாக அதிகரித்த தொகையை வழங்கவேண்டிய நிலைக்கும் மீனவர்கள் உள்ளாகி வருகின்றனராம்.

## பெண்களுக்கு விவசாயப் பயிற்சி விண்ணப்பங்கள் கோரல்

திருநெல்வேலி மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பெண்களுக்கான புதிய விவசாய பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விவசாயம், மிருகபரிபாலனம், மனையியல், தையல் போன்ற சுயதேவைப் பூர்த்திக்கான பயிற்சிநெறிகள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படவுள்ளன. நாற்பது யுவதிகள் இப்பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இப்பயிற்சி நெறிகளுக்கு படித்த யுவதிகள் விண்ணப்பிக்கலாம். ஆகஸ்ட் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் பண்ணை முகாமையாளர், மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டுமென விவசாய பயிற்சி நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்பொழுது நடைபெற்று வரும் பயிற்சிநெறிகள் இம்மாதம் இருபத்திமூன்றும் திகதி முடிவடையவுள்ளன.

### திருமலையிலிருந்து...

மாவை இங்கு எடுத்துவர கட்டளை வழங்கப்பட்டுள்ளது. இது தவிர தேவையை பொறுத்து மேலும் கோதுமை மாவை இங்கு எடுத்துவர தனியார் வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கப்படுமென உணவுத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வர்த்தக நிலையங்களுக்கு ஒரு கிலோ மாவை ஏழு ரூபா விலையில் உணவுத் திணைக்களம் திருகோணமலையில் வைத்து வழங்கிவருகின்றது. இவர்கள் யாழ். மாவட்டத்தில் ஒருகிலோவை எட்டு ரூபாவுக்கு மேற்படாதவிலையில் விற்றல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது

### எரிபொருள்...

ணையாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இதனையடுத்து யாழ்ப்பாணப்பகுதியில் கறுப்புச் சந்தையில் எரிபொருட்களின் விலை குறைவதோடு எரிபொருளுக்கான தட்டுப்பாடும் நீங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

### வேலைக்கு...

இடங்களில் ஜே. வி. பி. இயக்கத்தினர் மீது ஆயுதப் படையினர் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகளால் நான்கு படையினரும் இரு ஜே. வி. பியினரும் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது. ஆயுதங்களும் சில கைப்பற்றப்பட்டுள்ளன-

### சார்க் அமைப்பில்...

கார அமைச்சர் நேற்று முன்தினம் இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்திய தலைவர்களுடனும் பேச்சுகள் நடாத்தியது குறிப்பிடத்தக்கது.

சார்க் அமைப்பின் எதிர்காலம் குறித்து தமது நாடு கவலை கொண்டுள்ளதாக பங்களாதேஷ் அமைச்சர் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுகளின் போது தெரிவித்தார்.

### அரச...

துக்கு ஏற்ப மாற்றியமைப்பது எனவும் சகல ஆஸ்பத்திரிகளுக்கும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் தாதிமாரை நியமிப்பது எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

### யாழ், நகர...

சபைய சகல ஊழியர்களுக்கும் ஞாயிறு, போயாதினங்களில் விடுமுறை வழங்கப்படல் வேண்டும். சனிக்கிழமைகளில் ஐந்து மணித்தியால வேலை மட்டும் வழங்கப்படல் வேண்டும். மேலதிக வேலைக்கு மேலதிக நேர ஊதியம் வழங்கப்படல் வேண்டும்.

ஊழியர்களுக்கு விபத்து நிதி திட்டம் ஏற்படுத்தப்படுவதுடன் சேமலாபநிதி, நம்பிக்கை நிதி என்பனவும் கட்டப்படல் வேண்டும்.

இந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வேலை கொள்வோருக்கு குறிப்பிட்டகால அவகாசம் வழங்குவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### வேட்டுக்கள்...,

பட்டனர். துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதும் மக்கள் தம்மையே மறந்து அனைவரும் முருகனை போற்றி வணங்கி, புகழ் மாலை பாடினர்.

முருகனின் அருள்வன்மையால் ஆலயத்தில் குழுமியிருந்த எவருக்கும் எந்த இன்னல்களும் ஏற்படாது வேட்டைத் திருவிழா இனிது நடந்தேறியது.

## புலோலியில் மோதல்கள்

(உடுப்பிட்டி)

புலோலியில் சாரையடிப் பகுதியில் நேற்று முன்தினம் பகல் மோதல்கள் இடம்பெற்றன. இதனால் ஷெல் மற்றும் துப்பாக்கிச்சூட்டு சத்தங்கள் சரமாரியாக கேட்டன.

இதனால் மின்கம்பிகள் அறுந்த நிலையில் வீதிகளில் காணப்பட்டன. இப்பகுதியில் வீதிகள் வெறிச்சோடி காணப்பட்டன.

போக்குவரத்துகளும் சில மணிநேரம் மந்திகைவரையும் நடைபெற்றன. சேத விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

## சிறிய செய்திகள்

### சடலம் அடையாளம் காணப்பட்டது

(வவுனியா)

முல்லைத்தீவு வீதியில் கடந்த புதன்கிழமை சூட்டுக்காயத்துடன் மரத்தில் தொங்கிய இளைஞரின் சடலம் புளியங்குளம் பழையவாடி மோகன் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

### பல்கலைக்கழகம் அறிவிப்பு

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் கலை வர்த்தக முகாமைத்துவ பீடம், கலாசார கற்கை பீடம் எதிர்வரும் பதினொராம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### பருத்தித்துறையில் சத்தங்கள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் நேற்றுக் காலை திடீரென துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் கேட்டன. இதனால் இப்பகுதியில் நேற்று பதற்றமும் அமைதியின்மையும் ஏற்பட்டது.

### செட்டித்தெரு சம்பவம்

நல்லூர் செட்டித்தெருவில் நேற்று இடம்பெற்ற சம்பவத்தையடுத்து நேற்று அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டது. இதனால் பருத்துத்துறை வீதி வழியான வாகனப் போக்குவரத்துக்கள் வேறு மார்க்கமாக திசை திருப்பப்பட்டு நடைபெற்றது.

இதேவேளை கொக்குவில் உள்ளிட்ட அதன் அயல் பகுதிகள் நேற்றுக்காலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

### தரகர்கள் தொல்லை

யாழ். செயலக சுற்றுவட்டத்தில் தரகர்களின் தொல்லையை ஒழிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இப்பகுதியில் படிவங்களை நிரப்பிக் கொடுக்கும் தொழிலில் ஈடுபட்டுவந்தோர் இதுவிடயமாக எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஆசிரியர் கலாசாலை மூடப்படவில்லை

நாட்டிலுள்ள பாடசாலைகளின் இரண்டாம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள போதிலும் கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் முன்னர் அறிவிக்கப்பட்டது போல் இம்மாதம் இருபத்தியோராம் திகதியே மூடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஏழாலையில் ஷெல் அடி

ஏழாலை பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதே போன்று கடந்த வியாழக்கிழமை இரவும் இப்பகுதியில் ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன இதனால் ஏழாலைப்பகுதியில் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

### சேதம்

(பருத்தித்துறை)

புலோலியில் நடைபெற்ற மோதல் சம்பவங்களையடுத்து பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப - அலுவலகமும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இந்தஉப அலுவலகத்தின் இலவச சித்த ஆயுர்வேதப் பகுதியே சேதமடைந்துள்ளது அலுவலகத்தில் இருந்த வருமான மேற்பார்வையாளர் திரு. பீற்றர் பிலிப்நேரி கையில் காயமடைந்துள்ளார்.

### நீரில் மூழ்கி மரணம்

மீன் பிடித் தொழிலுக்காக கொழும்புத்துறை கடலுக்குச் சென்ற சத்திவேல் (47) என்ற நபர் நீரில் மூழ்கியதால் மரணமடைந்துள்ளார் இவர் யாழ் பீச் றோட்டைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

### பல்கலைக்கழக மாணவன் விடுதலை

கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மூன்றும் வருட மாணவன் மொருயஸ் நேற்று முன்தினம் இரவு விடுதலை செய்யப்பட்டார்.

இவரின் விடுதலையை வலியுறுத்தி பல்கலைக்கழக கலைப்பீட மூன்றும்வருட மாணவர்கள் கடந்த ஒருவார காலமாக தமது விரிவுரைகளை பகிஷ்கரித்தனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62 ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 09-07-89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.